

கல்கி



KALKI மே 20, 1951 4 அணா



வாழைப்பழங்கள் ஊட்டமளிக்கின்றன...

வாழைப்பழம் தேக புஷ்டியும், சக்தியும் அளிக்கிறது. அதில் தேக சௌக்கியத்திற்கு அவசியமான உணவுசத்துக்கள் இருக்கின்றன. வெகு எளிதில் கிடைப்பதால் நீங்களும் உங்கள் குழந்தைகளும் தலைக்கு சுமார் மூன்று வாழைப்பழங்களை ஒவ்வொரு நாளும் சாப்பிடலாம். ஆனால், பூரண சுகத்திற்கும், பலத்திற்கும் நமக்கு சமநிலை உணவு தேவை என்பதை நாம் உணரவேண்டும். அதாவது முக்கியமான ஐந்து வகை உணவு சத்துக்கள் சரிவர நம் தினசரி ஆகாரத்தில் இருக்கவேண்டும். இவ்வகைகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு உணவுகளை ஒவ்வொரு நாளும் நாம் உட்கொண்டால், இது எளிதில் கைகூடும். (1) விடமின்களுக்கு: பழங்கள், காய்கறிகள் (வேகவைக்காதவை சிறந்தது), ஈரல், பால். (2) தாதுப்பொருள்களுக்கு: பால், முட்டை, பாலேடு, மீன், பசலைக்கீரை. (3) புரதசத்துக்கு: பச்சைக் காய்கறிகள், பால், பாலேடு, கொட்டைகள், முட்டை, இறைச்சி, மீன், பருப்புகள். (4) மாவுசத்துக்களுக்கு: எல்லாவித தானியங்கள், அரிசி, உருளைக்கிழங்கு, வாழைப்பழங்கள். (5) கொழுப்புக்கு: கொட்டைகள், ஆட்டி எடுத்த எண்ணெய், கொழுத்த இறைச்சி, மீன், சுத்தமான சிறந்த கொழுப்புகளில் ஒன்றான டால்டா. ஆரோக்கியமும் ஊட்டமும் அளிக்கும் டால்டாவை ஒவ்வொரு சமையலுக்கும் உபயோகிக்கலாம். சீல் செய்த டின்களில் விற்கப்படுவதால் அது எப்பொழுதும் சுத்தமாகவும், புதிதாகவும் இருக்கிறது.



பழங்கள் கிடைக்காவிட்டால் யாது செய்வது?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 153-172 TM

டோரிக்

உயர்ந்த ரக

பேனாக்கள்

ஒன்றின் விலை ரூ. 6.



1. இதே அளவுள்ள இதர பேனாவை விட அதிகமான மசி கொள்ளும்.
2. மை கசியா உத்திரவாதம்.
3. கெட்டித் தங்கம் பூசிய இருடியம் தோய்த்த உறுதியான நிப்பு.
4. அநேக வித கவர்ச்சிகரமான கலர்கள்.
5. ஓர் டோரிக் தயாரிப்பு.

உங்களுக்கு "டோரிக்" பேனாவினால் ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டால் திருப்பி அனுப்பி இலவசமாக மாற்றுப் பேனாவை பெறுங்கள்.



டோரிக் ப்ராடக்ட்ஸ்

பாம்பே மியூச்சுவல் பில்டிங்,


ஹார்ன்பி ரோடு, பம்பாய்

NAS 675

மே மாதம்
17ந்
தேதி முதல்

சென்னை
பிராட்வே - கெயிட்டி
& ஸரஸ்வதி
மற்றும் தமிழ் நாட்டின்
எல்லா முக்கிய இடங்களிலும்

B.S. சரோஜா
கிக்தறிச்சி
C.R. ராஜகுமாரி
நடித்த



K & K புரொடக்ஷன்ஸ்
பிச்சைக்காரி
ஜீவித நௌகா
தமிழ்

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை உள்பட மலேயா & சிலோன் :
நாராயணன் & கம்பெனி, லிமிடெட், சென்னை

வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு: ஸ்வாமி பிக்சர்ஸ், வேலூர்
மதராஸ் : மூர்த்தி பிக்சர்ஸ், சென்னை
திருச்சி-தஞ்சாவூர்: ஜம்பு-பிக்சர்ஸ், திருச்சி
கோயமுத்தூர் : காமதேனு பிலிம்ஸ், கோயமுத்தூர்
பம்பாய்: அல்லையட் ஏஜென்ஸீஸ், பம்பாய்
மைசூர் சமஸ்தானம் : பிரகாஷ் பிக்சர்ஸ், பெங்களூர்
கேரளம் : ஸ்ரீ பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்
சேலம்: சேலம் சங்கர் பிலிம்ஸ் லிட்., சேலம்

தெலுங்கு "ஜீவித நௌகா" வினியோகிப்பவர்கள் :
K. & K. புரொடக்ஷன்ஸ் & திருமலை பிக்சர்ஸ்
12, கிருஷ்ணராவ் நாயுடு தெரு, தியாகராயநகர், சென்னை-17

எதிர்பாருங்கள்!
ஜீவித நௌகா
தெலுங்கு

பல வருஷங்கள் அவதி யுற்றாள்; பிறகு

முகப் பருக்கள் மறைந்தன

க்ருஷனின் உட்புற சிகிச்சையால்



அநேகவிதமான சரும வியாதிகளை, உட்புறச் சிகிச்சையினால் பூரணமாகக் குணப்படுத்த முடியும். ஸ்ரீமதி ப்ரேம்நாத் இவ்வுண்மையைக் கண்டுபிடிப்பதற்கு முன் 23 வருஷங்கள் கஷ்டப்பட்டாள். மிகுந்த நன்றியறிதலுடன், கீழ்க்கண்ட கடிதத்தை எழுதியுள்ளார்.

“எனது முகம் முழுதும் சிறு சிறு வெண்புள்ளிகளால் (பருக்களால்) 23 வருஷங்கள் சிரமமுற்றேன். அடிக்கடி வைத்தியம் செய்து கொண்டும், பருக்கள் முகமெங்கும் வியாபித்ததே தவிர யாதொரு குணமும் காணப்படவில்லை. விதவிதமான பூச்சு மருந்துகளும் பலனளிக்கவில்லை. எல்லோரும் “உன் முகத்தில் இருக்கும் பருக்கள் என்ன?” என்று அடிக்கடி கேட்பதால் அவர்களது மத்தியில் நின்று பேசவே பயமாயிருந்தது. க்ருஷனைப் பற்றி நிறையப் படித்திருந்ததனால் அதையும் உபயோகித்துப் பார்க்கத் தீர்மானித்தேன். தற்சமயம் மூன்று மாத உபயோகத்திற்குப் பின் நிச்சயமாகவே எனது முகத்தில் யாதொரு புள்ளிகளும் தென்படவில்லை என்று சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். உட்புறச் சிகிச்சை வேண்டுமென்று எனக்கு இதுவரை யாரும் தெரிவிக்கவில்லை. இதற்கு மேல் என்னால் வந்தனம் தெரிவிக்க இயலவில்லை.”

உடலின் உட்புறத்து, மந்தமான அவயவங்களால் வெளித்தள்ள முடியாத விஷப் பொருள்களான இரத்தத்தின் அசுத்தப் பொருள்களே சகல சருமக் கோளாறுகளுக்கும் காரணம். உட்புற சுத்தத்தை நிரந்தரமாக வைப்பதற்கு “க்ருஷனே” இயற்கையின் ஒரு சிறந்த சாதனம். உடலிலுள்ள ஈரல், மூத்திரக் காய்கள், குடல்கள் இவை சரிவர வேலை செய்து ரத்தத்திலுள்ள அசுத்தங்கள் சரிவர வெளியே தள்ளப்படுவதற்கு “க்ருஷனி”லுள்ள ஆறுவித லோக தாதுக்கள் பெரிதும் உதவுகின்றன.



எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

KSID. 13


வின்கோலா
ஒரு சிறந்த டாணிக்
விடாமின் "B" யுடன் கூடியது
A SPW PRODUCT
நோய்க்குப் பின் விரைவில் தேக வலு கூட்டவும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் ரத்த சோகைக்கும், பிரஸவத்திற்குப் பின் அபரிமித போஷாக்களிக்கவும் அதிக மூளை வேலையினால் ஏற்படும் ஞாபகமறதியைப் போக்கவும் ஓர் சிறந்த டானிக்.


முக வசீகரத்திற்கு
ரெமி
ஸ்னோ
Remy SNOW
Distributors:
A. V. R. A. & Co.,
45, Thambu Chetty Street, Madras-1 :: 6, Lohar Chawl, Bombay-2



இருக்கமுடியுமா?
காதல் தெரியாத வாலிபன்!
தமையனைத் தெரியாத தங்கை!
இருக்கிறார்கள்!
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
ஓர் இரவு
....சென்னை....
பாரகன் ★ கிரௌன்
லக்ஷ்மி ★ திருமகள்
மற்றும்
60 இடங்களில்.
கதை வசனம்: C.N. அண்ணாதுரை, M.A.,
டைரக்ஷன்: P. நீலகண்டன்....
AVM
புரொடக்ஷன்ஸ்

பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 10 | 1951 மே 20 | கர ஹு
இதழ் 42 | | வைகாசி 6உ

அட்டைப்பட விளக்கம்

தேக உறுப்புக்களில் எல்லாம் சிறந்த உறுப்பு எது என்று ஆராய்வோமானால் கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்ற முடிவுக்கு வருவோம். ஒரு பெண்ணுக்குத் தன் கணவனைவிட நெருங்கிய உறவு இல்லை. புத்திசாலியான புதல்வனைவிடச் சிறந்த பொருளில்லை. ஆனால் தாயாரைப் பற்றி எண்ணும்போது தான்......ஆகா!......

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை, மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை, ஈன்றாளோடு
எண்ணக் கடவுளும் இல். —(நான்மணிக் கடிகை)


கடவுளின் கருணையையும் மிஞ்சியது தாயின் அன்பு! தாயை நினைத்து விட்டால் கடவுள் எம்மாத்திரம் என்று நினைத்து, "ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்லை!" என்று கவிஞர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.


இரண்டாவது உலக யுத்தம், நம் தேசத்தில் ஏற்பட்ட பிரிவினை, உணவுப் பஞ்சம் ஆகியவற்றின் காரணமாக பொதுவாக இன்று நம் மக்களிடையே அன்பு, ஈகை, தயை, தாட்சண்யம், தெய்வபக்தி எல்லாம் வெகுவாகக் குறைந்து விட்டன. "காலம் இப்படி மாறி விட்டதே! இது எதில் கொண்டு போய் விடுமோ! எப்படிப்பட்ட பயங்கர உற்பாதங்கள் நேருமோ!" என்று நல்லவர்கள் பயப்படுகின்றனர்.

இந்தக் காரிருளிலும் ஒரு மின்னொளி தோன்றத்தான் செய்கிறது. அதுதான் தாய்த் தத்துவம். கடவுளிடம் மக்களுக்கு நம்பிக்கை குறைந்தாலும், கடவுளைவிட அன்பில் மிஞ்சிய தாயிடத்தில் நம்பிக்கை குறைய முடியாது!

ஆகவே, தாம் பெற்றெடுத்த புதல்வர்களையும் புதல்விகளையும் வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும், மெய்யர்களாகவும், கருணையாளர்களாகவும், லக்ஷ்ய புருஷர்களாகவும் செய்ய வேண்டிய பொறுப்பு இன்றையத் தாய்மார்களுக்கு அதிகம். அவர்களால் செய்யவும் கூடும். அதனால்தான் நமது சித்திரக்காரர் இளம் தாயையும் அவள் பெற்றெடுத்த அருமை மாணிக்கத்தையும் இந்த இதழ் அட்டையில் சித்திரித்திருக்கிறார்.







ஆண்ட்ருஸ் பானத்தை அதன் "சலசலப்பு" சப்தத்துடன் பருகுவதே ஒரு ஆனந்த மலர்ச்சிதருவது. ஆனால் இத்துடன் நில்லாது அதன் மிருதுவான மலமிளக்கும் தன்மை உட்புற சுத்தம் அளித்து சுருசுருப்பாக விளங்கச்செய்யும். ஆண்ட்ருஸ் வாயை சுத்திகரித்து. வயிற்றை துப்புரவாக்கி, குடலை வலுப்படுத்தி முடிவில் சுகமான மலப் பிரவிர்த்தி உண்டாக்கும். தினத்தில் எந்த சமயத்திலும். புத்துணர்ச்சிபெற விரும்பினால், உடனே ஒரு தேக்கரண்டி ஆண்ட்ருஸை ஒரு கோப்பை குளிர்ந்த ஜலத்துடன் பருகவேண்டியதுதான்.

ANDREWS LIVER SALT

ஆண்ட்ருஸ் லிவர் ஸால்ட்

மிகச் சிறந்த மலமிளக்கி.

K.187/508

கல்கி

ராஜரிஷி விழுந்தார்!

காங்கிரஸ் அக்கிராசனர் ராஜரிஷி டாண்டனுக்கும் காங்கிரஸ் மாஜி அக்கிராசனர் மகா ரிஷி கிருபளானிக்கும் நடந்த கடிதப் போக்குவரவு வெளியாகிவிட்டது.

இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் பத்திரிகைகள் மேற்படி கடிதங்களை முழுவதும் வெளியிடவில்லை. மிகச் சுருக்கித்தான் வெளியிட்டிருக்கிறார்கள்.

வெளியானதைப் படித்து முடிக்கும்போது, "போதும், போதும்! இவ்வளவு விரிவாக வெளியிட்டதே அதிகம்!" என்று தோன்றுகிறது.

ராஜரிஷிக்கும் மகா ரிஷிக்கும் நடந்த கடிதங்களில் இரண்டு விஷயங்கள் முக்கியமாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

1. காங்கிரஸ் தேர்தல்களில் நடந்த ஊழல்கள்.
2. காங்கிரஸிற்குள் ஜனநாயக முன்னணி அமைப்பு.

முதல் விஷயம், மகா ரிஷியின் புகார்; இரண்டாவது விஷயம், ராஜரிஷியின் மனக்குறை.

"சென்ற வருஷத்துக் காங்கிரஸ் தேர்தல்களில் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. காங்கிரஸ் அமைப்புகளில் அதிகாரம் வகித்தவர்கள் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். இதைக் குறித்து மாஜி ஹைகோர்ட் நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தவேண்டும். அப்போதுதான் காங்கிரஸ் ஸ்தாபனம் தூய்மை அடையும்" என்பது ஆச்சாரிய கிருபளானியின் கோரிக்கை.

"பழைய குப்பைகளைக் கிளறிக் கொண்டிருப்பானேன்? இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பார்க்கலாம்!" என்பது அக்கிராசனர் டாண்டனின் பதில்.

பழைய குப்பைகளைக் கிளறி அவற்றை நன்றாகக் கூட்டித் தள்ளிக் குப்பைக் குழியில் போட்டு மூடினாலன்றி, புதிய தூய்மை எப்படி ஏற்படும் என்று டாண்டன் சொல்லவில்லை.

"காங்கிரஸ் அமைப்பில் புகுந்துள்ள குற்றங்களை நாம் அறிந்துதானிருக்கிறோம். ஆனால் காங்கிரஸைப் பலவீனப்படுத்தும் முறையில் அவற்றைக் களைய முயற்சிக்கக் கூடாது. இனிக் காங்கிரஸ் தூய்மையாகவும் திறமையாகவும் நடக்கக்கூடிய வழியைக் கைப்பற்ற வேண்டும்" என்று ராஷ்டிரபதி சொல்லுகிறார்.


இதற்குப் பொது மக்கள் செய்துகொள்ளக் கூடிய பொருள் ஒன்றுதான். அதாவது, குற்றங்களை மூடி மெழுகிவிட வேண்டும் என்பதுதான்!

* * * *

ராஜரிஷி டாண்டன் மகா ரிஷி கிருபளானிக்கு எழுதிய இன்னொரு கடிதத்தில், "சென்ற வருஷத்துக் காங்கிரஸ் தேர்தல்களில் ஊழல்கள் நடந்திருப்பது உண்மைதான். ஆனால் அவற்றை விசாரிப்பதற்குத்தான் தேர்தல் கமிட்டிகள், விசாரணை டிரிபுனல்கள்,—ஆகியவை இருக்கின்றனவே? தனியாக விசாரணை ஏன் நடத்த வேண்டும்?" என்று கேட்கிறார்.

மேற்படி தேர்தல் கமிட்டிகள், டிரிபுனல்கள் எல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களால் அமைக்கப்பட்டவை. அவர்கள் விருப்பத்தின்படி தீர்ப்புச் சொல்லவே ஏற்பட்டவை என்ற அபிப்பிராயம் பரவும்படி அந்த ஸ்தாபனங்கள் பல காரியம் செய்து வருகின்றன.

இப்படியும் நடக்கலாம் !




4
ஆனால் யார் பிரதம மந்திரியாக இருப்பது என்ற பிரச்னை எழுகிறது..!
நான்தான்!
நானே தான்!
நான்!
நான்!
நான்!!!
5 ... கடைசியில் அவர்கள் எல்லோரும் ஒரு முடிவுக்கு வருகின்றனர்...
6 ... "ஜனாதிபதியவர்களே, பண்டித நேருஜியே பிரதம மந்திரியாக இருக்கட்டும்.."
SHASTRY

ஒரு ஜில்லா டிரிபுனல் ஒரு தேர்தல் தகராறில் இந்த வாரம் ஒரு தீர்ப்புச் சொல்லுகிறது. உடனே மேலேயிருந்து தாக்கல் வருகிறது. அடுத்த வாரத்தில் அதே ஜில்லா டிரிபுனல் கூடிச் சென்ற வாரத் தீர்ப்பை மாற்றிவிட்டு அதற்கு நேர் மாறான தீர்ப்பைச் செய்கிறது!— இம்மாதிரி சென்ற மாதத்திலே கூட ஒரு சம்பவம் இந்தச் சென்னை மாகாணத்தில் நடந்தது.

அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னால் டிரிபுனல்களை மாற்றி அமைக்கப் போவதாகப் பயமுறுத்துகிறார்கள். பயமுறுத்தலைச் சில சமயம் காரியத்திலும் நிறைவேற்றுகிறார்கள்!

இந்த இலட்சணத்தில் ராஷ்டிரபதி டாண்டன் தேர்தல் கமிட்டிகளையும் டிரிபுனல்களையும் கூட்டிக் காட்டுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அனர்த்தம் தான்! அதாவது "ஊழல்கள் வாழ்க!" என்று கோஷிப்பதைப் போலத்தான்!

* * * *

ஸ்ரீ காந்திமகான் ஜீவிய வந்தராயிருந்த போது சிற்சில சமயம் காங்கிரஸிற்குள் ஊழல்கள் புகப் பார்த்தன. அப்போதெல்லாம் காந்தி மகாத்மா ஜனங்களைத் தூக்கி வாரிப் போடச் செய்யும் காரியம் ஏதேனும் ஒன்று செய்வார். ஒரு சமயம் "காங்கிரஸில் நாலணா அங்கத்தினராகக் கூட நான் இருக்க மாட்டேன்" என்பார் இன்னொரு சமயம் "இருபத்தொரு நாள் உண்ணாவிரதம் இருப்பேன்!" என்பார். அல்லது மக்களையும் தலைவர்களையும் தியாகப் பாதையில் திருப்பும் சத்தியாக்கிரஹ இயக்கம் ஒன்றைத் தொடங்குவார். இதனாலெல்லாம் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஒரு குலுக்குக் குலுக்கி ஒரு ஆட்டம் ஆட்டி மாசுகளைப் போக்கிப் பாசியைத் துடைத்துத் தூய்மைப் படுத்துவார்!

மகாத்மா ஒருவராகச் செய்து கொண்டிருந்த அந்தத் திருப்பணியை "நாங்கள் பலர் ஜனநாயக முன்னணியின் மூலம் செய்யப் போகிறோம்" என்று கிருபளானி—கித்வாய் கோஷ்டி கூறியது.

அந்தத் திருப்பணியைச் செய்ய இவர்கள் எவ்வளவு தூரம் தகுதி வாய்ந்தவர்கள் என்பதும், இவர்களால் செய்ய முடியுமா என்பதும் சந்தேகம். ஆனால், அது நல்ல நோக்கம் என்பதை ஒப்புக் கொண்டே தீர வேண்டும்.

எனினும், ராஷ்டிரபதி டாண்டனும் மற்றத் தலைவர்களும் "உங்கள் நோக்கம் எதுவானாலும் சரி; காங்கிரஸுக்குள் தனி கோஷ்டி ஏற்படுத்துவதினால் காங்கிரஸ் ஸ்தாபனம் பலவீனம் அடையும்" என்று வற்புறுத்தினார்கள்.

கிருபளானி—கித்வாய் எடுத்துக் காட்டியபடி காங்கிரசில் ஊழல்கள் இருக்கின்றன என்பதை நேருஜி ஒப்புக் கொண்டதாகவும் அவற்றைக் களைந்து காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் புனிதப்படுத்த வேண்டிய அவசியத்தையும் ஒப்புக் கொண்டதாகவும் அறிகிறோம். இதைப் பகிரங்கமாவே நேருஜி பல பொதுக் கூட்டங்களில் வெளியிட்டிருப்பதால் அதில் வியப்பு ஒன்றும் ஏற்படவில்லை.

ஆனால் ஜவாஹர்லால்ஜியும் "காங்கிரஸுக்குள் ஜனநாயக முன்னணியும் தனியாக இருப்பதால் காங்கிரஸ் பலவீனந்தான் அடையும்!" என்று சொன்னதாகத் தெரிகிறது.

"தாங்களும் சேர்ந்து இப்படிச் சொல்வதால் ஜனநாயக முன்னணியைக் கலைத்தே விடுகிறோம்!" என்று கிருபளானி—கித்வாய் கடைசிக் கடிதத்தில் எழுதி யிருக்கிறார்கள். அப்படியே காரியத்திலும் செய்து விட்டார்கள்.

காங்கிரஸ் ஒற்றுமையைக் குலைத்தார்கள் என்றோ, காங்கிரஸைப் பலவீனப் படுத்தினார்கள் என்றோ அவர்களை இனி யாரும் குறை சொல்வதற்கில்லை.

மொத்தத்தில் ராஜரிஷி டாண்டன் அவர்களுக்கும் மகாரிஷி கிருபளானி அவர்களுக்கும் நடந்த கடிதப் பரிவர்த்தனை விவரங்களைப் படிக்கும்போது, "ராஜரிஷி டாண்டன் தமது உன்னத பதவியிலிருந்து நழுவி விழுந்து விட்டார்!" என்றுதான் முடிவு கட்டவேண்டி யிருக்கிறது.

திண்டுக்கல்லில் வைகை ஆறு!

திடுக்கிடக்கூடிய செய்திதான்: ஆனால் அதிகமாகத் திடுக்கிட்டுவிட வேண்டாம்!

முன்னொரு காலத்தில் இந்தியா தேசம் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் மாதம் மும்மாரி பொழிந்து சுபிட்சமா யிருந்தபோது, மிதவாதிகள் என்ற ஒரு கூட்டத்தார் இருந்தனர். அவர்களை மிதானக் கட்சியினர் என்றும் சொல்லுவதுண்டு. வெகுகாலம் காங்கிரஸ் மகாசபையே இவர்களுடைய ஆதீனத்தின் கீழ் இருந்தது.

இந்த மிதவாதக் கட்சியின் மகாநாடு ஒன்று ஒரு சமயம் திண்டுக்கல்லில் நடந்தது. கடுங் கோடை காலம். வெய்யிலின் கொடுமை

தாங்க முடியவில்லை. தாகத்தினால் நா வறண்டது. போதிய தண்ணீர் குடிப்பதற்குக் கிடைக்கவில்லை. குடிப்பதற்கே தண்ணீர் போதவில்லையென்றால், குளிப்பதற்கு எங்கே போவது!

ஆகவே, மகாநாட்டில் மற்றப் பெரிய அரசியல் தீர்மானங்கள் எல்லாம் நிறைவேறிய பிறகு,—அகில இந்திய, அகில உலகப் பிரச்னைகளையெல்லாம் தீர்த்துக் கட்டிய பிறகு, உள்ளூர்ப் பிரச்னையைப் பற்றிய பின்வரும் தீர்மானம் வந்தது:—

"திண்டுக்கல்லில் தண்ணீர்க் கஷ்டம் அதிகமாக இருப்பதால், இனிமேல் வைகை ஆறு திண்டுக்கல் ஓரமாக ஓடவேண்டியது!"

முறைப்படி தீர்மானத்தைப் பிரேரேபித்து, ஆமோதித்து, பிரசங்கமாரி பொழிந்தார்கள்.

"வைகை ஆற்றில் வருஷத்தில் பத்து மாதம் தண்ணீர் வருவதில்லையாதலால், வைகை ஆற்றுக்குப் பதிலாகக் காவேரி நதி திண்டுக்கல் ஓரமாக ஓட வேண்டும்" என்று ஒருவர் திருத்தப் பிரேரணை செய்தார்.

காவேரி வேறு ஜில்லாவைச் சேர்ந்த நதியாகையால், அதை இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை ஒருவர் கிளப்பினார். திருத்தப் பிரேரணை கொண்டு வந்தவர் அதை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

ஆகவே, "வைகை நதி திண்டுக்கல் ஓரமாக ஓட வேண்டும்" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது!

• • •

ஓமந்தூரில் சென்ற மாதக் கடைசியில் நடந்த ஒரு கூட்டத்தைப் பற்றிய செய்தி நமக்கு மேற்படி தீர்மானத்தை நினைவூட்டியது.

அந்தக் கூட்டத்தில் நடந்ததைப் பற்றி முதலில் சில செய்திகள் வெளியாயின. அவற்றுக்கு மறுப்புக்களும் வெளியாயின.

"செய்திகளையோ, மறுப்புக்களையோ நம்ப வேண்டாம். நடந்ததை நான் அதிகார பூர்வமாக வெளியிடப் போகிறேன். ஆகையினாலே அறிக்கை வரும் வரையில் பொறுத்திருங்கள்!" என்று ஓமந்தூரார் ஒரு குட்டி அறிக்கை வெளியிட்டார். அதிகார பூர்வமான ஓமந்தூராரின் அறிக்கையை எதிர்பார்த்து உலகம் காத்துக் கொண்டிருந்தது.

கடைசியில் இரண்டு வாரத்துக்குப் பிறகு அந்த அறிக்கை வெளி வந்தது.

அதிலிருந்து ஓமந்தூரில் கூடிய தலைவர் இல்லாத கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியதாகத் தெரிந்தது.

அந்தத் தீர்மானத்தின் கருத்து இதுதான்:—

"இனிமேல் காங்கிரஸ் ஸ்தாபனமானது ஒற்றுமையாகவும், பரிசுத்தமாகவும், ஊழல் இல்லாமலும், குற்றம் குறை இல்லாமலும் நடந்து கொள்ள வேண்டியது!"

தீர்மானம் பிரமாதமாக அமைந்திருக்கிறது அல்லவா! ஆனால் ஓமந்தூரில் கூடியவர்கள் மேற்படி தீர்மானம் நிறைவேற்றியதோடு நின்றுவிடவில்லை. அதைக் காரியத்தில் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி ரெட்டியார் அவர்களைக் கேட்டுக் கொண்டுதான் கலைந்து போனார்கள்.

"ஆகையினாலே, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றித் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு ஒரு கடிதம் எழுத யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்று ஓமந்தூரார் தமது அறிக்கையை முடித்திருக்கிறார்.

ஓமந்தூரார் மேற்படி விஷயமாக யோசித்துக் கடிதம் எழுதச் சில வார காலம் ஆகும். சாதாரணமாகவே தபால்கள் தாமதப்படும் காலம் இது. ஓயாமல் சுற்றுப் பிரயாணத்தில் இருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரை ஓமந்தூராரின் கடிதம் போய்ப் பிடிக்கச் சில காலம் ஆகும். அதைப் படித்ததும் காங்கிரஸ் தலைவர், "காங்கிரஸைப் பரிசுத்தப் படுத்துவது தானே! செய்து விட்டால் போகிறது!" என்று பதில் எழுதுவார். அது ஓமந்தூராரிடம் சேர இன்னும் சில காலம் ஆகும்.

அதற்குள்ளே கலியுகம் முடிவடைந்து விடும். ஆகையினாலே ஓமந்தூர்த் தீர்மானம், தீர்மானமாகவே இருந்து விடும்.

• • •

உண்மை என்னவென்றால். ஓமந்தூரில் அன்று வந்து கூடியவர்களிடம் ஓமந்தூர் திரு ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது.

"இப்படித்தான் நம்மை இவர்கள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். தேர்தல் கமிட்டியில் ஒரு ஸ்தானம் கொடுப்பதாகச் சொன்னால் உடனே போய் விடுவார்கள்!" என்பது அவருடைய எண்ணம்.

ஆகையினாலே ஓமந்தூர்க் கூட்டத்தின் பயனாகப் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டு விடாது என்று நாம் நம்பி யிருக்கலாம்.

சென்னையில் மர்ம மனிதர்!

இந்தியாவின் மர்ம மனிதர் சென்னைக்கு விஜயம் செய்யப் போகிறார் என்று தெரிந்தது. நகரெங்கும் ஒரே பரபரப்பா யிருந்தது.

சென்ற வாரத்தில் அந்த மர்ம மனிதர் வந்தார். அவர் முகமூடி போட்டுக்கொண்டிருந்தார்; வாய்ப்பூட்டும் போட்டுக் கொண்டிருந்தார்; காதிலே பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் தேசமெங்கும் புகழ்பெற்ற நம் சென்னைப் பத்திரிகையாளர்களிடம் அவருடைய ஜபம் சாயவில்லை.

முகமூடியைக் கிழித்தெறிந்தார்கள்; வாய்ப் பூட்டை உடைத்து விட்டார்கள்; காதில் இருந்த பஞ்சையும் எடுத்து விட்டார்கள்.

"நாங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும்!" என்றார்கள்.

"சரி, கேளுங்கள்!" என்றார் மர்ம மனிதர் கிருபளானி.

"நீங்கள் காங்கிரஸிலிருந்து விலகி விட்டீர்களா, இல்லையா!"

"விலகி விட்டேன்; ஆனால் இல்லை!"

"காங்கிரஸிலிருந்து விலகப் போகிறீர்களா, இல்லையா!"

"விலகினாலும் விலகுவேன்; விலகா விட்டாலும் இல்லை!"

"காங்கிரஸிலிருந்து விலகினால் தனிக் கட்சி அமைப்பீர்களா! மாட்டீர்களா!"

"அமைப்பேன்; ஆனால் மாட்டேன்!"

"புதிய கட்சிக்கு யார் தலைவர் என்று சொல்ல முடியுமா!"

"முடியும், ஆனால் சொல்ல முடியாது!"

"புதிய கட்சிக்கு ஒரு புதிய திட்டம் இருக்குமோ, இராதோ!"

"புதிய திட்டம் கண்டிப்பாக இருக்கும்; ஆனால் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை!"

"தேர்தலில் போட்டியிடுவீர்களா! மாட்டீர்களா!"

"போட்டியிடுவேன்; ஆனால் கொஞ்சம் சந்தேகம்."

"புதுக் கட்சியில் யார், யாரைச் சேர்த்துக் கொள்வீர்கள்!"

"சிலரைச் சேர்த்துக் கொள்வோம்; சிலரைச் சேர்த்துக் கொள்ள மாட்டோம்."

"மற்றப்படி எல்லாம் க்ஷேமந்தானே!"

"நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை!"

"நாங்கள் போய் வரவா!"

"யோசித்துச் சொல்லுகிறேன்!"

"தாங்கள் போய் வருகிறீர்களா!"

"இதற்குப் பதில் சொல்வதற்கில்லை!"

இம்மாதிரியாக நம் சென்னைப் பத்திரிகையாளர்கள் மர்ம மனிதர் ஆச்சாரிய கிருபளானியின் முகமூடியைக் கிழித்து, வாய்ப்பூட்டைத் திறந்து, சகல இரகசியங்களையும் வெளிப்படுத்தி விட்டார்கள்!

* * *


ஆச்சாரிய கிருபளானி நல்ல அறிவாளி, தியாகசீலர், காந்திஜியின் பக்தர் என்பதையெல்லாம் பற்றிச் சந்தேகம் கிடையாது. ஆனால் அவர் தம் மனதைத் தாம் அறிந்தவர் என்றோ, நிச்சய புத்தி உள்ளவர் என்றோ உறுதி கூற முடியுமா என்றால், அதைப்பற்றி நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லைதான்! இப்படிப்பட்டவர் ஒரு தனிக்கட்சி அமைத்துத் தலைவராயிருந்து நடத்த முடியுமா என்றால், அதுவும் சந்தேகத்துக்கு இடமானதே!

அப்படி ஆச்சாரிய கிருபளானி மனந் துணிந்து தம் தலைமையில் ஒரு தனிக் கட்சி அமைத்துக் கொண்டால், அதனால் பூகம்பம் முதலிய விபரீதம் எதுவும் ஏற்பட்டு விடாது என்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

நீலக் கடல் ஓரத்திலே

சௌராஷ்டிரப் பிரதேசத்திலே சென்ற பதினோராம் தேதி எழுந்த பேரொலி பாரத நாடு முழுவதும் பரவிப் பக்தகோடிகளுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. அங்கு பதினாயிரக்கணக்கான மக்கள் பரவசம் அடைந்து 'ஜே சோமநாத்!' என்று கோஷம் செய்தது இந்திய மகா ஜனங்களின் ஆத்மார்த்த நம்பிக்கையையும் தெய்வ பக்தியையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

சோமநாதர் ஆலயத்தின் வாசற்படி



நீலத் திரைக் கடல் ஓரத்திலே நின்று தவம் செய்யும் பகவதியைப் பற்றிக் கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார். ஆனால் பாரதநாட்டின் வடமேற்கு மூலையில் கடல் ஓரத்தில் நின்று தவம் செய்யும் பார்வதி தேவியைப் பற்றி யாரும் பாடவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பார்வதி சோமநாதர் ஆலயம் அன்னியர்களின் படையெடுப்புக்கு இலக்காகி அழிந்து போனதே அதற்குக் காரணம். அந்த ஆலயம் அழிந்து பத்து நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகியும் அதன் கீர்த்தியும் மக்களுக்குச் சோமநாதர் மீதுள்ள பக்தியும் அணுவளவும் குன்றவில்லை.

ஜனங்களை அடிமைப் படுத்தி அவர்களுடைய உரிமைகளை நசுக்கலாம்; ஆனால் அவர்களுடைய மனதில் பொங்கிக் கொண்டிருக்கும் சுதந்திர உணர்ச்சியை என்ன செய்ய முடியும்! அது போலவே ஜனங்களுடைய மதச் சின்னங்களை அழிக்கலாம்: ஆனால் அவர்களுடைய பக்தி உணர்ச்சியையும் தளரா நம்பிக்கையையும் எத்தனை யுகங்களாயினும் அழிக்கமுடியாது.

கொடியவர்களால் தகர்க்கப்பட்ட சோமநாதர் ஆலயம் இன்று மறுபடியும் உருவாகத் தொடங்கியிருப்பதே அதற்கு உதாரணம். சுதந்திர இந்தியாவாகிற திருக்கோயிலே நிர்மாணிப்பதில் வெற்றி பெற்ற தலைவர்களில் ஒருவரும் ஜனாதிபதியுமான பாபு ராஜேந்திர பிரசாத் அந்தப் புனித வைபவத்தை ஆரம்பித்து வைத்தது பொருத்தமான காரியம் அல்லவா!

தெய்வ தரிசனம்

ரா.கி.

2

சமீபத்திலே ஒரு நாள் நான் திருவள்ளுவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது, "என்ன, ஐயா, இப்படிக் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீரே?" என்று கேட்டேன். அவர் அச்சமயம் நூல் பஞ்சம் காரணமாகக் கைத்தறியைச் சும்மாப் போட்டு விட்டுச் "சத்தியாக்கிரஹம் செய்யலாமா? அல்லது மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி பிடிக்கலாமா?" என்று யோசித்துக் கொண்டிருந்தார். ஆகையால், நான் கூறியதற்குத் தவறாகப் பொருள் செய்து கொண்டு, "சேச்சே! கல்லைத் தூக்கிப் போடுகிறதாவது? அது யார் செய்கிற வேலை? மந்திரிகளின்மீது கல்லைத் தூக்கிப் போடுவது என்றால், அப்புறம், நாட்டிலே இருக்கிற பஞ்சமெல்லாம் போதாது என்று, கல்லுக்கும் பஞ்சம் வந்து விடுமே?" என்றார்.

"ஐயையோ! நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே? என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீர் என்றல்லவா சொன்னேன்!" என்றேன்.

"அடடா! கல்லுக்குக் காயம் பட்டு விட்டதோ!" என்றார் திருவள்ளுவர்.

"இல்லை இல்லை! உம்முடைய குறள் ஒன்றைப் பற்றிச் சொல்ல வந்தேன்.


'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்பதாக ஒரு குறள் பாடியிருக்கிறீர் அல்லவா? அதைத்தான் குறிப்பிட்டேன். ஒருவன் தோன்றும்போதே எப்படி ஐயா, புகழுடன் தோன்ற முடியும்? வில்லர் என்ன, நெப்போலியன் என்ன, ஹிட்லர் என்ன, மக் ஆர்தர் என்ன,—இப்படிப்பட்டவர்களெல்லாம் கூடப் பிறந்த பிறகு தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, அப்புறந்தானே வேட்டை நாய் ஆகியிருக்கிறார்கள்? பிறக்கும்போதே புகழுடன் பிறந்தவன் ஒருவனைப் பற்றித்தான் காவிய இதிகாசங்களிலேகூட நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். துரியோதனன் பிறந்தபோது பதினாயிரம் நரிகள் ஏக காலத்தில் சுருதி பேதம் செய்து ராகமாலிகை ஸ்வரம் பாடினவாம்! துரியோதனனைப்போல் எல்லாரும் பிறக்க முடியுமா? அல்லது பதினாயிரம் நரிகளைப் பிடித்து வந்து ஆர்கெஸ்ட்ரா சங்கீதம் பாட வைக்க முடியுமா? 'தோன்றுகிறபோதே புகழுடன் தோன்ற வேண்டும், இல்லாவிட்டால் தோன்றாமலே இருக்கவேண்டும்' என்றால், எப்படி அது சாத்தியம்? தோன்றாமலிருப்பதுதான் நம்முடைய வசத்தில் இருக்கிறதா?" என்று சரமாரியாகப் பொழிந்தேன்.


வள்ளுவர் திக்குமுக்காடிப் போனார். நல்ல வேளையாக அச்சமயம் வீதியில் "வடநாட்டுச் சுரண்டல் ஒழிக! தென்னாட்டுச் சுரண்டல் வாழ்க!" என்ற கோஷம் கேட்கவே, எங்கள் பேச்சும் அத்துடன் முடிந்தது.

* * *

பிறக்கும்போதே புகழுடன் பிறப்பது கடினமான காரியந்தான்; இல்லை என்று சொல்லவில்லை. பிறந்த பிறகு புகழ் பெறுவது இலேசான காரியமா? அதற்கும் எவ்வளவோ தடங்கல்கள் இருந்து தொலைகின்றன. சில பாக்கியசாலிகள் அத் தடங்கல்களை யெல்லாம் தாண்டிப் புகழ் பெறுகின்



ஸ்ரீ விபுலானந்த அடிகள்



தமிழ்த் திருவிழாவுக்காக அமைந்திருந்த விபுலானந்தர் பந்தலில் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

னர். 'பூத உடம்பு மாயினும் புகழுடம்பு மாயாத' சிரஞ்சீவிகளாகின்றனர். ஈழ நாட்டில் பிறந்த தமிழர்களில் அவ்விதம் புகழுடம்பை நிலைநாட்டிச் சென்ற மூவரைத் தாய் நாட்டில் உள்ள நாம் அறிவோம். ஸ்ரீ ஆறுமுக நாவலர், ஸர் பொன்னம்பலம் ராமநாதன், சுவாமி விபுலானந்தர் என்னும் பெயர்களை அறியாத தமிழர் யார்? இந்த மூன்று தமிழ்ப் பெரியார்களின் திருநாமங்களையும் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த் திருவிழாவில் ஒவ்வொரு விதத்தில் சம்பந்தப்படுத்தியிருந்தார்கள்.

தமிழ்த் தாயின் ஊர்வலம் ஸ்ரீ ஆறுமுக நாவலரின் மடாலயத்திலிருந்து ஆரம்பமாயிற்று. தமிழ் விழாவுக்கென்று அமைத்திருந்த அலங்காரப் பந்தல் 'விபுலானந்தர் பந்தல்' என்ற பெயருடன் திகழ்ந்தது. அந்தப் பந்தலில் தமிழ்த் திருவிழா தொடங்குவதற்கு முதல் நாள் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பதற்கென்று சென்னையின் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சென்னை மாஜி கல்வி மந்திரி திரு அவிநாசிலிங்கம், இலங்கை தாற்காலிக கல்வி மந்திரி கனம் கே. கனகரத்தினம், இலங்கை அரசாங்கத்தின் காரியதரிசி ஸர் கந்தையா வைத்தியநாதன் ஆகியோர் இந்த விழாவில் சொற்பொழிவு ஆற்றிப் பரிமளிக்கச் செய்தார்கள்.

முதலாவது உலக மகாயுத்தம் நடந்த போது ஒரு சமயம் இலங்கையில் இராணுவச் சட்டம் அமுலில் இருந்தது. இராணுவச் சட்டம் அமுலில் இருந்தால், இராணுவ அதிகாரி வைத்ததுதான் சட்டம். யாரை வேண்டுமானாலும் சுட்டுக் கொல்லும்படி அவர் உத்தரவு போட்டு விடலாம். இலங்கை மக்கள் அனைவரும் கதிகலங்கிப் போயிருந்தார்கள். அந்த நிலைமையிலும் தீரத்துடன் இருந்த ஒரே மனிதர் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள்தான். குற்றமற்ற இளைஞன் ஒருவனை அவ்விதம் சுட்டுவிடும்படி இராணுவ அதிகாரி உத்தரவு போட்டார். ஸர் பி. ராமநாதன் அந்த இராணுவ அதிகாரியைப் பார்க்கப் போனார். குறிப்பிட்ட இளைஞனைச் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டது அநியாயம் என்று எடுத்துச்

சொன்னார். "நீர் யார் இதில் தலையிடுவதற்கு? உம்மையும் சுட்டுக்கொல்லச் செய்வேன்!" என்றான் ஜெனரல் டையரின் அண்ணனான அந்த இராணுவ அதிகாரி. "நீ என்னைச் சுட்டுக் கொல்லலாம். ஆனால் நீ என் உடம்பைத்தான் சுடலாமே தவிர என் ஆத்மாவைச் சுட முடியாது!" என்றார் ஸர் பி. ராமநாதன். இப்படி ஸர் ராமநாதன் கூறிய பதிலின் மூலமாக இலங்கை மக்களே தங்கள் ஆத்மாவைக் கண்டனர் என்று சொல்லலாம். போர்ச்சுகியர் இலங்கையில் அடிவைத்த காலத்திலிருந்து அன்னியருக்கு அடிமைப்பட்டு, பூர்வீக ஆத்ம ஞானத்தையும் பாரமார்த்திகப் பெருமையையும் கலாச்சாரச் சிறப்பையும் தன்மதிப்பையும் இழந்து வாழ்ந்த இலங்கை மக்கள், மேற்கூறிய சம்பவத்திலிருந்து மனிதத் தன்மையைத் திரும்ப அடைந்தனர். தங்களுக்கு ஆத்மா ஒன்று உண்டு, அதன் சக்தியைக் கொண்டு எவ்வளவு கொடிய மிருக பலத்தையும் தைரியமாக எதிர்த்து நிற்கலாம் என்பதை உணர்ந்தனர்.



தலைமை வகித்த
பிரதம நீதிபதி ராஜமன்னார்

இலங்கை இந்நாளில் அடைந்திருக்கும் முன்னேற்றங்கள் எல்லாவற்றுக்கும் மூலகாரணமானவர் ஸர் பொன்னம்பலம் ராமநாதன். சமயம், சமூகம், கல்வி, அரசியல், பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளிலும் அவர் முன்னேற்றத்துக்கு அடிகோலினார். எல்லாவற்றிலும் முக்கியமாக ஆங்கில நாகரிகத் தாக்குதலினால் புத்துயிர் பெற்ற ஹிந்து சமூகப் பண்பாட்டின் தலைசிறந்த பிரதிநிதியாக ஸர் பொன்னம்பலம் ராமநாதன் விளங்கினார். அத்தகையவருடைய நூற்றாண்டு விழாவுக்குச் சென்னையில் தற்சமயம் நமது கலாச்சாரத்தின் சிறந்த பிரதிநிதியாக விளங்கும் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமை வகித்தது மிகப் பொருத்தமே அல்லவா?

நீதிபதி ராஜமன்னார் ஆங்கிலத்திலேதான் பேசினார். திருவையாற்றில் செய்ததுபோல் இங்கேயும் ஒரு பாட்டுப்பாடி எல்லாரையும் திணறச் செய்து விடுவாரோ என்று பார்த்தேன். அவ்விதம் செய்யவில்லை.

ஆனால் அவருடைய பேச்சே ஓர் இனிய பாடலைப்போல் இருந்தது. திருவாசகத்தையோ அல்லது கிருஷ்ண கர்ணாமிருத சுலோகத்தையோ ராகமாலிகையில் அமைத்து இனிய குரலில் பாடுவது போலிருந்தது அவர் பிரசங்கம்.

அந்த மகா சபையை அன்று உண்மையில் திணறச் செய்தவர் ஸர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள்தான். இவர் ஆங்கிலத்தில் தமது பிரசங்கத்தை எழுதிக் கொண்டு வந்திருந்தார். பேச எழுந்தபோது கூடக் கையில் வைத்திருந்தார். ஆனால்

விபுலானந்தர் பந்தலின் வெளித் தோற்றம்





கலைக் காட்சியைத் திறந்துவைத்த ஸர் கந்தையா வைத்தியநாதன் காட்சியைப் பார்த்து அநுபவிக்கிறார்.

அங்கேயிருந்த சூழ்நிலை அவரைத் தமிழில் பேசும்படி செய்துவிட்டது! சொல்லவந்த பொருள் உள்ளத்தில் தெளிவாக இருந்தால் தாய் பாஷை தானாக வந்து தொண்டு செய்யும் என்பதற்கு ஸர் வைத்தியநாதனின் பேச்சு உதாரணமாக அமைந்தது. (மறுநாள் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களுடைய பேச்சும் இதையே உறுதிப் படுத்தியது.) அவர் கூறினார் :—

"நானும் கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு பாடல் சொல்லப் போகிறேன்!

'வான் கொண்ட கண்ணார் யாரே
அடியினை முடியக் கண்டார்?'

இம்மாதிரியே ஸர் பொன்னம்பலம் ராமநாதனுடைய பெருமையை முழுதும் கண்டவர் யார்? நான் ஒரு சிறிது கண்டேன். அதைச் சொல்லப் போகிறேன்" என்றதும் சபையில் ஒரே குதூகலம். ஆயினும் ஸர் பொன்னம்பலம் ராமநாதனின் பெருமையை முழுமையும் ஒரே வாக்கியத்தில் அவர் சொல்லி விட்டார். அது அவருடைய பேச்சில் கடைசி வாக்கியமாக அமைந்தது.

ஸர் பி. ராமநாதன் அவர்களுடைய முழு வடிவப் படத்தை அன்று மாலை ஊர்வலமாக எடுத்துக் கொண்டு வந்து மேடைக்குப் பக்கத்தில் வைத்திருந்தார்கள். அந்தக் கம்பீர புருஷருடைய தத்ரூப வடிவம் சபையோர் முன்னால் இருந்து கொண்டேயிருந்தது. இதைக் குறிப்பிடாமல் குறிப்பிட்டு ஸர் கந்தையா சொன்னார் :—"ஸர் பி. ராமநாதன் இல்லாவிட்டால் நமக்கு ராமநாதன் கல்லூரி இல்லை; பரமேசுவரக் கல்லூரி இல்லை; வீதிகளிலே தூக்கிக் கொண்டு போய் ஊர்வலம் விடுவதற்குப் படமும் இல்லை!" என்று பேச்சை முடித்துவிட்டு அவர் உட்கார்ந்தபோது சபையோர் பலத்த கரகோஷம் செய்து மகிழ்ந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. ஸர் பி. ராமநாதனுடைய படமே உயிர் பெற்றுக் கரகோஷம் செய்திருந்தால் கூட எனக்கு வியப்பாயிருந்திராது.

படத்தை வீதிகளில் எடுத்துக் கொண்டுபோய் ஊர்வலம் விடக் கூடிய பெருமை வாய்ந்த மகான் இலங்கையில் ஸர் ராமநாதன் ஒருவரே என்பதை எவ்வளவு நயமாக அந்தக் கடைசி வாக்கியத்தில் சொல்லி விட்டார்!

* * *

அன்றிரவு தமிழ்த் திருவிழா நிர்வாகிகள் யாருமே தூங்கவில்லை. மறுநாள் நடக்க வேண்டிய திருவிழா ஏற்பாடுகளில் பலரும் முனைந்து ஈடுபட்டிருந்தார்கள். இன்னும் சிலர் கவலையினால் தூங்கவில்லை. "குளிக்கரை பிச்சையப்பா வந்து விட்டாரா?" என்று ஒருவருக்கொருவர் ஆள் விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் அந்த அவசரக் குழப்பத்தில் "பிச்சைக் கரைக் குளியப்பா வந்துவிட்டாரா?" என்று ஒருவரை யொருவர் விசாரித்தார்கள்.

யாழ்ப்பாணத்தார்கள் தமிழ் நாட்டின் கலைப் பண்பாட்டில் திளைத்தவர்கள் என்பதற்கு ஒரு நிச்சயமான அத்தாட்சி உண்டு. அது அவர்களுக்கு நாதஸ்வர சங்கீதத்தில் உள்ள பிரேமைதான். அந்தப் பகுதியிலேயே பல நாதஸ்வர வித்வான்கள் இருக்கிறார்கள். ஆயினும் விசேஷ சந்தர்ப்பங்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து புகழ் பெற்ற நாதஸ்வர வித்வான்களை அழைப்பது வழக்கம். ஆகையால் "தமிழ் விழாவுக்கு வேறு யார் வந்தாலும் வராவிட்டாலும் ஒரு நல்ல நாதஸ்வர வித்வானை 'ஒழுங்கு செய்து' அனுப்பி விடுங்கள்" என்று செய்தி மேல் செய்தி வந்து கொண்டிருந்தது.

இம்மாதிரி பொதுப் பணிகளில் ஆர்வத்துடன் முன் வந்து கலந்து கொள்ளும்

இயல்பு படைத்த பாக்கியவான் குழிக்கரை பிச்சையப்பா அவர்கள். ஆகையால் அவரை ஒழுங்கு செய்வது மிக எளிதாயிருந்தது. ஆனால் அவருக்குப் பாஸ்போர்ட்—விஸா ஒழுங்கு செய்தல் அவ்வளவு எளிதாயில்லை. இலங்கை அரசாங்கத்தார் இந்தியாவிலிருந்து வரும் கலைஞர்களுக்கு அநுமதி கொடுக்கும் விஷயத்தில் விசேஷ கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது இலங்கையில் உள்ளவர்களுக்கே தெரிவதில்லை. ஆகையால் இங்கேயுள்ள சங்கீத வித்வான்களைக் கச்சேரிகளுக்கு ஒழுங்கு செய்துவிட்டுப் போய் அங்கே பிரபலமாக விளம்பரமும் செய்து விடுகிறார்கள். வித்வானுக்கு இலங்கை சர்க்காரின் அநுமதி காலத்தில் கிட்டுவதில்லை. ஆகையால் இவர் அங்கே குறிப்பிட்ட தேதியில் போக முடிவதில்லை. வித்வானை எதிர்பார்த்த அபிமானிகள் பெரிதும் ஏமாற்றம் அடைகிறார்கள்.

குழிக்கரை பிச்சையப்பா அவர்கள் தமிழ்த் திருவிழாவுக்கு வரவேண்டுமென்பதில் இலங்கை சர்க்காரின் கல்வி மந்திரி உள்படப் பல பிரமுகர்கள் சிரத்தை கொண்டிருந்தும், விழாவுக்கு முதல் நாள்தான் அவருக்கு அநுமதி கிடைத்தது. ஆகவே முதல் நாளிரவு சுடுசிலிக்கு 'ஸ்பெஷல்' விமானத்தில் அவரும் அவருடைய கோஷ்டியாரும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இந்தச் செய்தி கிடைத்த பிறகுதான் விழா நிர்வாகிகளுக்கு நிம்மதி ஏற்பட்டது. பின்னரும் கவலைப்பட்டவர்கள் சிலர் உண்டு. "வித்வான்கள் வந்து விட்டார்கள், சரிதான்! அவர்களுடைய வாத்தியங்கள் வந்து சேர்ந்தனவா? அல்லது வழியில் சுங்க அதிகாரிகள் பிடித்து வைத்துக் கொண்டு விட்டார்களா?" என்று சிலர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். "வாத்தியங்கள் வந்தது சரிதான். அவற்றுக்குள்ளே சங்கீதம் பத்திரமாயிருக்கிறதா அல்லது அதிகாரிகள் பிடுங்கி வைத்துக்கொண்டு விட்டார்களா?" என்று வேறு சிலர் கவலைப்பட்டார்கள்.

மறுநாள் சூரியோதயம் ஆனதும், எல்லாக் கவலைகளும் தீர்ந்து விட்டன. ஸ்ரீ ஆறுமுக காவலர் மடாலயத்தின் முன்னிலையில் பெருங் கூட்டம் கூடியிருந்தது. தெய்வத் தமிழ் எழுதிய ஓலைச் சுவடிகளை யானைவாகனத்தின்மீது ஏற்றிக் கொண்டு ஊர்வலம் புறப்பட்டது. குழிக்கரை பிச்சையப்பாநாதஸ்வர வாத்தியத்தை எடுத்துக் கொண்டார். ஒத்து ஊதுகிறவர் ஊதினார்; தாளம் தட்டுகிறவர் தட்டினார்; தவுல் வித்வான் ஜாம் ஜாம் என்று முழக்கினார். ஸ்ரீ பிச்சையப்பா அன்றைய தினம் பொழிந்த இசை வெள்ளம் இன்னமும் யாழ்ப்பாண வீதிகளில் ஓடிக் கொண்டிருக்கும் என்று நம்புகிறேன்.

யானை வாகனத்தின்மீது ஏட்டுச் சுவடி ஊர்வலம் அமோகமாக நடந்தது.



இந்த ஊர்வலத்தின்போது தமிழ் நாட்டிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவருக்கும் யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவருக்கும் நடந்த சம்பாஷணையைக் கொஞ்சம் கேளுங்கள் :—

"என் ஐயா, இலங்கைத் தீவில் யானைகள் ஏராளமாக உண்டு என்று சொன்னீர்களே?"

"ஆமாம்; இல்லை என்று யாராவது சொன்னார்களா?"

"அப்படியானால், இந்த ஊர்வலத்துக்கு ஒரு நிஜ யானையைக் கொண்டு வந்திருக்கக் கூடாதா? இந்தப் பொம்மை யானைமேல் எதற்காக ஓலைச் சுவடிகளை வைத்து ஊர்வலம் விடுகிறீர்கள்!"

"நான் தங்களை ஒன்று கேட்கிறேன். பதில் சொல்வீர்களா?"

"தாராளமாய்க் கேளுங்கள்!"

"உங்கள் நாட்டில், அதாவது எங்கள் தாய் நாட்டில் காளை, மாடுகள் ஏராளமாக உண்டு அல்லவா?"

"ஆமாம்; உண்டு. அதிலும் பழைய கோட்டைப் பட்டக்காரரின் காங்கேயம் காளைகள் பிரசித்தி பெற்றவை."

"சரி; அப்படியானால் உங்கள் நாட்டுச் சிவன் கோயில்களில் ரிஷப வாகன ஊர்வலம் என்றால், நிஜக் காளை மாட்டின்மீது சுவாமியை வைத்து ஏன் கொண்டு வருகிறதில்லை? பொம்மை ரிஷப வாகனங்களின் மீது சுவாமியை வைத்து எழுந்தருளப் பண்ணுவது ஏன்?"

சேய் நாட்டுக்காரரின் இக் கேள்விக்குத் தாய் நாட்டுக்காரர் விடை சொல்ல முடியாமல் கொட்டுக்கடை முழி முழித்தார்!

நம்முடைய ஆலயங்கள், திருவிழாக்கள் எல்லாவற்றிலும் நம் பெரியோர்கள் அருங்கலைகளைச் சம்பந்தப்படுத்தி அமைத்திருக்கிறார்கள். வாகனங்களின் அமைப்பும் கலை உலகத்தைச் சேர்ந்ததே அல்லவா? பிரசித்தமான கோயில் பிராகாரங்களில் வரிசையாக வைத்திருக்கும் ரிஷப வாகனம், யானை வாகனம், மயில் வாகனம், கருட வாகனம் ஆகியவை எவ்வளவு அருமையான காட்சி தருகின்றன? விநாயகருக்குரிய மூஞ்சூறு வாகனங்கூடக் கலையுடன் சேரும்போது எவ்வளவு நன்றாயிருக்கிறது?

ஆகவே, தமிழ்ச் சுவடிகளை யானை வாகனத்தின் மீது வைத்து ஊர்வலம் விடுவது என்ற யோசனையை நமது பூர்வீக கலைப் பாணியிலேயே யாழ்ப்பாணத்து அன்பர்கள் நடத்தி வைத்தார்கள். அதைப் பற்றி முதலில் குறைப்பட்ட தமிழ் நாட்டு அன்பர்களும் மேற் சொன்ன காரணத்தைக் கேட்டுத் திருப்தி அடைந்தார்கள்.

• • •

இந்த ஓலைச் சுவடி ஊர்வலத்தின்போது நடந்த இன்னொரு ரசமான சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

"பிச்சையப்பா கோஷ்டியார் வந்தது சரி; வாத்தியங்களைக் கொண்டு வந்தார்களா?" என்று யாழ்ப்பாண நண்பர்கள் கவலையுடன் விசாரித்தார்கள் அல்லவா?

ஊர்வலம் பாதி தூரம் வந்தபோது மணி ஒன்பது ஆகிவிட்டது. ஸிலோன் ரேடியோக்காரர்கள் "ஒன்பது மணியிலிருந்து ஒலி பரப்புவதாக அறிவித்திருக்கிறோம். ஆகையால் நாதஸ்வர வித்வான்கள் உடனே பந்தலுக்கு வந்து வாசிக்க வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். ஆகவே, ஊர்வலத்தில் வாசிக்கும் பொறுப்பை இனி உள்ளூர் வித்வான்களுக்கு விட்டு விட்டுப் பிச்சையப்பா கோஷ்டியார் பந்தலுக்குப் போவது என்று ஏற்பாடாயிற்று. உள்ளூர் நாதஸ்வர கோஷ்டியாரும் வந்து நின்றார்கள். ஆனால் வாசிக்கத் தொடங்குவதாக இல்லை. மேலும் கீழும் பார்த்தார்கள். அக்கம் பக்கம் பார்த்தார்கள். மடியை உதறிப் பார்த்தார்கள். சட்டைப் பைகளைத் தடவிப் பார்த்தார்கள். "என்ன?" "என்ன?" என்று பலரும் ஒருவரை யொருவர் வினவினார்கள். சிறிது நேரம் வரையில் விஷயம் மர்மமாகவே இருந்தது. வெளியூர் வித்வானைத் தருவித்ததில் உள்ளூர் வித்வான்களுக்கு ஒரு வேளை வருத்தமோ என்றுகூட நாங்கள் பயந்து போனோம். கடைசியில் உண்மை வெளியாயிற்று. தமிழ் விழாவின் கோலாகலத்தில் ஈடுபட்டு மெய்ம்மறந்து போன உள்ளூர் தவில் வித்வான் தவில் வாத்தியத்தை எங்கேயோ விட்டு விட்டார்! நல்ல வேளையாகப் பிச்சையப்பா கோஷ்டியில் இரண்டு தவில்கள் வந்திருந்தன. அவற்றில் ஒன்றை வாங்கிக் கொடுத்த பிறகு உள்ளூர் கோஷ்டியார் ஜமாய்க்கத் தொடங்கினார்கள். பிச்சப்பா கோஷ்டியார் பந்தலுக்குச் சென்றார்கள். யாழ்ப்பாணத் தமிழர்களின் தமிழ் அன்புக்கு இதைக் காட்டிலும் வேறு உதாரணம் வேண்டுமா?

வேண்டுமென்றால், நல்லது, பரமேசுவரக் கல்லூரி மைதானத்துக்கு வாருங்கள். வந்து, அம் மைதானம் எப்படிக் கோலாகலமாய் இருக்கிறது என்று பாருங்கள். எப்படி மக்கள் வந்து நிறைந்து, இதற்குள்ளேயே பந்தலுக்குள் இடம் போதாமல் நெருக்கடி

சேர்த்து விட்டது என்பதைப் பாருங்கள். படை படைக்கும் வெய்யிலில் மக்கள் நிற்பதைப் பாருங்கள். மர நிழலில் நிற்பதையும், குடை நிழலில் நிற்பதையும் பாருங்கள்.

இவ்வளவையும் பார்த்தபிறகு தயவு செய்து மேடை மீதும் சிறிது கவனம் செலுத்தி வையுங்கள். அதைப் போன்ற அதிசயத்தை இலங்கையில் என்றுமே கண்டதில்லை என்று இலங்கை நண்பர்களே கூறினார்கள் என்றால், நாம் என்ன சொல்ல இருக்கிறது? வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், முற்றும் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்களும், ஒருவரையொருவர் காரசாரமாகத் தாக்கிக் கொள்ளுகிறவர்களும் ஒரே மேடையில் சமூகம் அளித்தது நம் இலங்கை நண்பர்களுக்கு அவ்வளவு வியப்பை அளித்தது.

இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவர்களான ஸ்ரீ இராஜலிங்கமும் ஸ்ரீ தொண்டைமானும் அங்கு இருந்தார்கள். இவர்களால் சிங்கள மந்திரிகளைக் காட்டிலும் அதிக 'பொல்லாதவர்' என்று கருதப்படும் ஸர் கந்தையா வைத்தியநாதன் இருந்தார். சிங்கள சர்க்காரில் மந்திரி பதவி வகித்து ஒத்துழைக்கும் திரு பொன்னம்பலமும் திரு கனகரத்தினமும் அந்த மேடையில் இருந்தார்கள். சிங்கள சர்க்காருடன் மாறுபட்டு மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்த திரு சுந்தரலிங்கம் இருந்தார். தமிழரசுக் கட்சியின் பிரமுகரான திரு வன்னிய சிங்கம் இருந்தார். இவர்கள் எல்லாருடனும் ஒவ்வொரு அம்சத்தில் மாறுபட்ட திரு எஸ். நடேசன் வரவேற்பு சபைத் தலைவராக வீற்றிருந்தார்.

தமிழ்த் தாயின் திருப்பணியில் இவ்வளவு பேரும் ஒன்று சேரக்கூடும் என்பதை நிரூபிக்கும் இந்த ஒரு அருமையான காட்சிக்காகவே இந்த விழாவை நடத்தியிருக்கலாம் என்றும், முப்பதினாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கலாம் என்றும் இலங்கை நண்பர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டு எங்கள் செவிகள் குளிர்ந்தன.

தூய செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டு இலக்கண வழுவில்லாத வாக்கியங்களை அமைத்துத் திரு எஸ். நடேசன் அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை, அழகிய நன்முத்துக்களைக் கொண்டு யாத்துத் தமிழ் அன்னைக்குச் சூட்டிய ஆரமாக மிளிர்ந்தது.

தமிழ் விழாவைத் திறந்து வைத்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் மழலைத் தமிழில் பேசிச் சபையோரை மகிழ்வித்தார். பழைய காலத்தில் "உங்கள் உடம்பு இளைத்துப் போயிருக்கிறதே!" என்று கூறுவதை ஓர் உபசாரமாகக் கருதினார்கள். "எனக்கு உடம்பு தூர்ப்பலம்" என்று கூறுவதையும் ஒரு பெருமையாக எண்ணினார்கள். அது போலவே தாய் மொழியில் பேசத் தெரியாது என்று சொல்வதும் பெருமையாகக் கருதப்பட்ட காலம் உண்டு. "எனக்குத் தமிழில் பேச வராது. தமிழ்ப் புத்தகம் படிக்கிற வழக்கம் இல்லை" என்றெல்லாம் பெருமிதத்துடன் சொல்லிக் கொண்டார்கள். "இப்படியெல்லாம் ஒரு காலத்தில் நானும் பெருமைப் பட்டவன்தான். ஆனால் இன்றைக்கு 'Who is who' என்று வெளியிடப்படும் தற்புகழ்ச்சிப் புத்தகங்களில் என்னுடைய விஞ்ஞானப் பதவிகளைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் கவலைப்பட மாட்டேன். 'கல்கத்தா பாரதி சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்' என்றும் 'டில்லி தமிழ்ச் சங்கத்தின் தலைவர்' என்றும் போட்டுக் கொள்வதிலேயே அதிகப் பெருமை அடைகிறேன்" என்று டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் இதய அந்தரங்கத்திலிருந்து கூறிய மொழிகள் அனைவரையும் பரவசப் படுத்தி விட்டன.

தமிழ் விழாவை யொட்டி அமைந்திருந்த கலைக் காட்சியை ஸர் கந்தையா வைத்தியநாதன் திறந்து வைத்தார். தமிழரின் பூர்வீகப் பண்பாட்டின் சிறப்பையும், அதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் பற்றி நன்றாக எடுத்துச் சொன்னார். ஆனால் அவர் இப்பிரசங்கத்தையும் எழுதிப் படித்திராமல் முதல் நாள் செய்ததைப் போல் திடீரென்று தமிழில் பேசத் தொடங்கியிருந்தால் இன்னும் சிறப்பாயிருந்திருக்கும் என்று இரண்டு பிரசங்கங்களையும் கேட்ட நண்பர்கள் கருதினார்கள்.

பிறகு, தலைவர் திரு சி. ஆர். சீனிவாசன் தமக்கே உரியதான அலாதித் தமிழ் நடையில், சின்னஞ் சிறு வாக்கியங்களில், தமது தலைமைப் பிரசங்கத்தைச் செய்தார். "தமிழில் சொல்ல முடியாத கருத்து ஒன்றுமே இல்லை. சொல்ல முடியவில்லையென்றால் அது பேசுகிறவருடைய குறையே தவிர, தமிழின் குறைபாடு அன்று" என வற்புறுத்திக் கூறினார். அவ்விதம் அதிகார பூர்வமாகக் கூற அவருக்கு உரிமை உண்டு. உலகம் முழுவதிலும் வெளியாகும் சுவையான உண்மைகளையும் கருத்துக்களையும் அவர் நடத்தும் "சுதேசமித்திரன்" தினப் பத்திரிகையில் வெளியிட்டுத் தானே வருகிறார்கள்? சொல்ல முடியாது என்று எதையும் விட்டு விடுவதில்லையே? (தொடரும்)

பொன்னியின்

அத்தியாயம் 4

நள்ளிரவில்

இரவு போஜனம் ஆன பிறகு வந்தியத்தேவன் கலங்கரை விளக்கின் தலைவரைத் தனிப்படச் சந்தித்து இலங்கைக்குக்குத் தான் அவசரமாகப் போக வேண்டும் என்பதைத் தெரிவித்தான். தியாக விடங்கக் கரையர் என்னும் பெயருடைய அப் பெரியவர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

"இந்தக் கரையோரத்தில் எத்தனையோ பெரிய படகுகளும் சிறிய படகுகளும் ஒரு காலத்தில் இருந்தன. அவை யெல்லாம் இப்போது சேதுக் கரைக்குப் போய் விட்டன. இலங்கையில் உள்ள நமது சைன்யத்தின் உதவிக்காகத்தான் போயிருக்கின்றன. எனக்குச் சொந்தமாக இரண்டு படகுகள் உண்டு. அவற்றில் ஒன்றை நேற்று வந்த இரண்டு மனிதர்களை ஏற்றிக்கொண்டு என் மகன் போயிருக்கிறான். அவன் எப்போது திரும்பி வருவான் என்று தெரியாது. என்ன செய்யட்டும்?" என்றார்.

"அந்த மனிதர்கள் யார்? அவர்கள் ஒருமாதிரி ஆட்கள் என்று தங்கள் குமாரி கூறினாளே?"

"ஆமாம்; அவர்களைக் கண்டால் எனக்கும் பிடிக்கவில்லைதான். அவர்கள் யார் என்பதும் தெரியவில்லை; எதற்காகப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. பழுவேட்டரையரின் பனை இலச்சினை அவர்களிடம் இருந்தது. அப்படியும் நான் என் மகனைப் போகச் சொல்லி யிருக்க மாட்டேன். ஆனால் என் மருமகள் மிகப் பணத்தாசை பிடித்தவள். நிறையப் பணம் கொடுப்பதாக அவர்கள் சொன்னதைக் கேட்டு விட்டுப் புருஷன் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள்..."

"இது என்ன, ஐயா, வேடிக்கை? வீட்டில் உலக அநுபவம் இல்லாத ஒரு சிறு பெண் சொன்னால், அதைத்தான் உங்கள் மகன் கேட்க வேண்டுமா?" என்றான் வந்தியத் தேவன்.

பிறகு சிறிது தயக்கத்துடன், "மன்னித்துக் கொள்ளுங்கள். அது தங்கள் குடும்ப விஷயம்!" என்றான்.

"அப்பனே! நீ கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. என் குடும்பத்திற்குச் சாபக்கேடு ஒன்று உண்டு. என் மகன்......" என்று தயங்கினார்.

வந்தியத் தேவனுக்கு அப்போது சேந்தன் அமுதன் இக் குடும்பத்தைப் பற்றிக் கூறியது நினைவு வந்தது.

"தங்கள் மகளால் பேச முடியாதா?" என்றான்.

"ஆம்; உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் பெரியவர்.

சேந்தன் அமுதனையும் அவன் தாயாரையும் அவர்கள் வீட்டில் தான் தங்கியிருந்ததையும் பற்றி வந்தியத் தேவன் அவரிடம் கூறினான்.

"ஆகா! அந்த ஆள் நீதானா? உன்னைப் பற்றிச் செய்தி இங்கே முன்னமே வந்து விட்டது. உன்னை நாடெங்கும் தேடுகிறார்களாமே?"

"இருக்கலாம்; அதைப் பற்றி எனக்குத் தெரியாது."

"நீ ஏன் இலங்கைக்கு அவசரமாகப் போக விரும்புகிறாய் என்று இப்போது எனக்குத் தெரிகிறது."

"பெரியவரே! தாங்கள் நினைப்பது சரியல்ல. என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நான் இலங்கைக்குப் போகவில்லை. அங்கேயுள்ள ஒருவருக்கு மிக முக்கியமான ஓலை ஒன்று கொண்டு போகிறேன். தாங்கள் வேண்டுமானால் அதைப் பார்க்கலாம்."

"தேவையில்லை. இளைய பிராட்டி உன்னைப் பற்றி எழுதி யிருப்பதே எனக்குப் போதும். ஆனால் இச்சமயம் நீ கேட்கும் உதவி என்னால் செய்ய முடியவில்லையே?"

"இன்னொரு படகு இருப்பதாகச் சொன்னீர்களே?"

செல்வன்



"படகு இருக்கிறது. தள்ளுவதற்கு ஆள் இல்லை. நீயும் உன்னுடைய சிநேகிதனும் தள்ளிக்கொண்டு போவதாயிருந்தால் தருகிறேன்......"

"எங்கள் இருவருக்கும் படகு ஓட்டத் தெரியாது. எனக்குத் தண்ணீர் என்றாலே கொஞ்சம் பயம். அதிலும் கடல் என்றால்..."

"படகு ஓட்டத் தெரிந்தாலும் அநுபவம் இல்லாதவர்கள் கடலில் படகு ஓட்ட முடியாது. கடலில் கொஞ்ச தூரம் போய்விட்டால் கரை மறைந்துவிடும். அப்புறம் திசை தெரியாமல் திண்டாட வேண்டி வரும்."

"என்னுடன் வந்தவனை நான் அழைத்துப் போவதற்கும் இல்லை. அவனை மூலிகை சேகரிப்பதற்காக இங்கே விட்டுப் போக வேண்டும். ஏதாவது ஒரு வழி சொல்லி நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்."

"ஒரு வழி இருக்கிறது. அது எளிதில் நடக்கக் கூடியதன்று. நீயும் முயற்சி செய்து பார்! அதிர்ஷ்டம் உன் பக்கம் இருந்தால்......"

"நான் என்ன செய்ய வேண்டும், பெரியவரே! சொன்னால் கட்டாயம் செய்கிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தப் பகுதியிலேயே பூங்குழலியைப்போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள். அவளிடம் நான் சொல்லுகிறேன்; நீயும் கேட்டுப் பார்!"

"இப்போதே கூப்பிடுங்களேன்; கேட்டுப் பார்க்கலாம்."

"வேண்டாம்; மிக்க பிடிவாதக்காரி. இப்போது உடனே கேட்டு 'முடியாது' என்று சொல்லிவிட்டால், அப்புறம் அவளுடைய மனத்தை மாற்றமுடியாது. நாளைக்கு நல்ல சமயம்நோக்கி அவளிடம் நான் சொல்லுகிறேன். நீயும் தனியே பார்த்துக் கேள்!"

கல்கி

இவ்விதம் தியாக விடங்கக் கரையர் கூறிவிட்டுக் கலங்கரை விளக்கை நோக்கிச் சென்றார்.

அவருடைய வீட்டுத் திண்ணையில் வந்தியத்தேவன் படுத்தான். அவனுடன் வந்த வைத்தியர் மகன் முன்னமே தூங்கிப் போய்விட்டான். வந்தியத்தேவனுக்கும் நீண்ட பிரயாணம் செய்த களைப்பினால் தூக்கம் கண்ணைச் சுற்றிக்கொண்டு வந்தது. விரைவில் தூங்கிப் போனான்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. கதவு திறக்கும் ஓசை கேட்டது. களைத்து மூடியிருந்த கண்ணிமைகளைக் கஷ்டப்பட்டு வந்தியத்தேவன் திறந்து பார்த்தான். ஓர் உருவம் வீட்டிற்குள்ளேயிருந்து வெளியேறிச் சென்றது தெரிந்தது. மேலும் கவனமாகப் பார்த்தான். அது ஒரு பெண்ணின் உருவம் என்று கண்டான். கலங்கரை விளக்கின் வெளிச்சம் அந்த உருவத்தின் மேல் விழுந்தது. ஆ! அவள் பூங்குழலிதான்! சந்தேகமில்லை.

அவள் என்னமோ நம்மிடம் சொன்னாளே? "நடுநிசியில் என்னைத் தொடர்ந்து வா! என் காதலர்களைக் காட்டுகிறேன்!" என்றாள். அது ஏதோ விளையாட்டுப் பேச்சு என்றல்லவா அப்போது நினைத்தோம்? இப்போது இவள் உண்மையிலேயே நள்ளிரவில் எழுந்து போகிறாளே? எங்கே போகிறாள்? காதலனையோ, காதலர்களையோ பார்க்கப் போவதாயிருந்தால் அப்படி நம்மிடம் சொல்லுவாளா? 'பின் தொடர்ந்து வந்தால்,

காட்டுகிறேன்' என்பாளா? இதில் ஏதோ மர்மமான பொருள் இருக்க வேண்டும்! அல்லது ஒருவேளை...... எப்படியிருந்தாலும் பின் தொடர்ந்து போய் ஏன் பார்க்கக் கூடாது? நாளைக்கு இவளிடம் நயமாகப் பேசி இலங்கைக்குப் படகு தள்ளிக்கொண்டு வரச் சம்மதிக்கப் பண்ண வேண்டும்.

அதற்கு இப்போது இவளைத் தொடர்ந்து போவது உதவியாயிருக்கலாம். ஏதாவது இவளுக்கு அபாயம் வரக்கூடும்! அதிலிருந்து அவளைக் காப்பாற்றினால் நாளைக்கு நாம் கேட்பதற்கு இணங்கக்கூடும் அல்லவா?

வந்தியத்தேவன் சத்தம் செய்யாமல் எழுந்தான். பூங்குழலி போகும்



வழியைப் பிடித்துக் கொண்டே போனான். சாயங்காலம் சேற்றுப் பள்ளத்தில் விழுந்தபோது அடைந்த அநுபவம் அவனுக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. அம்மாதிரி மறுபடியும் நேர் வதை அவன் விரும்பவில்லை. ஆகை யால், பூங்குழலியை அவன் பார்வையி லிருந்து தவறவிட்டு விடக் கூடாது.

கலங்கரை விளக்கிலிருந்து கொஞ்ச தூரம் வரை வெட்ட வெளியாக இருந் தது. ஆகையால் பூங்குழலியின் உருவ மும் தெரிந்து கொண்டிருந்தது. அவள் போன வழியே போவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அவள் அருகில் போய்ப் பிடித்து விடவேண்டும் என்று எண்ணி விரைவாக நடந்தான். ஆனால்



அது சாத்தியப்படவில்லை. இவன் வேகமாய் நடக்க நடக்க, அவளுடைய நடை வேகமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவன் பின் தொடர்ந்து வருவதை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை.

திறந்த வெளியைக் கடந்ததும் காடு அடர்ந்த மேட்டுப் பாங்கான பூமி வந்தது. நேரே அதன் பேரில் ஏறாமல் பூங்குழலி அந்த மேட்டைச் சுற்றிக் கொண்டே போனாள். மேடும் காடும் முடிந்த மூலை வந்தது. அந்த மூலையை வளைத்துக் கொண்டு சென்றாள். வந்தியத்தேவனும் விரைந்து சென்று அந்த மூலை திரும்பியதும் சற்றுத் தூரத்தில் அவள் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். "நல்லவேளை!" என்று தைரியம் கொண்டான். ஆனால் அடுத்த கணத்தில் திடீரென்று அவளைக் காணவில்லை!

எப்படித் திடீரென்று மறைந்திருப்பாள்? இது என்ன மாயமா, மந்திரமா? அங்கே ஏதாவது பள்ளம் இருந்திருக்குமோ? ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சுமாராகப் பூங்குழலி எங்கே நின்று மறைந்தாள் என்று தோன்றியதோ, அந்த இடத்துக்கு வந்தான். அங்கே நின்று நாலா பக்கமும் பார்த்தான். மூன்று பக்கங்களில் அவள் போயிருக்க முடியாது. போயிருந்தால் தன் கண்ணிலிருந்து மறைந்திருக்க முடியாது. அவ்விடத்தில் காலை ஜாக்கிரதையாக ஊன்றி வைத்துப் பார்த்துச் சேறு கிடையாது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டான். ஆகையால், மேட்டின் மேல் ஏறிக் காட்டுக்குள்ளேதான் போயிருக்க வேண்டும்.

இன்னும் கொஞ்சம் உற்றுப் பார்த்ததில், குத்துச் செடிகள் அடர்ந்த அந்த மேட்டில் ஏறுவதற்கு ஒற்றையடிப் பாதை ஒன்று இருப்பது தெரிய வந்தது. வந்தியத் தேவன் அதில் ஏறினான். ஏறும்போது திக் திக் என்று அடித்துக் கொண்டது. அங்கே கலங்கரை விளக்கின் மங்கிய வெளிச்சமும் வரவில்லை. மாலைப் பிறை முன்னமே கடலில் மூழ்கி மறைந்து விட்டது. மினுமினுத்த நட்சத்திரங்களின் வெளிச்சத்திலே வழி கண்டு பிடித்துப் போக வேண்டியிருந்தது. அந்த வழியையும் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் காணவில்லை. குத்துச் செடிகளும் குட்டை மரங்களும் பயங்கர வடிவங்களைப் பெற்றன. அவற்றின் நிழல்கள் கரிய பேய்களாக மாறின. செடிகளின் இலைகள் ஆடியபோது நிழல்களும் அசைந்தன. ஒவ்வொரு அசைவும் வந்தியத் தேவனுடைய நெஞ்சை அசைத்தது. அந்தக் கரிய இருளிலும் நிழலிலும் எங்கே என்ன அபாயம் காத்திருக்கிறதென்று யார் கண்டது? விஷ ஜந்துக்கள், கொடிய விலங்குகள் பதுங்கியிருந்து பாயலாம். அபாயம் மேலிருந்து வரலாம்; பக்கங்களிலிருந்து வரலாம்; பின்னாலிருந்தும் வரலாம். அடடா! இது என்ன இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோம்? கையில் வேலைக் கூட எடுத்து வரவில்லையே?

அது என்ன சலசலப்புச் சத்தம்? அந்த மரத்தின் மேல் தெரியும் அந்தக் கரிய உருவம் என்ன? அந்தப் புதரின் இருளில் இரண்டு சிறிய ஒளிப்பொட்டுக்கள் மின்னுகின்றனவே, அவை என்னவாயிருக்கும்?

வந்தியத்தேவனுடைய கால்கள் அவனை அறியாமல் நடுங்கின. சரி! சரி! இங்கே என்ன நமக்கு வேலை? எதற்காக இங்கே வந்தோம்?—என்ன அறிவீனம்? உடனே இறங்கிப் போய் விட வேண்டியதுதான்!

இறங்கலாம் என்று எண்ணித் திரும்ப யத்தனித்த தருணத்தில் ஒரு குரல் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும் குரல்; பெண்ணின் குரல். ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல்:—

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்?…"

வந்தியத்தேவன் அம்மேட்டிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் யோசனையை விட்டு விட்டான். குரல் வந்த இடம் நோக்கி மேலே ஏறினான். விரைவில் மேட்டின் உச்சி தெரிந்தது. அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள். பூங்குழலிதான். பாடியது அவள்தான். வானத்தில் சுடர்விட்ட நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு பாடினாள். அந்த விண் மீன்களையே அவளுடைய பாட்டைக் கேட்கும் ரசிக மகாசபையாக நினைத்துக் கொண்டு பாடினாள்

போலும்! நட்சத்திரங்களும் அந்த சோக கீதத்தைக் கேட்டு உடல் சிலிர்த்தன. நட்சத்திரங்களில் ஒன்று தூமகேது. அதிலிருந்து கிளம்பிய கதிரின் கத்தை நீண்ட தூரம் விசிறி போல் விரிந்து படர்ந்திருந்தது. மேட்டின் உச்சியில் அப் பெண்ணின் நிழல் வடிவமும், அவளுடைய குரலும் கீதமும், வானத்தில் தூமகேதுவும் சேர்ந்து வந்தியத்தேவனைத் தன் வயமிழக்கச் செய்தன. அவனுடைய கால்கள் அவனை உச்சி மேட்டில் கொண்டு போய்ச் சேர்த்தன.

பூங்குழலிக்கு எதிரில் நேருக்கு நேராக அவன் நின்றான். அவளுக்குப் பின்னால், வெகு தொலைவு என்று காணப்பட்ட இடத்தில், கலங்கரை விளக்கின் சிவந்த ஒளி தோன்றியது. அதையொட்டி விரிந்த கடல் பரந்து கிடந்தது. கடலுக்கு எல்லை யிட்டு வரையறுத்ததுபோல் வெள்ளிய அலைக் கோடு நீண்டு வளைந்து சென்றது.

"வந்து விட்டாயா? திண்ணையில் கும்பகர்ணனைப் போல் தூங்கினாயே என்று பார்த்தேன்......"

"வீட்டுக் கதவு திறந்த சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். நீ விடு விடு என்று நடந்து வந்து விட்டாய்! திரும்பியே பார்க்க வில்லை. அம்மம்மா! உன்னைத் தொடர்ந்து ஓடி வருவது எவ்வளவு கஷ்டமாய்ப் போய்விட்டது?"

"எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?"

"நல்ல கேள்வி! நீதானே வரச் சொன்னாய்? மறந்து விட்டாயா?"

"எதற்காக வரச் சொன்னேன்? உனக்கு நினைவு இருக்கிறதா?"

"நினைவு இல்லாமல் என்ன? உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய்! எங்கே உன் காதலர்கள்? காட்டு, பார்க்கலாம்!"

"அதோ உனக்குப் பின்னால் திரும்பிப் பார்!" என்றாள் பூங்குழலி.

அத்தியாயம் 5

நடுக் கடலில்

வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய வயிற்றிலிருந்து குடல்கள் மேலெழும்பி அவன் மார்பை அடைத்தன. பிறகு, இன்னும் மேலே கிளம்பி அவன் தொண்டையையும் அடைத்துக் கொண்டன.

அவனுடைய தேகத்தில் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தன. பழுக்கக் காய்ந்த ஒரு லட்சம் ஊசி முனைகள் அவன் தேகமெல்லாம் துளைத்தன.—அத்தகைய பயங்கரக் காட்சி அவன் கண் முன்னே காணப்பட்டது.

முடிவில்லாது பரந்திருந்த இருளில் அங்கங்கே பத்து, இருபது, நூறு அக்கினி குண்டங்கள் தோன்றின. அவற்றிலிருந்து புகை இல்லை; வெளிச்சமும் இல்லை. கிழே விறகு போட்டு எரித்து உண்டாகும் தீப் பிழம்புகளும் அல்ல. வெறும் நெருப்புப் பிண்டங்கள். பூமியிலிருந்து எப்படியோ எழுந்து அவை நின்றன. திடீரென்று அவற்றில் சில பிண்டங்கள் மறைந்தன. வேறு சில தீப்பிண்டங்கள் புதிதாக எழுந்து நின்றன.

ஒரு பிரம்மாண்டமான கரிய இருள் நிறங்கொண்ட ராட்சதன். தனியாகத் தலை ஒன்று இல்லாமல் வயிற்றிலேயே வாய்கொண்ட கபந்தனைப் போன்ற ராட்சதன். ஆனால் அவன் வயிற்றில் ஒரு வாய் அல்ல; அநேக வாய்கள். அந்த வாய்களை அவன் அடிக்கடி திறந்து மூடினான். திறக்கும்போது வயிற்றிலிருந்து தீயின் ஜுவாலை வாய்களின் வழியாக வெளியே வந்தது. மூடும்போது மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட வந்தியத்தேவனுடைய ஒவ்வொரு ரோமக்கால் வழியாகவும் அவனுடைய உடம்பின் ரத்தம் கசிவது போலிருந்தது. அப்படிப்பட்ட பீதி அவனை என்றைக்கும் ஆட்கொண்டதில்லை. பெரிய பழுவேட்டரையரின் பாதாள நிலவறையிலே கூட இல்லை.

அவன் பின்னால் "ஹா ஹா ஹா!" என்று ஒரு சிரிப்புக் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

பூங்குழலிதான்! வேறு ஒரு சந்தர்ப்பத்திலே யென்றால், அவளுடைய அங்

தச் சிரிப்பே அவனுக்கு அளவில்லாத பயங்கரத்தை உண்டாக்கி யிருக்கும். இப்போது அதே சிரிப்பு தைரியத்தை அளித்தது. இரத்தமும் சதையும் உடலும் உயிரும் உள்ள பெண் ஒருத்தி அவன் பக்கத்திலே நிற்கிறாள் என்பது பெரும் அபாயத்தில் ஒரு பற்றுக்கோல் போல உதவியது.

"பார்த்தாயா என் காதலர்களை?" என்று பூங்குழலி கேட்டாள்.

"இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகள் தான் என் காதலர்கள். இவர்களைப் பார்த்து சல்லாபம் செய்வதற்குத் தான் நள்ளிரவில் இந்த இடத்துக்கு நான் வருகிறேன்" என்றாள்.

இந்தப் பெண்ணுக்கு நன்றாகப் பித்துப் பிடித்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவளுடைய உதவியைக் கொண்டு இலங்கைக்குப் போகிறது நடக்கிற காரியமா?-இவ்வாறு வந்தியத்தேவன் எண்ணினான். அவனுடைய உள் மனத்திலிருந்து வேறு ஏதோ ஒரு எண்ணம் வெளிவரப் போராடிக் கொண்டிருந்தது. அது என்ன? அது என்ன? இந்தக் கொள்ளி வாய்ப் பிசாசுகளைப் பற்றிய ஏதோ ஒரு விஷயந்தான்.

"உன்னுடைய சிநேகிதன் சேந்தன் அமுதனால் இத்தகைய காதலர்களோடு போட்டியிட முடியுமா?" என்று பூங்குழலி கூறியது கிணற்றுக்குள்ளேயிருந்து வரும் குரலைப்போல் கேட்டது. ஏனெனில் அவனுடைய உள்ளம் அப்போது எதையோ ஞாபகப் படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. ஆ! கடைசியில் ஒரு பெரிய போராட்டம்; மனதிற்குள்ளேதான். இதோ ஞாபகம் வந்து விட்டது.........

கந்தகம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகு காலம் தேங்கி நின்று சதுப்பு நிலமானால், அத்தகைய இடங்களில் இரவில் இம்மாதிரி தோற்றங்கள் ஏற்படும். பூமிக்குள்ளேயிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும்போது நெருப்புப் பிழம்பு வருவதுபோலிருக்கும். சில சமயம் நீடித்து நிற்கும்.



சில சமயம் குப் குப் என்று தோன்றி மறையும். இந்த இயற்கைத் தோற்றத்தைக் கண்டு அறியாத மக்கள் பயப்படுவார்கள். கொள்ளி வாய்ப் பிசாசு என்று பயங்கரப் பெயர் கொடுத்துப் பீதி அடைவார்கள்.......

இப்படிப் பெரியோர் சொல்லி அவன் கேள்விப் பட்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. பிறகு அவனுடைய அறிவுக்கும் பயத்துக்கும் போர் நடந்தது. அறிவு வெற்றி பெற்றது.

ஆனால் அதையெல்லாம் இச்சமயம் இந்தப் பிரமை பிடித்த பெண்ணிடம் சொல்லிப் பயனில்லை. எப்படியாவது அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்துக் கொண்டு போய் விட வேண்டியதுதான்.

"பெண்ணே! உன் காதலர்கள் எங்கும் போய் விட மாட்டார்கள். இங்கேதான் இருப்பார்கள். நாளைக்கும் அவர்களை வந்து பார்க்கலாம் அல்லவா? வீட்டுக்குப் போகலாம், வா!" என்றான்.

அதற்குப் பூங்குழலி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை; விம்மி அழத் தொடங்கினாள்.

இது என்ன தொல்லை என்று வந்தியத் தேவன் எண்ணினான். பின்னர் சற்று நேரம் சும்மா இருந்தான்.

"பெண்ணே! நான் போகலாமா?" என்று மீண்டும் கேட்டான்.

விம்மல் நிற்கவில்லை.

வந்தியத் தேவனுக்கு அலுத்துப் போய் விட்டது.

"சரி; உன் இஷ்டம் போல் செய்! எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு இறங்கத் தொடங்கினான்.

பூங்குழலி உடனே விம்மலை நிறுத்தினாள். மேட்டிலிருந்து இறங்கத் தொடங்கினாள். நாலே பாய்ச்சலில் வந்தியத் தேவனுக்கு முன்னால் கீழே போய் நின்றாள்.

வந்தியத் தேவன் ஓடிப் போய் அவளைப் பிடித்தான்.

இருவரும் கலங்கரை விளக்கை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

இந்தப் பித்துப் பிடித்த பெண்ணை நம்பிப் படகில் ஏறுவதாவது? கடலைக் கடப்பதாவது?—ஆயினும் வேறு வழி இல்லையென்று தெரிகிறதே? ஏதாவது நல்ல வார்த்தை சொல்லிச் சிநேகம் செய்து கொள்ளப் பார்க்கலாமா?

"வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகிறதே! அதைப்பற்றி உன் கருத்து என்ன?" என்று பூங்குழலி கேட்டாள்.

"என் கருத்து ஒன்றுமில்லை. வால் நட்சத்திரம் தோன்றுகிறது; அவ்வளவுதான்!" என்றான் வந்தியத்தேவன்.

"வால் நட்சத்திரம் வானில் தோன்றினால் பூமியில் பெரிய கேடுகள் விளையும் என்று சொல்கிறார்களே?"

"அப்படித்தான் சிலர் சொல்லுகிறார்கள்."

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"நான் ஜோதிட சாஸ்திரம் படித்ததில்லை. ஜனங்கள் அப்படிச் சொல்லிக் கொள்வதுதான் எனக்கும் தெரியும்."

சற்று நேரம் மௌனமாக நடந்தார்கள். பிறகு பூங்குழலி, "சக்கரவர்த்திக்கு உடம்பு சுகமில்லை என்று சொல்கிறார்களே? அது உண்மைதானே?" என்றாள்.

இவள் அவ்வளவு பித்துக்குளிப் பெண் அல்ல என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டான். கொஞ்சம் அவனுக்கு நம்பிக்கை பிறந்தது.

"நானே என் கண்ணால் பார்த்தேன். சக்கரவர்த்தி படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். இரண்டு கால்களிலும் உணர்ச்சியே கிடையாது. ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. அவரைக் குணப்படுத்த மூலிகை கொண்டு வரத்தானே நான் வந்திருக்கிறேன். பெண்ணே! எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

அதற்கு மறுமொழி சொல்லாமல், "சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்கமாட்டார், சீக்கிரத்தில் இறந்து போய்விடுவார் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?" என்று கேட்டாள் பூங்குழலி.

"நீ இச்சமயம் உதவி செய்யாவிட்டால் அப்படி நடந்தாலும் நடந்து விடும். இலங்கையில் ஓர் அபூர்வ சஞ்சீவி மூலிகை இருக்கிறதாம். அதைக் கொண்டுவந்தால் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வாராம். நீ படகு தள்ளிக் கொண்டு இலங்கைக்கு வருவாயா?"

"சக்கரவர்த்தி ஒரு வேளை இறந்து போனால் அடுத்தபடி யார் பட்டத்துக்கு வருவார்கள்?" என்று பூங்குழலி கேட்டது வந்தியத்தேவனைத் தூக்கி வாரிப்போட்டது.

"பெண்ணே! உனக்கும் எனக்கும் அதைப்பற்றி என்ன? யார் பட்டத்துக்கு வந்தால் நமக்கு என்ன கவலை?"

"ஏன் கவலை இல்லை? நீயும் நானும் இந்த இராஜ்யத்தின் பிரஜைகள் அல்லவா?"

இந்தப் பெண் பித்துப் பிடித்தவளே அல்ல. இவளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவளுடைய விசித்திரமான செயல்களுக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்.

"ஏன் பேசாமலிருக்கிறாய்? அடுத்த பட்டத்துக்கு யார் வருவார்கள்?" என்று பூங்குழலி மீண்டும் கேட்டாள்.

"ஆதித்த கரிகாலருக்குத் தானே யுவராஜா பட்டம் கட்டியிருக்கிறது. அவர்தான் நியாயமாக அடுத்த பட்டத்துக்கு வர வேண்டும்."

"மதுராந்தகர்,—அவருக்கு உரிமை ஒன்றுமில்லையா?"

"அவர்தான் இராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விட்டாரே?"

"முன்னே அப்படிச் சொன்னார்; இப்போது இராஜ்யம் வேண்டும் என்று சொல்கிறாராமே?"

சிக்கும் எப்படியோ?

ஸோமாஸ்

நான் குழந்தையாயிருந்த போது—அதாவது ஐந்து, ஆறு வயதில்—என் பாட்டியின் மடியில் படுத்துக் கொண்டு, வைரத் துகள் மாதிரி வான வீதியில் ஜொலிக்கும் நக்ஷத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில் எனக்கு நேரம் போவதே தெரியாது. மினுக் மினுக் என்னும் அந்த நக்ஷத்திரங்களின் ஒளியில் என் குழந்தை உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் பளிச்சிடும். மானசீகமாக நானும் அந்த விண்மீன்களுள் ஒன்றாகி விடுவேன். உலகத்தைப் பார்த்து நகைத்துக் கண் சிமிட்டி மகிழ்வேன்.

என் பாட்டி நக்ஷத்திரங்களைப் பற்றி மிகவும் சுவாரஸ்யமான கதைகள் சொல்லுவாள். நான் கதை கேட்டுக் கொண்டே தூங்கி விடுவேன்.

ஆனால் இப்போது அந்த நக்ஷத்திரங்களைக் கண்டால் எனக்கு ஏனோ மனத்தில் வேதனை உண்டாகிறது. எனக்கு வயது பதினெட்டுக்கு மேல் ஆகியும் விவாகம் நடக்கிற வழியாயில்லை. அதற்கு முக்கிய காரணம் இந்தப் பாழாய்ப் போன நக்ஷத்திரம்தான். எந்த வரன் எனக்கு நிச்சயமானாலும் அனேகமாக முதல் எடுப்பிலேயே, ஜாதகம் பார்க்கும் போதே, என் நக்ஷத்திரத்தின் பெயரைச் சொன்னதுமே அந்த விவாகம் அத்துடன் நின்றுவிடும்.

நக்ஷத்திரங்களும் என்னைப் போல் பெண் இனத்தைச் சேர்ந்தவை தான் என்று பாட்டி சொல்லியிருக்கிறாள். அந்த இருபத்தேழு நக்ஷத்திரங்களும் சந்திரனை மணந்து வான வீதியில் உல்லாஸமாய்ப் பவனி வரவில்லையா! அப்படியிருந்தும் அந்த நக்ஷத்திரங்களுக்கு என் பெண் இனத்தினிடம் இரக்கமில்லை!

நான் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு இந்தப் புண்ணிய பாரத பூமியில் பெண்ணாய்ப் பிறந்தேன். என்னோடு துரதிர்ஷ்டமும் கூடப் பிறந்தது. போதாக் குறைக்கு, என் கையைப் பிடிக்கும் மகானுபாவருக்கும் (அப்படி ஒரு சம்பவம் ஏற்படுமா!) கஷ்டம் பிறந்தது. அது மட்டுமா! அவரது தாயாருக்கும் துரதிர்ஷ்டம் பிடித்தது. எப்படி என்று கேட்கிறீர்களா!

நான் பிறந்தது ஆயில்ய நக்ஷத்திரத்தில். அது எப்படி என்னுடைய தவறாகும்! அந்த நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு விவாகம் செய்வது என்றால் மாமியார் இல்லாத இடமாகப் பார்க்க வேண்டுமாம். மாமியார் இருந்தால், ஆயில்ய நக்ஷத்திரப் பெண் அடியெடுத்து வைத்ததுமே அவள் இறந்து விடுவாளாம். எந்தத் தாயாருக்குத்தான் தன் உயிரைக் கொடுத்தாவது தன் பிள்ளைக்கு விவாகம் செய்து வைக்கத் தோன்றும்! ஆகையினால் என் விவாகம் இலேசில் நடப்பதாயில்லை. தாயை இழந்த ஒரு வரன் கிடைத்தால் அவன் மற்ற விஷயங்களில் சரிப்பட்டு வரவில்லை. இந்த அழகில் என் தகப்பனாருக்கு என்னை நல்ல இடமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை.

அப்பா ஒரு சமயம் ஊருக்குப் போயிருந்தார்; எனக்கு வரன் தேடும் விஷயமாகத் தான். ஏழு பெண்களைப் பெற்ற அவர் உல்லாஸப் பிரயாணமா போவார்!

அப்பா ஊரிலிருந்து திரும்பி வந்த போது, அலுப்படைந்திருந்த அவர் முகத்தில் விவரிக்க முடியாத கவலைக்குறி படர்ந்திருந்தது. அப்பா காப்பி சாப்பிட்டு விட்டுக் கொஞ்சம் இளைப்பாறியதும் அம்மா மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள்.

"என்ன, போய்ப் பார்த்தீர்களா! அவர்கள் என்ன சொன்னார்கள்!" என்று ஆர்வத்தோடு கேட்டாள் அம்மா.

அதற்குப் பதில் அப்பாவின் ஒரு நீண்ட பெருமூச்சுத்தான். பிறகு அப்பா ஈனஸ்வரத்தில் பேச ஆரம்பித்தார்:

"ஒரு மாதிரி எல்லாப் பேச்சு வார்த்தைகளையும் நடத்தியாகி விட்டது. முதலில் ஜாதகமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் அப்புறம் ஜாதகம் பார்க்க வேண்டும் என்றார்கள். எப்பொழுதும் போல் அதே தொந்தரவுதான். பெண்ணுக்கு ஆயில்ய நக்ஷத்திரமாம். பையனின் தாயாருக்கு......!"

"பையனுக்குத் தான் தாயார் இல்லையென்று சொன்னார்களே! சிறு தாயார் தானே இருக்கிறாள்! பெற்ற தாயாரா யிருந்தால்தான் ஆயில்ய நக்ஷத்திரம் ஆகாது என்பார்கள். இதை நீங்கள் அவர்களிடம் சொல்லவில்லையா!" என்று கேட்கும் போது அம்மாவின் குரலில் விவரிக்க முடியாத சோகம் தொனித்தது.

"எல்லாம் எவ்வளவோ வாதாடிப் பார்த்து விட்டேன். ஒன்றும் பலன் இல்லை. பெண்ணுக்கு ஆயில்ய நக்ஷத்திரம் என்றால் பையனைப் பெற்ற தாயாருக்கு மட்டும் தான் ஆகாது என்பதில்லையாம். தாயார் ஸ்தானத்தில் இருக்கும் மாற்றாந் தாய்க்கும் கூட ஆகாதாம். ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படும் சமயத்தில், இன்னொரு முந்நூறு ரூபாய் தருவதாயிருந்தால், இதைப் பற்றி யோசிக்கலாம் என்று பையனின் சிறு தாயார் வாய் கூசாமல் சொன்னாள். நான் ஒன்றும் பேசவில்லை. திரும்பி விட்டேன்! பணத்தாசை பிடித்த பிசாசுகள்!" என்று அப்பா வெறுப்புடன் சொன்னார்.

அப்பாவின் பேச்சை நான் மறைவிலிருந்து தான் கேட்டேன். என் எதிரில் இம்மாதிரி விஷயங்களைப் பேச அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டார் தெரியுமா!

எனக்கு வரன் தேடியதில் அப்பா அடைந்த முதல் தோல்வி அல்ல இது. அப்பப்பா! அது எத்தனையோ!

எனக்கு முன் பிறந்த சகோதரிகள் ஐந்து பேர்களுக்கும் அப்பா எப்படியோ வரன் தேடி விவாகம் செய்து வைத்து விட்டார். எனக்கு

விவாக வயது நெருங்குவதற்கு முன்னாலேயே அப்பா உத்தியோகத்திலிருந்து விலகி ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆனால் அது அவர் உத்தியோகத்துக்குத்தான் ஓய்வு. ஆறு பெண்களைப் பெற்ற அவருக்கு ஏது ஓய்வு!


எத்தனை தடவை அம்மா எனக்கு அலங்காரம் செய்திருப்பாள்! நான் எத்தனை தடவை புதுப்புடவை உடுத்திக்கொண்டு, என் கரம் பற்றப் போகும் இளைஞனின் ரூப சௌந்தரியங்களைப் பற்றிக் கனவு கண்டிருப்பேன்!

"அம்மா, பாகீரதி! வா, நமஸ்காரம் பண்ணு!" என்று அப்பா சொன்னது எத்தனை தடவை என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. நான் அப்பாவின் உத்தரவைக் கேட்டதும் முடுக்கி விடப்பட்ட யந்திரம்போல் எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணிவிட்டுத் தலை நிமிராமல் உள்ளே போக யத்தனிப்பேன்.

அந்தச் சமயம் அப்பா, "பாகீரதி! ஒரு பாட்டுப் பாடு, அம்மா!" என்பார். நானும் உடனே "சித்தம் எப்படியோ!" என்னும் பாட்டைப் பாடுவேன்.

இன்னொன்று மறந்து விட்டேனே! பெண் பார்க்க வருகிறவர்களுக்கு முதலில் இனிப்புப் பக்ஷணம் வழங்க வேண்டும் என்பது சம்பிரதாயம் அல்லவா! அதன்படி அம்மா, அவர்களெல்லோரும் வருவதற்குள், தயாராகக் கேசரி செய்து வைத்து விடுவாள். இனிப்புக்குப் பிறகு காரம் வேண்டுமல்லவா! அதற்குத்தான் கத்தரிக்காய், வாழைக்காய் பஜ்ஜி இருக்கவே இருக்கிறது!

என் விவாகம் இப்படித் தடைப்பட்டுக் கொண்டு வந்ததில் ரொம்பவும் வருத்தப்பட்டவள் என் அத்தைதான். அவளுக்குக் குழந்தைகள் இல்லை. என்னிடம் அத்தைக்கு உயிர். அவள் வருஷா வருஷம் ஒவ்வொரு சித்திரை மாதமும் என் கல்யாணத்தை எதிர் பார்த்து அப்பளத்துக்கு உளுந்து ஊறப் போடுவாள். இரண்டாயிரத்துக்குமேல் அப்பளம் தயார் செய்வாள். நானும் அத்தையுடன் மாவு



அண்ணா:—கிட்டு, எங்கே என் சிப்பில் ஒரு பல்லைக் கூடக் காணோம்!

கிட்டு:—அண்ணா, நானும் தம்பியும் பல் டாக்டர் விளையாட்டு விளையாடினோம்!

இடித்து, அப்பளம் இட்டு அவளுக்கு உதவி செய்வேன். ஒவ்வொரு வரனும் நிச்சயம் ஆகாமல் போகும்போது அத்தையின் மனம் ரொம்பப் பாடுபடும்.

"அப்பளம் ரொம்ப நேர்த்தி. இந்த நேர்த்திக்காகவே பாகீரதியின் கல்யாணம் சீக்கிரம் நிச்சயம் ஆகாதா என்று இருக்கிறது. உம்! நம்ம செயலிலே என்ன இருக்கிறது! எல்லாம் பகவான் மனசு வைக்கணும்!" என்று தான் அருமையாய்த் தயாரித்த அப்பளம் ஒவ்வொரு வருஷமும் வீணாய்ப் போவதைக் கண்டு கண்ணீர் விடுவாள்.

கடைசியில் வீட்டில் உள்ளவர்களே அந்த அப்பளம் அவ்வளவையும் சுட்டும் பொரித்தும் சாப்பிட்டு விடுவார்கள். எனக்கு மட்டும் அந்த அப்பளத்தைத் தின்னவே மனம் இடம் கொடுக்காது; தின்றால் என் உள்ளம் சுடும்; உடல் வேதனையில் பொரியும்.

என் விவாகம் எப்போது நடக்கும்! அப்படி ஒரு சம்பவம் என் வாழ்க்கையில் நடக்குமா! இல்லை, என் இளமை காட்டில் எரிக்கும் நிலவு மாதிரி வீணாகப் போய் விடுமா!

என் குடும்பத்தைப்பற்றி, என் தகப்பனாரைப் பற்றி, கடைசியாக என்னைப் பற்றி நான் நினைக்கும்போதெல்லாம் என் கண்களில் நீர் நிரம்பி விடும்.

ஆனால் என்னைப் பார்க்க வரும் வரன்கள் குறையவே இல்லை. அவர்கள் என்னைப் பாடச் சொல்லிக் கேட்பதற்கு முன்பே நானாகவே என் உணர்ச்சி மிகுதியில் "எப்போ வருவாரோ!" என்ற பாட்டைக் கணீர் என்று ஆரம்பித்து விடுவேன்.

*

அன்றைக்கு என்னவோ என் மனம் நிறைந்து இருந்தது. அன்று என்னைப் பார்க்க வந்தவர் அப்படியே என்னை விழுங்கி விடுபவர் போலப் பார்த்தார். வழக்கம்போல் அவருக்கு உபசாரங்கள் நடந்தன. நான் பாட்டுப் பாடவேண்டிய கட்டம் வந்தது. என் இருதய அடிவாரத்தில் பொங்கி யெழுந்த சோகத்தை யெல்லாம் சேர்த்துச் சுருதி கூட்டி, பாட்டுப் பாடினேன். ஆமாம். "சித்தம் எப்படியோ!" என்ற பாட்டுத்தான் என்னையறியாமல் வந்தது. என்னைக் கைப்பிடித்து ஆளப்போகும் தெய்வத்தின் சித்தத்தில் அது ஒரு குழைவையும் கனிவையும் உண்டாக்கி விட்டது என்பதை என்னால் ஒருவாறு புரிந்து கொள்ள முடிந்தது. நான் பாடி முடித்ததும் அவர் என் தம் அங்கவஸ்திரத்தினால், கண்களில் துளித்திருந்த கண்ணீரை இலேசாகத் துடைத்துக் கொண்டார்!

என் கண்களிலும் நீர் நிரம்பிவிட்டது. ஆமாம். அது ஆனந்தக் கண்ணீர். என்னைப் பார்க்க வந்த ஒரு வாலிபனுக்குக்கூடக் கண் இல்லை என்றுதான் நான் தீர்மானித்திருந்தேன். வந்தவர்களில் ஒருத்தருக்காவது என் அழகு தெரிய வேண்டுமே! ஆனால் அவரை அப்படி நினைக்க முடியவில்லை.

அப்பா அவரைப் பார்த்து, "உங்கள் ஜாதகம் கொடுத்தால் சௌகரியமா யிருக்கும்.

குழந்தையின் ஜாதகத்தையும்......'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவருடன் வந்த அவர் மாமா இடைமறித்தார்.

''...ஜாதகம்...அவசியம் வேண்டுமா! எங்களைப் பொறுத்தவரையில் பெண்ணின் ஜாதகம் வேண்டியதில்லை. ஏனென்றால் பையனுக்கு ஜாதகமே கிடையாது. மனப் பொருத்தத்தை நாங்கள் நம்புகிறோம்!'' என்றார்.

அப்பா பதில் பேசாமல் சற்றுத் தயங்கினார்.

என் மார்பு 'படக், படக்' என்று ஏனோ அடித்துக் கொண்டது. தூரத்திலிருந்தபடியே அந்த வாலிபரின் முகத்தைத் துணிச்சலுடன் பார்த்தேன். என்ன இது! அவரும் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாரே! அவர் பார்வையின் அர்த்தம் எனக்கு விளங்காமற் போகவில்லை. ஆனால் என்னால் அவரைப் பார்த்துக் கொண்டே யிருக்க முடியவில்லை.

'' ... குழந்தைக்கும் ... ஜாதகம் ... இல்லை! மற்ற விவகாரங்களெல்லாம் பேசி முடிந்து பெண்ணும் மனசுக்குப் பிடித்திருந்தால் விவாகத்தை முடித்து விடலாம்!'' என்று அப்பா ஒருமாதிரி இழுத்தாற்போல் சொன்னார். அவரால் பொய் சொல்ல முடியவில்லை. ஆனால் அப்பாவின் முகத்தில் அவரையும் அறியாமல் ஒரு திருப்திக் களை தாண்டவமாடியது.

''லௌகிக விஷயங்கள்...ஒருமாதிரி...பேசி முடித்து விட்டால்......'' என்று அப்பா மெதுவாக மீண்டும் ஆரம்பித்தார்.

உடனே அந்த வாலிபரின் மாமா, ''அதெல்லாம் உங்கள் ஸௌகரியம்போல் செய்யுங்கள். மற்ற பெண்களுக்கும் செய்தமாதிரி செய்தால் சரிதான்!'' என்றார்.

அப்பாவின் முகத்தில் ஆச்சரியக் குறியும் சந்தோஷக் குறியும் மாறிமாறித் தோன்றின. எனக்குக்கூட இனந்தெரியாத மகிழ்ச்சி இதயத்தில் பொங்கி வழிந்தது.

கடைசியில் அந்த ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்துவிட்டது! என் விவாகத்தைத்தான் சொல்லுகிறேன். நானும் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அவருக்கு மாலையிட்டேன். என் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்து விட்டது. அப்பாடா! என் கவலை நீங்கியது.

விவாகம் முடிந்தவுடனேயே என் கணவருடன் நான் புறப்பட்டு விட்டேன். புக்ககத்துக்குள் நுழைந்ததும் என் சேவையை எதிர்பார்த்து என் மாமியார் படுத்த படுக்கையில் இருப்பது தெரிய வந்தது. எங்கள் கல்யாணத்துக்கு என் மாமியார் வரவில்லை. நோயுற்றிருப்பதாகச் சொன்னார்கள். கவலைக்கிடமான நிலையில் இருக்கிறாள் என்பது தெரியாது.

எனக்கு வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததுமே மனதில் திக்கென்றது. உடம்பு நடுங்கியது. வானம் இருண்டு விட்டது. அதில் தூரத்தில் ஆயில்ய நக்ஷத்திரம் தோன்றி என்னைப் பார்த்துப் பயங்கரமாய்ச் சிரித்தது.

தாங்கமுடியாத மன வேதனையுடன் என் மாமியாருக்கு வேண்டிய சிசுருஷைகளையெல்லாம் செய்து வந்தேன். என் கணவர் என்னிடம் மிகவும் அன்பாயிருந்தார். நான் அவர்



கணவன்:—என்ன அநியாயம் இது? மூன்று தடவை ஒரே சினிமாவைப் பார்த்தாகி விட்டது. நாலாந் தடவையும் அதே சினிமாவுக்குப் போக வேண்டும் என்கிறாயே!

மனைவி:—அது சரிதான். ஆனால் இந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு போகவில்லையே!

தாயாருக்குச் செய்யும் சிசுருஷைகளையெல்லாம் சந்தோஷத்துடன் பாராட்டினார். என் மாமியார் பிழைத்து எழுந்திருக்க வேண்டுமே என்னும் கவலை எனக்கு ஓயாத கவலையாய்ப் போய்விட்டது. இதைப்பற்றி என் கணவரிடம் சொல்லவும் தைரியம் இல்லை. எனக்கு ஆயில்ய நக்ஷத்திரம் என்று தெரிந்திருந்தால் அவர் என்னை மணந்து கொண்டிருப்பாரா! என்னை அவர் மணந்து கொண்டதே தம் தாயாரின் சிசுருஷைக்காகத்தான் என்று அடிக்கடி சொன்னார். எனக்கு அவர் அப்படிச் சொல்லுவதைக் கேட்கும் போதெல்லாம் வேதனை தாங்க முடியாது.

'உங்களுடைய தாயாருக்கு யமனை அல்லவா என்னை அழைத்து வந்து விட்டீர்கள்! நான் ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தவள்! மாமியாருக்கு ஆகாது! நீங்கள் ஜாதகம் வேண்டாம் என்று சொல்லவே இதைப்பற்றி அப்பா தங்களிடம் சொல்லவில்லை!' என்று அவரிடம் கோவென்று கதறி எல்லாவற்றையும் சொல்லி விடவேண்டும் போல் தோன்றியது. அந்த வேதனை என் மனதைப் பெரும் பாரமாக அழுத்தியது.

என்னுடைய நல்ல காலம் மாமியார் இந்தப் பூட்டுக்குத் தப்பிப் பிழைத்து விட்டாள்! அப்பொழுது கூட என் மனதை அழுத்தி வந்த பயம் சிறிதும் நீங்கவில்லை. இந்த ஓயாத பயத்தின் காரணமாக நான் இளைத்துத் துரும்பாகிவிட்டேன். என் கணவர் டாக்டரிடம் அழைத்துச் சென்று என்னை மிகவும் அக்கறையுடன் கவனித்தார். ஆனால் என் உடம்பு என்னவோ தேறுகிற வழியாயில்லை. நோய் மனதில் அல்லவா இருக்கிறது!

அன்று இரவு மாடியில் சென்று சற்று நேரம் படுத்தேன். நல்ல நிலவு. அவர் சாப்பிட்டு விட்டு ஒரு நண்பரைப் பார்க்க வெளியே சென்று விட்டார். அலுப்பில் நான் சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன். திடீரென்று தூக்கிவாரிப் போட்டது. உடம்பெல்லாம் பயத்தினால் நடுங்கியது. அவர் மடியில் நான் தலை வைத்துப் படுத்திருந்தேன். அவர் எப்போது வந்தார் என்று எனக்குத் தெரியாது.

அவர், என் தலையைக் கோதி விட்டுக் கொண்டே, "பாரதி, சொப்பனம் கண்டாயா! பயப்படாதே!" என்று அன்பு ததும்பும் குரலில் சொன்னார். அந்த அன்புக் குரலில் நான் என்னை அடியோடு மறந்து 'ஓ' வென்று அழுது தீர்த்து விட்டேன். என் கண்களைத் துடைத்துவிட்டு, அவர் "பாரதி, ஏன் சதாகாலமும் எதையோ நினைத்துக் கொண்டு வேதனைப் படுகிறாய்! இங்கே ஏதாவது மனக் குறை இருக்கிறதா உனக்கு!" என்று ஆதரவோடு கேட்டார்.

எனக்கு என்ன குறை! என்றால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் கண்ணீர் மட்டும் தங்கு தடை யின்றிப் பெருகியது.

"எனக்கு.......எனக்கு.......ஆயில்ய நக்ஷத்திரம்.......!" என்று சொல்ல ஆரம்பித்த எனக்கு அதற்குமேல் சொல்ல முடியவில்லை.

"அசடே, இதற்காகவா இப்படி வேதனைப் பட்டு எலும்பாய்ப் போகிறாய்! உனக்கு ஆயில்ய நக்ஷத்திரம் என்று முன்னாலேயே எனக்குத் தெரியும். அதன் காரணமாகவே உனக்குக் கல்யாணம் தடைப்பட்டு வந்ததும் தெரியும். ஆனால் பாரதி, எனக்கும் ஆயில்ய நக்ஷத்திரம்தான் என்பது உனக்குத் தெரிந்திருக்காது. ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு மாமியார் இருக்கக் கூடாது என்றால், பிள்ளைக்கும் மாமியார் இருக்கக் கூடாதல்லவா! உனக்குத் தாயார் இருக்கிறாளாதலால், உன் தகப்பனார் எனக்குக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார் என்று தெரிந்துதான் ஜாதகம் கிடையாது என்று பெரும் பொய் சொன்னேன். வீணுக்கெல்லாம் கவலைப் படாதே. எல்லாவற்றுக்கும் மனம்தான் காரணம். நக்ஷத்திரம் என்ன செய்யும்!" என்று அவர் கூறியது எனக்குக் கனவில் கேட்பதுபோல் இருந்தது.

"பாரதி, ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். நாம் என்ன சொன்னாலும் பெரியவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். உனக்கு ஆயில்ய நக்ஷத்திரம் என்பதை என் அம்மாவிடம் மாத்திரம் மறந்தும் சொல்லி விடாதே! மாட்டுப்பெண் வந்த அதிர்ஷ்டம் காரணமாகத் தான் பிழைத்து எழுந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அப்புறம் அதெல்லாம் மாறிப் போய்விடும். அதோடு அவளுக்கு மறுபடியும் உடம்புக்கு ஏதாவது வந்து விடும். இந்தப் பொல்லாத மனசு ஒன்று இருக்கிறதல்லவா!"

அவருக்கு மறு மொழி ஒன்றும் சொல்லாமல் வானத்தில் மிதந்து வரும் சந்திரனையும் அவனைச் சுற்றியிருந்து கண் சிமிட்டிக் காதல் புரியும் நக்ஷத்திரங்களையும் பார்த்தேன்.

இதுவரையில், அவர் சித்தம் எப்படி யிருக்குமோ, எனக்கு நக்ஷத்திரம் ஆயில்யம் என்று தெரிந்தால் அவர் எப்படி நடந்து கொள்ளுவாரோ என்று ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு இப்பொழுது மனதில் நிம்மதி ஏற்பட்டது. "சித்தம் எப்படியோ!" என்ற பாட்டை என்னையறியாமலே ஆரம்பித்தேன். நக்ஷத்திரங்கள் இப்போது என்னை உற்சாகப் படுத்தின. அவரும் என் கன்னத்தை வருடிய படி புன்னகை பூத்தார்.

அகில உலகச் சிறுகதைப் போட்டி

அகில உலகச் சிறு கதைப் போட்டிக்காகப் புது டில்லி 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நடத்திய அகில இந்தியச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விவரம்:

கண்கள்	-	கே. டி. முகம்மத்	-	மலையாளம்	-	ரூ.	1500
புயல்	-	பி. பத்மராஜு	-	தெலுங்கு	-	ரூ.	1000
பட்டாணியன்	-	ஏ. என். மேனன்	-	மலையாளம்	-	ரூ.	750
ஆட்டக்காரன்	-	நீதிபதி ஜி. டி. கோசலா	-	ஆங்கிலம்	-	ரூ.	600
அதிர்ஷ்டமற்ற ஏணி	-	என். கே. செட்டூர்	-	ஆங்கிலம்	-	ரூ.	500
அவன் சதையின் பகுதி	-	சுகவர் பெட்லிகர்	-	குஜராத்தி	-	ரூ.	400
அதிகாரம் செலுத்திய பெண்	-	ஜி. என். ராவ்	-	ஆங்கிலம்	-	ரூ.	300
பயங்கொள்ளியின் வழி		ஆர். வேணுகோபால் ரெட்டி		ஆங்கிலம்	-	ரூ.	200

மேற்கண்ட கதைகளில் முதலிரண்டு கதைகள் (கண்கள், புயல்) அகில உலகச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்படும்.

ஒன்பது இந்திய மொழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளையும் ஆங்கிலக் கதைகளையும் பரிசீலனை செய்த பஞ்சாயத்தார்:

கனம் கே. எம். முன்ஷி, புது டில்லி
டாக்டர் அமரநாத்ஜா, அலகாபாத்
புரபசர் எம். மஜீஸ், புது டில்லி

"அவர் சொன்னால் போதுமா? பிரஜைகள் எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டாமா?"

"பெரிய மனிதர்கள் பலர் அவர் கட்சியில் இருக்கிறார்களாமே?"

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். இவ்வளவும் உன் காது வரையில் வந்து எட்டியிருப்பதை நினைத்தால் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது."

"சுந்தர சோழர் திடீரென்று இறந்து போனால் என்ன ஆகும்?"

"தேசமெல்லாம் பெருங் குழப்பம் ஆகி விடும். அதைத் தடுப்பதற்குத்தான் உன் உதவி இப்போது தேவையாயிருக்கிறது......"

"நான் என்ன உதவியைச் செய்ய முடியும்?"

"முன்னமேயே சொன்னேனே? நான் அவசரமாக மூலிகை கொண்டு வர இலங்கைத் தீவுக்குப் போகவேண்டும். அதற்கு நீ படகு வலித்துக் கொண்டு வர வேண்டும்."

"என்னை எதற்காக அழைக்கிறாய்? ஒரு பெண் பிள்ளையைப் படகு தள்ளும்படி கேட்க வெட்கமாயில்லையா!"

"வேறு யாரும் இல்லை என்று உன் தந்தை சொல்கிறார். உன் அண்ணன் கூட நேற்றுப் போய் விட்டானாமே?"

"அவன் போனால் என்ன? உனக்கு இரண்டு கைகள், உன்னோடு வந்தவனுக்கு இரண்டு கைகள் இல்லையா?"

"எங்களுக்குப் படகு வலிக்கத் தெரியாது......"

"படகு வலிப்பது என்ன மந்திர வித்தையா! துடுப்பைப் பிடித்து வலித்தால் தானே படகு போகிறது!"

"திசை தெரிய வேண்டும் அல்லவா? நடுக்கடலில் திசை தெரியாமல் போய் விட்டால்......?"

"நடுக் கடலில் திசை தெரியாவிட்டால் முழுகிச் சாகுங்கள்! அதற்கு நான் என்ன செய்யட்டும்?"

கலங்கரை விளக்கின் அருகில் அவர்கள் வந்து விட்டார்கள். வந்தியத்தேவனும் அத்துடன் அந்தப் பேச்சை நிறுத்திவிட விரும்பினான். மேலும் பேச்சை வளர்த்திப் பூங்குழலியின் மறுப்பை உறுதிப்படுத்திவிட அவன் விரும்பவில்லை. அவள் அவ்வளவு கண்டிப்பாக மறுமொழி சொன்ன போதிலும், அவளுடைய குரலும் பேச்சின் தோரணையும் அவனுடைய உள்ளத்தில் சிறியதொரு நம்பிக்கைச் சுடரை உண்டாக்கியிருந்தன.

• • •

இரண்டாம் முறை படுத்த பிறகு வெகு நேரம் வந்தியத்தேவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்களினால் அவனுடைய உள்ளம் வெகுவாகக் குழம்பிக் கொண்டிருந்தது. நாலாம் ஜாமத்தின் ஆரம்பத்திலேதான் தூங்கினான்.

தூக்கத்தில் வந்தியத்தேவன் கனவு கண்டான். பாய்மரம் விரித்த சிறிய படகில் பூங்குழலியும் அவனும் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். நாலாபுறமும் கடல்; எங்கு நோக்கினாலும் ஜலம். இனிய பூங்காற்று. படகு அக் காற்றில் மிதப்பது போலப் போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியின் முகம் அழகே வடிவமாகப் பொலிந்தது. சுருண்டமயிர் நெற்றியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்புப் பறந்தது. எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதெல்லாம் வந்தியத்தேவனுக்கு மறந்து போய் விட்டது. பூங்குழலியுடன் படகில் போவதற்காகவே இத்தனை நாள் பிரயாணம் செய்து வந்ததாகத் தோன்றியது. ஒன்றே ஒன்று குறைவாயிருந்தது. அது என்ன? அது என்ன? ஆ! பூங்குழலியின் பாட்டு! சேந்தன் அமுதன் சொல்லியிருந்தான் அல்லவா?

"பெண்ணே! உன் பவழ வாயைத் திறந்து ஒரு பாட்டுப் பாடமாட்டாயா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன சொன்னாய்?" என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள். ஆகா! அந்தப் புன்னகை ஏழு உலகமும் பெறுமா?

"உன் கனிவாயைத் திறந்து ஒரு கீதம் இசைக்கமாட்டாயா என்றேன்."

"கீதம் இசைத்தால் எனக்கு என்ன தருவாய்?"

"உன் அருகில் வந்து உன் அழகிய கன்னத்தில்......"

பூங்குழலி உடனே தன் மடியிலிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்துக் கொண்டாள். கத்திபிடித்த கையை ஓங்கினாள்.

"இதோ பார்! அந்தப் பாய்மரத்துக்கு இப்பால் ஒரு அணுவளவு நீ வந்தாலும் உன்னை இந்தக் கத்தியால் குத்தி விடுவேன். கடல் மீன்கள் மிக்க பசியோடிருக்கின்றன!" என்றாள்.

கண்கள்

கே.டி. முகம்மத்


மொழி பெயர்ப்பு: **எஸ். வி. எஸ்.**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

“ஆமாம், இந்த என் பிச்சைப் பிழைப்பின் புறப்படலத்தில் ஒரு பெரிய ‘ஆனால்’ இருக்கிறது. என் பெண்மையில் மாசு படிந்திருக்கிறது. மாசு மறுவற்ற பெண்மையை உங்களுக்கு வழங்க முடியாது. நான் குருடியாக இருந்தாலும், உலகில் உயிர் வாழ விரும்பினேன். ஆனால் நான் ஏந்திய பிச்சைக் கலயம், நாள் முழுதும் திரிந்து பிச்சை எடுத்த பிறகும் காலியாகவே இருக்கும். இந்தப் பிச்சைப் பிழைப்பை நம்பி நானும் என் தாயாரும் வாழ்ந்தோம். ஆகவே, காலியாக இருக்கும் கலயம் எங்கள் காலி வயிற்றைப் பார்த்துப் பயங்கரப் பேய்ச் சிரிப்புச் சிரிக்கும்! என்ன செய்வது? ஆகவே, பயங்கர இரவு நேரங்களில், காமாந்தகாரர்களாக வரும் மனித விலங்குகளுக்கு இணங்க வேண்டியதாகத்தான் இருந்தது. நீங்கள் என்னைப் பார்த்து இப்பொழுது கோபப்படுவதில் பொருள் இல்லை; பயனில்லை ஒரு இள மங்கையின் பிச்சைப் பாத்திரத்தில், தர்மம் என்றபெயரில் யாருமே ஒரு செல்லாத சல்லி கூடப் போடுவதில்லை. ஆகவே, நீங்கள் முதல் முதலில் என்னிடம் இரக்கம் காண்பித்த போது, உங்களுக்கும் இத்தகைய எண்ணம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். அவ்விதம் நான் நினைத்ததற்காக என்னை மன்னிக்க வேண்டும். ஆனால் இன்று உங்கள் ஒருவரைத்தான் மனிதனாகக் கருதுகிறேன். உங்கள் மனிதத் தன்மைக்கு என் மரியாதையையும் வணக்கத்தையும் செலுத்துகிறேன்!” என்றாள்.

நான் ஒரு கண நேரத்துக்குத் திகைத்துப் போய்விட்டேன். சில நிமிஷ நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு, “லீலா, நீ கூறியவை அனைத்தும் மனிதனின் கீழ்த்தரமான சுயநலத்தைப் பற்றிய கதை! அதைப் பற்றி இனிமேல் நான் நினைக்கப்போவதே இல்லை” என்றேன். அவள் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு எங்களுக்குக் கல்யாணமாயிற்று. ஊரில் எல்லாம் அதுவே பேச்சாக இருந்தது. கடவுளின் பிரதிநிதிகள் ஒருவரும் இல்லாமலும், யாருடைய சிபாரிசுக்காகவும் காத்திராமலும் எங்கள் கல்யாணம் நிகழ்ந்தது. அவளும் நானும், (அதாவது லீலாவும் அப்துல்லாவும்) சேர்ந்து நின்று எங்கள் வாழ்க்கையில் நேரும் சகல சுக துக்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளும் பங்காளிகள் ஆகிவிட்டதாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம்.



இந்தக் கதை எழுதிய ஆசிரியர் ஜனாப் கே. டி. முகம்மத்.

இப்போது, எங்களைச் சுற்றியிருந்த மக்களின் சிரிப்பு இன்னும் பலத்தது. லீலாவும் அவளுடைய தாயாரும் என் வீட்டில் குடியேறியபோது, அவர்கள் சிரிப்பு கட்டுக்கடங்காமல் போய்விட்டது.

சமுதாயக் கட்டுப்பாடுகளைப் பாதுகாக்கும் தர்மகர்த்தாக்களா

கத் தங்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளும் சில பிரகிருதிகள் எங்களைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கத் தலைப்பட்டனர். இந்தக் காதலுக்கும் கல்யாணத்துக்கும் அடிப்படையில் இரண்டு காதலினால் கொந்தளிக்கும் உள்ளங்கள் இருக்கின்றன என்பதை மக்கள் உணரவே இல்லை. நான் லீலாவை உற்சாகமூட்ட, "லீலா, யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் சிரிக்கட்டும். அப்படிச் சிரிக்க அவர்களுக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்" என்பேன்.

நாங்கள் குடித்தனம் நடத்தத் தொடங்கினோம். எங்கள் வாழ்க்கை ஒரே இன்பகரமான இல்லறம் என்று நான் சொல்லத் தயாராய் இல்லை. ஆண் பெண் ஆகிய இரு உள்ளங்கள் ஒத்துழைக்கும் ஒரு அபூர்வ வெறியாகத்தான் இருந்தது, எங்கள் வாழ்க்கை. சமூகக் கட்டுப்பாடுகளும், மதாசாரங்களும் எங்களைப் பழி வாங்கப் பார்த்தன. ஆகவே, எங்களால் சந்தோஷமாக வாழ முடியவில்லை. சந்தோஷமாக வாழ முடியும் என்று கற்பனையில்கூட நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் நாங்கள் இவ்வுலகில் வாழ விரும்பினோம்; அதற்கு எத்தனை இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் அவற்றைத் தைரியமாக ஏற்கத் துணிந்திருந்தோம்!

சில மாதங்களுக்குப் பிறகு லீலா தாய்மை அடையப் போகிறாள் என்னும் விஷயம் தெரிய வந்தது. நான் ஒரு மனிதக் குரங்காக இருப்பதும், லீலா குருடியாக இருப்பதும் எங்களுக்கு ஒரு குழந்தை பிறப்பதில் தடையாக இருக்கவில்லை. நான் என் வாழ்க்கையில் இது வரையில் கண்டறியாத இன்பங்களை நுகர்ந்தேன். முதலில் நான் காதலன் ஆனேன்; பிறகு கணவன் ஆனேன்; இப்பொழுது தந்தையாகப் போகிறேன்! ஆகா! கடவுளின் மகிமையே மகிமை! கடவுளின் கருணையே கருணை! லீலாவின் ஒளியிழந்த கண்கள் வாழ்க!

லீலா, குழந்தை பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நோயுற்று, படுத்த படுக்கையாகி விட்டாள். நான் டாக்டரை வரவழைத்துப் பார்க்கச் செய்தேன். அவர் லீலாவின் உடம்பைப் பார்த்தார். "கவலைப்படும் அளவுக்கு ஒன்றுமில்லை; மருந்து தருகிறேன், குணமாகி விடும்" என்றார் டாக்டர். பிறகு கொஞ்ச நேரம் கழித்து, "இவள் பிறந்ததிலிருந்தே குருடியா, என்ன?" என்று கேட்டார். நான் "ஆமாம்" என்று கூறியதும், அவள் கண்களை மற்றும் ஒரு முறை பரிசோதித்து விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம், "ஒரு ஆப்பரேஷன் மூலம், இவளுக்குக் கண் பார்வை கொடுக்க முடியும். ஆனால் இப்பொழுது, இந்த நிலையில் செய்ய முடியாது. பிரசவமாகி உடம்பு குணமாகட்டும், பார்த்துக் கொள்ளுவோம்!" என்றார்.

டாக்டரின் இம்மொழிகள் என் இருதயத்தை, என் இளமையை, என் உயிரையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. லீலாவின் கண்களுக்குப் பார்வை அளிக்கிறாராமே! அப்படி அவள் பார்வை பெற்றால், என்னைப் பார்க்க நடுங்குவாளோ? தன் அன்புக்குகந்த 'இதயம் படைத்த மனிதன், இரக்கம் கொண்ட மனிதன்' என்று கருதி வந்த என்னைப் பார்க்க நடுங்குவாளோ? பார்வை பெற்ற நிமிஷத்திலிருந்து என்னையும் அவள் நேசிப்பாளா? எனக்கும் மரியாதை செலுத்துவாளா? நான் டாக்டருக்கு என்ன பதில் சொல்லுவது? 'ஐயா, டாக்டர் ஐயா! அவள் கண்கள் பார்க்கும் சக்தியே பெறவேண்டாம்!' என்று கத்தி விட முயன்றேன். ஆனால் நான் என்ன சொன்னேன் தெரியுமா? "லீலா, உன் குருட்டுக் கண்களையும் குணப்படுத்தலாம் என்று டாக்டர் சொல்லுகிறார்" என்றேன்.



இந்த மொழிகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தேன் யந்திரம் மாதிரி. ஆம், நான் எப்படி என் நிலைமையை அவனுக்கு விளக்குவது? அவன் கண் பார்வை பெற்றுனாளுல், என் வாழ்க்கை என்னும் பசுமரத்தை ஆணி வேருடன் கல்லி எடுத்து வெந்நீரைக் கொட்டுவது போலாகும் என்று எப்படிச் சொல்வது? ஆனாலும் ஒரு மனிதன் தன் கண் பார்வையைக் காப்பாற்றிக் கொள்ள எத்தகைய தியாகம்தான் செய்யத் துணிய மாட்டான்! அப்படி யிருக்கும்பொழுது, பிறவிக் குருடியாக இருந்தவள் கண் பார்வை பெறுவாள் என்றால் அது எத்தனை பெரிய பாக்கியம்!

எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! ஆனால் லீலா, என் உள்ளத்தை உணர்ந்த லீலா. என்னுடைய சுபாவம், பாவம்! எத்தகையது என்று அறியாள். ஆகவே, அவள், "கண் பார்வை பெற முடியுமென்றால் எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. உங்களுக்குச் சந்தோஷமாக இல்லை? நான் உங்களைப் பார்க்கக் கொடுத்து வைத்தால், நீங்களும் என்னை அதிகமாகக் காதலிப்பீர்கள் இல்லையா?" என்றாள்.

உடல் சோர்வுற்ற இந்த நிலைமையிலும், அவள் முகத்தில் அமைதியும் திருப்தியும் நிலவியது. புது வாழ்க்கை மலரப் போகிறது என்கிற எண்ணத்தின் விளைவோ?



டாக்டர் என்னிடம் மருந்தை எழுதிக் கொடுத்து, எப்படிக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டுப் போனார். போகும்போது, "பிரசவமாகி, அவள் உடல் நிலை எப்பொழுதும் போல் ஆன பிறகு என்னிடம் வா! அப்பொழுது அந்தக் கண் ஆப்பரேஷன் பற்றி இன்னும் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்" என்று கூறி விட்டுப் போனார்.

லீலா அமைதியாக இருந்தாள்; ஆனால் என் உள்ளத்தில் பெரும் புயல் வீசிற்று. என் உள்ளத்தில் பயங்கர எண்ணங்கள் கொழுந்து விட்டு எரியத் தொடங்கின. என் வீட்டு வராந்தாவின் ஒரு கோடியில் போய் உட்கார்ந்து ஏதேதோ எல்லாமோ நினைத்தேன். இத்தனை நாளும் இந்தச் சிறு குடிசையில்தான் என் மனசு அமைதியைப் பெறுவது வழக்கம். அந்த அமைதியும் இப்பொழுது நிலைகுலைந்து அழிந்து போகும் போலிருந்தது—ஆமாம், என் உலகம் மிக மிகச் சிறியது! உலகமெல்லாம் இந்த என் சின்னஞ் சிறு வீடுதான்!

"டாக்டர்! முடியவே முடியாது! லீலாவுக்குக் கண் பார்வை கொடுக்க அனுமதிக்கவே மாட்டேன். ஓ, டாக்டர்! என்னை வெறுக்கும் விரோதிகளுடன் நீங்களும் சேர்ந்து கொண்டு என்னைக் கொல்லப் பார்க்கிறீர்கள். ஆனால் நான் உங்களை முதலில் கொன்று விடுகிறேன்.

"ஆம், நீங்கள் ஏன், என் வாழ்க்கையில் குறுக்கிட்டீர்கள்? இல்லை, மன்னிக்கவும். உங்களைக் குற்றம் சொல்லக் கூடாது. வியாதி வந்த இடத்து, குணப்படுத்த வேண்டியது தங்கள் கடமை. கண் குருடு மிகவும் பயங்கரமான வியாதி. அதைப் போக்காமல் அசிரத்தையாக இருப்பது தகாது. ஆகவே, நீங்கள் அவளுக்குக் கண் பார்வை அளியுங்கள். என் வாழ்க்கை வரலாறு என்ன வென்று தங்களுக்குத் தெரிய முடியாது. ஆகவே லீலா பார்க்கும் சக்தியைப் பெறட்டும். அது மட்டும் அல்ல; ஒவ்வொரு மனிதனும் கஷ்டங்களைத் தாங்குவதற்குப் பெற வேண்டிய அந்தத் திட சித்தத்தையும் தைரியத்தையும் அவள் பெறட்டும். ஆனால் அதற்கு முன் நான் மண்ணோடு மண்ணாகிப் போகிறேன். ஆமாம், 'குரங்கு-மனிதன்' என்றால் எப்படி யிருப்பான் என்று அவள் அறியும் சக்தி பெறுமுன் நான் ஒரு பிடி சாம்பலாகிப் போய்விட வேண்டும். பிறகு அவள் நினைவில் வாழ்வேன். அவளுடைய அன்புச் செல்வத்தைப் பெற்ற செல்வந்தனாக அவள் நினைவில், வாழ்வேன். ஆகவே, இப்பொழுது என்னிடம் கொண்டிருக்கும் அன்பும், என்னில் அவள் பாக்

கும் அழுகும் என்றும் அறியாமல் இருக்குமா? அதற்கு என் இதயம் ஏங்குகிறது; என் உள்ளம் அழுகிறது.''



லீலா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். முறைப்படிக் கல்யாணம் செய்து கொள்ளாமல் பெற்ற குழந்தையைப் பார்க்கச் சமுதாயம் கூசியது. சிலர் கழுதைகள் மாதிரி பலமாகச் சிரித்தனர். விகார உருவம் படைத்த தந்தைக்கும், குருட்டுத் தாய்க்கும் பிறந்த குழந்தைக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியவில்லை. பாவம்! அது தோற்றத்தில் லீலாவையும், கண் பார்வையில் என்னையும் 'கொண்டி'ருந்தது!

லீலா பரிபூரணமாகக் குணமடைந்து விட்டாள். இத்தனை நாளும் என் சுயநலம் அடக்கி அமுக்கி வைத்திருந்த விஷயத்தை அவள் நினைவுறுத்தினாள். "நாம் போய் டாக்டரைப் பார்ப்போமா?" என்று கேட்டாள். அவள் கேட்ட அந்த வார்த்தைகள் என் உள்ளத்தில் எவ்வளவு பெரிய புயலைக் கிளப்பி விட்டது என்பது அவளுக்குத் தெரியாது. நான் துணிந்து ஒரு பொய்யை அவளிடம் கூறினேன். "ஆமாம், அதைப் பற்றி மறந்தே போய் விட்டேன். நான் இன்று போய் விசாரித்து விட்டு வருகிறேன்" என்றேன்.

நான் கூறுவது முற்றும் பொய் என்பது எனக்குத் தெரியுமல்லவா? அதனால் அவ்வார்த்தைகள் கூறியபோது நடுக்கடலில் தத்தளிக்கும் மரக்கலம்போல் என் மனசு தத்தளித்தது. எனினும் வெளியிலே போய் விட்டு, இரண்டு மணி நேரம் கழித்து உள்ளே வந்து "லீலா! டாக்டர் செத்துப் போய் விட்டார்" என்றேன். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடிந்தது. ஏன், அதுகூடச் சொல்லமுடியாதோ என்று நினைத்தேன். அது மட்டுமல்ல.

கணவன் என்ற முறையில், லீலாவின் கண் பார்வையைக் கொடுப்பதாக வாக்களித்த அந்த நல்ல டாக்டர் இறந்து விட்டார் என்ற விஷயத்தைக் கேட்டு வருத்தப்படுவதாக நடிக்கவாவது வேண்டாமோ? அதுவும் என்னால் செய்ய முடியவில்லை.

என் சுயநலமும் கொடுமையும் காரணமாக நான் சிருஷ்டித்த 'டாக்டர் இறந்து விட்டார்' என்ற பொய்யைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. அந்தப் பொறுப்பு என்னால் தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. என்னுடைய க்ஷேமத்துக்காக நான் எதைச் செய்தேனோ, அதுவே, என்றென்றும் வாழ்வில் அமைதியைக் காண முடியாதபடி செய்து விட்டது!

இப்படி அமைதியிழந்து, வேதனையுற்ற நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்தன.

ஒரு நாள் நான் வெளியே போய் விட்டு வீட்டுக்குத் திரும்பிய போது, வீட்டில் இதயத்தைப் பிளக்கும் பரிதாபக் காட்சியைக் கண்டேன்.

லீலாவின் அறையிலிருந்த தாமிர பாத்திரத்தை, லீலாவின் தாயார் அன்று எடுத்து ஒதுப்புறமாக வைக்கவில்லை. ஆகவே குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு, தன் தடியைக்கூட எடுத்துக் கொள்ளாமல், குழந்தையின் தொட்டிலை நோக்கி ஓடி வந்த லீலா அந்தப் பாத்திரம் இடறிக் கீழே விழுந்திருக்கிறாள். விழுந்து வாசற்படியின் மீது மோதிக் கொண்டு விட்டாள். நான் அவளை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன்.

இப்பொழுது எங்கள் வாழ்க்கை பெரும் சோதனைக் கட்டத்திலிருந்தது. இந்த நிலைமையிலும் உங்களுக்குச் சிரிக்க வேண்டும் போல் தோன்றுகிறதா? எனினும் இப்பொழுது யாரையும் குறை கூறவோ



உபாத்தியாயர் :—ராமு, நாலு மாம்பழத்தில் உனக்குக் கால் பங்கும் உன் நண்பனுக்கு முக்கால் பங்கும் கொடுத்தால் உனக்கு என்ன வரும்?

ராமு (வேகமாக எழுந்து) :—இது தெரியாதா ஸார்! கொடுத்தவர் மீது கோபம் வரும்!

குற்றம் சொல்லவோ நான் விரும்பவில்லை. ஆமாம் என், குறைகளையும் குற்றங்களையும் பொருட் படுத்தத்தான் யார் இருக்கிறார்கள்?

லீலா—என் உயிர்! என் வாழ்வு! என் உலகம்!!! இவற்றையெல்லாம் இழந்துவிடும் நிலையிலிருக்கிறேன். இந்த நிலைமையில் யார் சிரித்தால் என்ன?

ஒரு டாக்டர் என்னை அழைத்து, 'அவள் ரொம்பவும் பலமாக விழுந்திருக்க வேண்டும். காயம் அவள் உயிருக்கே ஹானி விளைவிக்கக் கூடியதாக இருக்கும் போலிருக்கிறது!'' என்றார்.

நான் லீலாவிடம் போனேன். வலிதாங்க முடியாமல் படுக்கையில் சுருண்டு கிடந்தாள். நான் அவளிடம் பேசினேன். அவள் விம்மி அழுதுகொண்டே, "வந்துவிட்டீர்களா? நான் போகிறேன்! என் கண்களால் உங்களை மட்டும் ஒரு முறை பார்க்கக் கொடுத்து வைத்திருந்தேனானால்......" என்று ஏங்கினாள்.

அவளுடைய கடைசி விருப்பம் என் பொறுமையின் கடைசிச் சோதனையாகத் தோன்றியது! அவள் தன் கண்களைக் குணப்படுத்துவதாகக் கூறிய அந்த நல்ல டாக்டர் இறந்து விட்டாரே என்றுதான் இத்தனை நாளும் ஏங்கிக் கொண்டிருந்தாளோ என்ற ஐயம் என் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் லீலா அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.

"லீலா! கண்களால் பார்க்க வேண்டும் என்று நீ விரும்புவது அப்படியொன்றும் பெரிய காரியமில்லை. உன்னுடைய பரந்த பரிசுத்தமான இதயம் கொண்டு என்னைப் பார்க்கவில்லையா? இந்த உலகில் நீ ஒருத்திதான் சரியாக என்னைப் பார்த்திருக்கிறாய். கண்பெற்ற ஜனங்கள் கண்களால் ஒருவரையொருவர் சரியாகப் பார்த்துப் புரிந்து கொள்வதில்லை. லீலா! என் கண்ணே, நீ அமைதியாய் இரு. கூடிய சீக்கிரத்தில் நீ சுவஸ்தமாகி விடுவாய்" என்றேன்.

லீலா என் வார்த்தைகளைக் கேட்டாள். பிறகு கொஞ்ச நேரத்துக்கு அமைதி நிலவியது. தேஜோமயமாக விளங்கிய சூரியன் மேல் திசையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். லீலா அழத் தொடங்கி விட்டாள். நான் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் அமுத்திப் பிடித்துக் கொண்டிருந்த பயங்கர ரகசியம் (டாக்டர் இறந்து விட்டார் என்று நான் கூறிய பொய்) இதயத்தைப் பிளந்து கொண்டு வெளி வரப் பார்த்தது. என்னால் அங்கே ஒரு கணம் கூட நிற்க முடியவில்லை. லீலாவின் தாயார் அங்கே வந்து குழந்தையை லீலாவின் பக்கத்தில் கிடத்தினாள். குழந்தை அந்தப் பயங்கரச் சூழ்நிலையைத் தாங்க முடியாமற் தானோ என்னவோ அழத் தொடங்கியது. லீலாவின் தாயாரும் அழத் தொடங்கினாள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

லீலாவின் தூய ஆத்மா மெள்ளப் பறந்து சென்று விட்டது. அப்போது நான் என்ன செய்தேன் என்பதே எனக்கு நினைவில்லை. ஒரு இதயத்தின் துடிப்பு நின்றது; வேறு சில இதயங்கள் வெடித்தன!

சூரியன் அஸ்தமித்து விட்டான். இருள் கனத்துக் கொண்டு வந்தது!

*

என் பயங்கர கோர வடிவத்தினுள்ளே, என் உள்ளத்திலே கொந்தளிக்கும் உணர்ச்சி வேகங்களை உணராதவர்களும், என் விசித்திரக் காதல் கதையை அறியாதவர்களும் என்னைப் பார்த்தால் இன்னும் சிரிக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் நானோ, சிற்சில சமயங்களில், "நான் குருடனாக இருந்திருந்தால் என் கதை எப்படியிருந்திருக்கும்" என்று எண்ணி எண்ணி வியக்கிறேன்!



தையற்காரன்:—மூன்று மாதக் குழந்தைக்குத்தானே சட்டை தைக்க வேண்டும் என்கிறீர்கள்? அதற்கு என்னத்துக்குங்க இரண்டு கெஜம் துணி? அரை கெஜம் போதுமே!

அவர்:—அது சரிதானப்பா! நீ சட்டை தைத்துக் கொடுக்கும்போது அது குழந்தைக்குச் சரியாயிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இரண்டு கெஜமாகத் தருகிறேன்!



பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை ஆண்ட போது நம் மக்களுக்கு ராவ்பகதூர், திவான் பகதூர் என்ற பல கௌரவப் பட்டங்களை வழங்கினார்கள். அந்தப் பட்டங்களை இப்பொழுது யாரும் உபயோகப்படுத்துவதே இல்லை. அப்படி உபயோகப் படுத்துபவர்களையும் ஜனங்கள் அவ்வளவாக மதிப்பதில்லை. அந்தப் பட்டங்கள் அவர்கள் காலத்திலேயே மதிப்பிழந்து மங்கி மறைந்து விட்டது. ஆனால் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் நம் தமிழ் நாட்டு மன்னர்கள் வழங்கிய பட்டங்கள் சில இன்னமும் மறையாமல் இருக்கின்றன! இன்றைக்கும் அந்தப் பட்டங்களைத் தங்கள் பெயர்களுக்கு முன்னால் வைத்துக் கொண்டு பெருமைப்படுகிறார்கள். அவர்களுக்கு ஜனங்களும் மதிப்புக் கொடுக்கிறார்கள்.


நமது தமிழ் நாட்டில் "பழைய கோட்டைப் பட்டக்காரர்" என்று பிரக்யாதியுடன் இருந்து வந்த ராவ்பகதூர் ஸ்ரீ என். நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்களைச் சென்ற தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். பட்டக்காரரின் குடும்பம் சுமார் இரண்டாயிரம் வருஷத்திய சரித்திர சம்பந்தம் உடையது. அவர்களுடைய முன்னோர்கள் பாண்டிய மன்னரிடம் சேனாபதியாக இருந்து தொண்டாற்றியவர்களாம். அதனால் பாண்டிய மன்னர் 'பட்டக்காரர்' 'மன்றாடியார்' 'உத்தமக்காமிண்டன்' 'நல்ல சேனாபதி' முதலிய கௌரவப் பட்டங்களை அவர்களுக்கு அளித்தாராம். இந்தப் பட்டங்களையெல்லாம் இப்பொழுதும் தங்களுடைய பெயர்களில் அந்தக் குடும்பத்தார் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

கவுண்டர்கள் எனப்படும் கொங்கு நாட்டின் வேளாள சமூகத்தினரின் சாதித் தலைவர் பட்டக்காரர். ஏராளமான பூதனமும், கணக்கற்ற கோதனமும் வேறு பல தனங்களும் படைத்தவர். கவுண்டர்களுக்குள் சமூக விஷயங்களில் அவர் வைத்ததுதான் சட்டம். தம் சொந்த முயற்சியினால் இந்தியாவிலேயே மிகச் சிறந்த கால் நடைப் பண்ணையை நடத்தி இணையற்ற புகழ்பெற்றவர்.

அவர் காலத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் எந்தக் காரியத்தையும் அவருடைய ஆலோசனையின் பேரில்தான் செய்வார்களாம். சென்னை சட்டசபை அங்கத்தினரா யிருந்து அவர் தொண்டாற்றிய போது சட்டசபையில் எல்லோரும் இங்கிலீஷில்தான் பேசுவார்களாம். ஆனால் பட்டக்காரர் மட்டும் தமிழிலேயே பேசி அமர்ப்பாராம். இப்படித் தம் வாழ்நாள் எல்லாம் பொது சேவைக்கும் கால் நடை வளர்ப்புக்கும் பாடுபட்டு மறைந்த பழைய கோட்டைப் பட்டக்காரருக்கு ஒரு நல்ல ஞாபகார்த்தம் அமைக்கக் கோவை ஜில்லாப் பிரமுகர்கள் விரும்பினார்கள்.

காலஞ்சென்ற ஸ்ரீ வி. ஸி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் தலைமையில் சென்ற 1947-ம் வருஷம் ஒரு கமிட்டி அமைத்தார்கள். அந்தக் கமிட்டி பட்டக்காரர் ஞாபகார்த்தமாக காங்கேயத்தில் உயர்நிலைப் பள்ளி கட்டுவது என்று தீர்மானித்தது. கட்டிடத்துக்குச் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் வேண்டும் என்று திட்டமிட்டு மேற்படி கமிட்டியார் பொது ஜனங்களிடம் நிதி திரட்டினார்கள். அப்படித் திரட்டிய தொகை பதினேழாயிரம் ரூபாய் தான். இந்தச் சொற்ப தொகையை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தபோது காலஞ்சென்ற பட்டக்காரரின் குமாரர் ஸ்ரீ நல்ல சேனாபதி மன்றாடியார் பாக்கி ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாயையும் கொடுத்து உதவ முன் வந்தார்கள். ஸ்ரீ நல்ல சேனாபதி மன்றாடியார் அவர்களின் பொருள் உதவியினால் ராவ்பகதூர் என். நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் ஞாபகார்த்த உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டி முடித்தனர்.

பட்டக்காரரின் ஞாபகார்த்த உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்





பட்டக்காரரின் ஞாபகார்த்தத் திருவிழாக் கூட்டத்தில் ஒரு பகுதி

சென்ற மாதம் 24வ. மேற்படி கட்டிடத் திறப்பு விழாவை ஒரு பெரிய கோலாகல வைபவமாகவே காங்கேயம் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பள்ளிக் கட்டிடங்களுக்கு முன்னால் சுமார் மூவாயிரம் பேர் உட்காருவதற்கு வசதியான பந்தல் போடப் பட்டிருந்தது. பந்தலுக்கு உள்ளும் பந்தலுக்கு வெளியிலும் ஏராளமான ஜனங்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்து கூடியிருந்தனர். "ஒரு பள்ளிக்கூடத் திறப்பு விழாவுக்கு இவ்வளவு பெரிய கூட்டமா!" என்று என் அருகிலிருந்தவரைப் பார்த்துக் கேட்டேன்.

"பள்ளிக்கூடத் திறப்பு விழாவா! எங்கள் பட்டக்காரரின் ஞாபகார்த்தத் திருவிழா ஸார்!" என்று சொல்லி நிமிர்ந்து உட்கார்ந்தார் அந்தக் கொங்கு நாட்டுக் கவுண்டர். பழைய கோட்டைப் பட்டக்காரரிடம் அந்தக் கவுண்டர் காட்டிய மரியாதையை நினைத்துச் சந்தோஷப்பட்டேன்.

சரியாகப் பதினொன்றரை மணிக்கெல்லாம் திறப்பு விழாத் தலைவர் சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா வந்து சேர்ந்தார். மேள வாத்தியத்தின் மங்கள ஒலியுடன் கவர்னர் பந்தலுக்குள் நுழைந்ததும் ரோஜா மலராலும் மல்லிகைப் புஷ்பத்தாலும் மிகுந்த வேலைப்பாடுகளுடன் கட்டியிருந்த அழகிய மாலையை ஸ்ரீ நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் கவர்னருக்குச் சூட்டி வரவேற்றார். கழுத்து நிறைந்த அந்த மாலையைக் கழற்றுமலேயே கவர்னர் பவநகர் மகாராஜா அவர்கள் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கைகூப்பி வணங்கிய காட்சி மிக அழகாயிருந்தது.

கவர்னர் மேடை மீது வந்து அமர்ந்ததும் அந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இருவர் கடவுள் வணக்கம் பாட விழா ஆரம்பமாயிற்று. காலஞ்சென்ற பட்டக்காரரின் பெயரையும் பழைய கோட்டைப் பட்டக்காரர் குடும்பத்தின் கௌரவத்தையும் குறைவின்றிக் காப்பாற்றி வரும் ஸ்ரீ நல்ல சேனாபதி உத்தமக் காமிண்ட மன்றாடியார் அகமும் முகமும் மலர கவர்னரை வரவேற்றுப் பேசினார். தமது தந்தையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கும் பள்ளிக் கூடக் கட்டிடங்களைச் சுற்றி இருபது ஏக்கரா நிலப்பரப்பு இருப்பதைச் சுட்டிக் காட்டினார். இந்த நாட்டு மக்கள் எல்லாரும் விவசாயிகள் ஆனதால் இந்தப் பள்ளிக்கூடத்தில் விவசாயக் கல்வியைக் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாரின் ஞாபகார்த்தக் கமிட்டித் தலைவரான ஸ்ரீ வி. சி. சுப்பையாக் கவுண்டர் பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பொருளுதவி செய்தவர்களை எல்லாம் பாராட்டினார். இந்த ஞாபகார்த்தக் கட்டிடத்தைக் கட்டிமுடிக்க ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்த ஸ்ரீ நல்ல சேனாபதி பட்டக்காரரின் வள்ளன்மையைப் புகழ்ந்தார். பட்டக்காரரின் ஞாபகார்த்தப் பள்ளிக்கூடக் கட்டிடத்தைக் கோவை ஜில்லா போர்டாரை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டும் "ராவ் பகதூர் ஸ்ரீ நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் ஞாபகார்த்த உயர் நிலைப் பள்ளி" என்ற பெயரிலேயே இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அப்படி அவர் கேட்டுக் கொண்ட போது கூடியிருந்த மக்கள் அதைக் கரகோஷம் செய்து ஆமோதித்தனர்.

கோவை ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டர் ஜில்லா போர்டின் சார்பாக பட்டக்காரரின் ஞாபகார்த்தப் பள்ளிக்கூடக் கட்டிடங்களை ஏற்றுக் கொண்டார்.

பிறகு விழாத் தலைவர் கவர்னர் பவநகர் மகாராஜா பேசினார். இப்பொழுது பட்டக்



மாட்டுத் தொழுவத்தில் கவர்னர்

காரராக இருக்கும் ஸ்ரீ நல்ல சேனாபதி மன்றாடியாரைப் பார்த்து, "உங்கள் தந்தைக்கு இதைவிடச் சிறந்த ஞாபகார்த்தத்தை நீங்கள் நிறுவ முடியாது" என்று கவர்னர் பவநகர் மகாராஜா கூறியபோது சபையோரும் பட்டக்காரரும் கைகொட்டி மகிழ்ந்தனர்.

சம்பிரதாயப்படி கட்டியிருந்த சிவப்பு நாடாவை ஒரு வெள்ளிக் கத்தரிக்கோலால் கவர்னர் வெட்டி விட்டுப் பள்ளிக்கூடத்தைத் திறந்துவைத்தார். பட்டக்காரரின் ஞாபகார்த்தக் கட்டிடத் திறப்பு விழா இனிது முடிந்தது.

பின்னர், பட்டக்காரருக்கு இதைவிடச் சிறந்த ஞாபகார்த்தமாக விளங்கிவரும் மாட்டுப் பண்ணையைப் பார்ப்பதற்காகக் கவர்னர் பழைய கோட்டைக்குச் சென்றார்.

* * *

மத்தியானம் மூன்று மணி சுமாருக்கு ஸ்ரீ நல்ல சேனாபதி மன்றாடியார் அவர்கள் கவர்னரை அழைத்துக் கொண்டு தம்முடைய மாட்டுப் பண்ணைக்குள் நுழைந்தார்.

அந்தப் பண்ணைக்குள் நுழைந்ததும் சிம்மம் கர்ஜிப்பதுபோல ஒரு காளை "அம்...ம்...மா!" என்று கர்ஜனை புரிந்தது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மறுகணம் இன்னும் சில காளைகள் 'புஸ்' என்று சீறிக்கொண்டு "அம்...ம்...மா!" என்று பயங்கர கர்ஜனை புரியத் தொடங்கி விட்டன. நான் நடுநடுங்கிப் போய்ப் பட்டக்காரரின் கையைப் பிடித்துக் கொண்டேன். "பயப்படாதீர்கள்! எல்லாக் காளைகளையும் இரண்டு கயிறுகள் போட்டுக் கட்டியிருக்கிறது" என்றார் பட்டக்காரர். "அப்பாடா!" என்று மூச்சு விட்டு நிமிர்ந்து பார்த்தேன். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரே மாடுகள்! அடடா! வரிசை வரிசையாக அந்த மாடுகளைக் கட்டியிருக்கும் அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

தஞ்சாவூர் பெரிய கோயில் நந்தி உயிர் பெற்று எழுந்ததுபோல இருந்த ஒவ்வொரு காளையையும் பார்த்தபொழுது என்னுடைய கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. ஒரு தடவை கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தேன். என்னைப் போலவேதான் கவர்னர் அவர்களும் மெய்ம்மறந்து ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிக் கிடந்தார்கள் என்பதை அவர் நிற்கும் நிலையிலிருந்து தெரிந்து கொண்டேன். தாம் கவர்னர் என்பதையே மறந்து விட்டார். ஒரு பக்கத்தில் கட்டியிருந்த பெரிய காளைகளைப் போய்ப் பார்த்தார். வேறு பக்கத்திலிருந்த பசுக்களைப் போய்ப் பார்த்தார். சின்னஞ் சிறு பாலர்களைப்போலத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த கன்றுக் குட்டிகளின் கூட்டத்தைப் பார்த்தார். தாம் வேகாத வெய்யிலில் வியர்வை சொட்ட நிற்பதை மறந்து விட்டு "இந்த மாடுகளை எல்லாம் இப்படி வெய்யிலில் கட்டி யிருக்கிறீர்களே!" என்று அநுதாபத்துடன் கேட்டார்.

"மாடுகளை நாங்கள் கொட்டகைக்குள் கட்டுவதே இல்லை. திறந்த வெளிகளில்தான் கட்டுவோம். நல்ல வெய்யிலிலும் சரி, கொட்டும் மழையிலும் சரி, மாடுகள் திறந்த வெளியிலேதான் கட்டியிருக்கும். அப்படி இயற்கையோடு இயைந்து வளர்வதினாலேயே எங்கள் மாடுகள் நன்றாக இருக்கின்றன" என்றார் பட்டக்காரர்.

அப்பொழுது பிறந்த கன்றுக்குட்டி முதல் பெரிய காளைகள் வரை கட்டியிருந்த இடத்துக்குக் கவர்னரை அழைத்து வந்தார் பட்டக்காரர். காங்கேயம் காளைகளின் ஜாதி விசேஷத்தைப் பற்றிக் கவர்னருக்கு எடுத்துச் சொன்னார். செக்கச் செவேலென்று இருந்த கன்றுக் குட்டியைக் காண்பித்து இப்படித்தான் காங்கேயம் கன்றின் நிறம் பிறந்த பொழுது இருக்கும் என்றார். வேறு பல கன்றுகளைக் காண்பித்து இது இரண்டு மாதக் கன்று, இது மூன்று மாதக் கன்று என்று சொல்லிக் கொண்டே வந்து சற்று மயிலை நிறமாக இருந்த ஒரு மாட்டைக் காண்பித்து இது நாலு மாதக் கன்றுக் குட்டி என்றார்.

பிறகு முழு வளர்ச்சி பெற்ற காங்கேயம் காளையைக் காண்பித்தார். அடடா! அதன் அழகை என்னவென்று சொல்லுவேன்!

சுமார் ஆறடி உயரமும் எட்டடி நீளமும் உள்ள கம்பீரமான நந்திபோல 'ஜம்' மென்று நின்று கொண்டிருந்தது. நீண்டு உருண்ட அழகான தலை. விசாலமான நெற்றி. குறு குறுப்பான கண்கள். சற்று முன் வந்து சாய்ந்த கனமான கொம்புகள். நல்ல சதைத்திரண்ட திமில். முளைக்காத மிளகுபோல் கண்கள். கூடிய வட்டமான உடம்பு. அகன்ற மார்பு. நிமிர்ந்து நிற்கும் கொண்டை. உறுதியான குளம்புகளுடன் கூடிய சற்றுக் குறுகிய கால்கள். பளபள வென்று கருப்பும் வெள்ளையும் கலந்த வெல்வெட்டுபோன்று சன்னமயிர் நிறைந்த உடல். அடர்த்தியான குஞ்சம் போன்ற

"மிக அழகான காளை. நான் இதுபோல் பார்த்ததே இல்லை"



கருப்பு மயிருடன் கூடிய நீளமான வால் நிலத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஒரு கைதேர்ந்த சிற்பி தம் வாழ்நாள் எல்லாம் கஷ்டப்பட்டு உருவாக்கிய நிஷபச் சிற்பம் போலக் காட்சி அளித்தது அந்தக் காங்கேயம் காளை. அதைப் பார்த்து மெய்மறந்து நின்று விட்டார் கவர்னர்.

ஒரு சில நிமிஷங்கள் கழித்து "மிக அழகான காளை. நான் இது போல் பார்த்ததே இல்லை" என்று சொல்லி விட்டு மேலே மாடுகளைப் பார்த்துக் கொண்டே சென்றார் கவர்னர். பட்டக்காரர் காங்கேயம் காளையைப் பற்றிய விசேஷத்தையும் அதை வளர்த்துப் பழக்குவதற்குத் தாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்தையும் விளக்கமாகச் சொன்னார்.

சாதாரணமாக மூன்று வயது வரை மாடுகளை மேய்ச்சல் காடுகளில் வளர விடுவார்களாம். பிறகு, நாற்புறமும் நல்ல பந்தோபஸ்தான தொழுவத்தில் விட்டுக் காளைகளைக் கயிறு போட்டுப் பிடிப்பார்களாம். நீண்டகால அனுபவமும் நல்ல சாமர்த்தியமும் உள்ள ஆட்களால்தான் காளைமீது கயிறு போட முடியுமாம். அப்படிக் கயிறுபோடும்போது காளையின் துள்ளலினால் கயிறு அறுந்து விடுவதும் அதனால் ஆட்களுக்கு ஆபத்து ஏற்படுவதும் உண்டாம். அப்படிக் கயிறு போட்டுப் பிடித்த காளைகளுக்கு முதலில் முகரைக் கயிறு மட்டும் போடுவார்களாம். பிறகு மூக்கைக் குத்தி மூக்கணாங் கயிறு போட்டுக் காளைகளைக் கட்டிப் பிடித்துப் பழக்குவார்களாம்.

பண்ணையின் மத்தியில் ஒரு கொட்டகையில் முகரைக் கயிறு, மூக்கணாங் கயிறு, தலைப்புக் கயிறு, அலங்காரக் கயிறு முதலியவைகள் வைத்திருந்தன. அவைகளைப் பார்த்ததும் சிறு குழந்தைபோல ஆச்சரியப்பட ஆரம்பித்து விட்டார் கவர்னர். அங்கிருந்த ஒவ்வொரு கயிறாக எடுத்துப் பார்த்தார். அந்தக் கயிறுகள் முறுக்கியிருக்கும் அழகையும், அதில் முடிச்சுப் போட்டிருக்கும் விதத்தையும் கண்டு வியந்தார். "இந்தக் கயிறுகளை எல்லாம் நாங்களே தயார் செய்கிறோம். எங்கள் மாடுகளுக்கு நான் வெளியில் கயிறுகள் வாங்குவது கிடையாது" என்று பட்டக்காரர் சொன்னதும் கவர்னர் "நீங்கள் கயிறு தயார் செய்யும் விதத்தை நான் பார்க்க வேண்டும்" என்றார்.

உடனே அவருக்கு எதிரிலேயே பலமாதிரி கயிறுகள் தயாரித்துக் காண்பிக்கப்பட்டன. கத்தாழையை உலர வைத்து எடுத்த நார்களில் கயிறு திரித்துக் காண்பித்தனர். பனைமட்டையிலிருந்து கயிறு செய்யும் விதத்தைக் காண்பித்தனர். தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்து கயிறு முறுக்கும் முறையையும் காண்பித்தனர். இவைகளை எல்லாம் பார்த்த கவர்னர் கிராமக் கைத்தொழிலின் உயர்வையும் அதைப் போற்றி வளர்த்து வருவதையும் பற்றிப் பட்டக்காரரைப் புகழ்ந்து பாராட்டினார். முகரைக் கயிறு முடிச்சுப் போடச் சொல்லிப் பார்த்து வியந்தார். ஏதோ இந்திர ஜாலம் செய்வது போல ஒரே கயிற்றை வைத்துக் கொண்டு மூன்று முடிச்சுகள் போட்டு அற்புதமான முகரைக் கயிற்றைத் தயாரித்து விடுகின்றனர்.



பட்டக்காரர் ஸ்ரீ நல்லதம்பி மன்றாடியார் படமும் அவர் பெற்ற பரிசுகளும்

பிறகு பசுக்கள் இருக்கும் பகுதிக்கு வந்தோம். காங்கேயம் பசுக்களைப் பற்றிப் பட்டக்காரர் சொன்னார். காங்கேயம் பசுக்கள் சாகும் வரையில் கன்று போடுமாம். ஒரு பசு சுமார் 21 கன்றுகள் போடும் என்று சொன்ன போது கவர்னர் தம் அருகிலிருந்த பசுவைக் கருணையோடு தடவிக் கொடுத்தார். ஒரு பசு வருஷம் ஒன்றுக்கு சுமார் 5,000 பவுண்டு பால் கொடுக்குமாம். காங்கேயம் கன்றுகள் பிறக்கும்போதே சுமார் 50 பவுண்டு நிறை இருக்குமாம். காங்கேயம் பசுவின் பாலில் நிறைய கொழுப்புச் சத்து இருப்பதால் கன்றுகளுக்கு அதன் ஜீரண சக்திக்குத் தகுந்தபடி அளவுடன் பால் கொடுத்து வளர்க்க வேண்டுமாம். இல்லாவிட்டால் கன்று பாலை ஜீரணிக்க முடியாமல் வயிற்றளைச்சல் ஏற்பட்டுக் கஷ்டப்படுமாம். அப்படியும் ஒரு காங்கேயம் கன்று சுமார் 1,500 பவுண்டு பால் குடித்து வளருகிறது என்று சொல்லி அங்கிருந்த காளைக் கன்றை அன்போடு தூக்கி அணைத்துக் கொண்டார். பட்டக்காரருக்குத் தம்முடைய மாடுகள்மீது இருக்கும் உண்மையான அன்பு நிதர்சனமாகத் தெரிந்தது.

"மாடுகளுக்கெல்லாம் தீவனத்துக்கு என்ன செய்கிறீர்கள்? இந்தப் பக்கத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே கட்டாந்தரையாக இருக்கிறதே" என்று மிகுந்த கவலையுடன் கேட்டார் கவர்னர்.

"4,000 ஏக்கரா நிலத்தில் என் மாடுகளுக்காகவே புல் வளர்க்கிறேன். இந்த நாட்டு மண் வளம் விசேஷமானது. செம்மண்ணும் சுண்ணாம்புக் கற்களும் சேர்ந்து இருக்கின்றன. கொஞ்சம் மழை பெய்தால் கூட நன்கு ஈரம் காக்கும் தன்மையுடையது. அதில் 'கொளுக்கட்டைப் புல்' என்ற ஒரு வகைப் புல்லை

வளர்க்கிறேன். இந்தப் புல் நல்ல காய்ச்சல் தாங்கும். பல வருஷங்களுக்கு மழையில்லா விட்டால்கூட இந்தப் புல் சாவதில்லை. இப் புல் நல்ல ருசியாக இருப்பதால் மாடுகள் நன்றாகத் தின்கின்றன. இத்துடன் மேய்ச்சல் காட்டில் வெள்வேல மரங்களை வைத்துப் பயிர் செய்திருக்கிறேன். அந்த மரத்தின் காய்கள் மாடுகளுக்கு மிகச் சிறந்த உணவாகும். மாடுகளுக்கு மேனி மினு மினுப்பும் நல்ல புஷ்டியும் கொடுக்கும் சத்து அந்தக் காய்களில் ஏராளமாக இருக்கிறது'' என்று சொல்லி வெள் வேலங் காய்களையும் கொளுக் கட்டைப் புல்லையும் கவர்னருக்குக் காண்பித்தார் ஸ்ரீ நல்லசேனாபதி மன்றாடியார்.

பிறகு மாடுகளுக்குத் தீனி தயாரிக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே கோயில் கட்டுவதற்குப் பெரிய கருங்கல் உருளையை வைத்து மாடுகட்டி இழுத்துச் சுண்ணாம்பு அரைப்பார்களே, அது போலப் பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு முதலியவைகளைப் போட்டு அரைத்துக் கொண்டிருந்தார்கள். வரிசை வரிசையாகக் கருங்கல் தொட்டிகள் கணக்கில்லாமல் கட்டி வைத்திருந்தன. ஒவ்வொரு தொட்டியிலும் இரண்டு இரண்டு மாடுகளுக்கு ஒரு ஆள் வீதம் மாடுகளைப் பிடித்து வந்து தீனியைத் தின்னும்படி செய்து கொண்டிருந்தனர். மிக அழகான காட்சி அது.

பிறகு மாடுகளுக்குத் தண்ணீர் காண்பிக்கும் கிணற்றுக்கு அழைத்துப் போனார். சுமார் அறுபது அடி ஆழத்துக்குக் கீழே கொஞ்சம் தண்ணீர் தெரிந்தது. அதுவும் மலையைக் குடைந்து எடுத்த கிணறு. கிணற்றின் ஒரு பக்கத்தில் மாடுகள் இறங்கிப் போய் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக சரிவான வழி ஒன்றிருக்கிறது. இதற்கு 'வாவி' என்று பெயராம். இப்பொழுது வாவிகளில் தண்ணீர் கிடையாது. மாடுகளுக்குத் தண்ணீர்க் கஷ்டம்தான் அதிகமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்காகப் பட்டக்காரர், மோட்டார் கார்களில் வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து மாடுகளுக்குக் கொடுத்து வருகிறார்.

கடைசியில் மாட்டுப் பண்ணையுடன் இருந்த ஆட்டுப் பண்ணை குதிரைப் பண்ணை முதலியவைகளை எல்லாம் பார்த்து விட்டு மாலை ஆறு மணி சுமாருக்கு வெளியில் வந்தோம். பண்ணைக்குள் மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. பட்டக்காரரிடம் கவர்னர் விடைபெற்றுக் கொள்ளும்போது பட்டக்காரர் கவர்னருக்குத் தம்முடைய பண்ணைக் கென்று வைத்திருந்த சிறந்த பொலி காளைகளில் ஒன்றைப் பரிசாக அளித்தார். காளையின் தலைக் கயிற்றைப் பிடித்துப் பட்டக்காரர் கவர்னரிடம் கொடுத்தபோது காளை ஒரு துள்ளுத் துள்ளி 'உஸ்...' என்று சீறியது.



கவர்னருக்குப் பரிசளிக்கப்பட்ட காங்கேயம் பொலி காளை

''உம்; துள்ளாதே! இனி மேல் நான் தான் உனக்குச் சொந்தக்காரன்'' என்று கவர்னர் காளையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு அதன் தலைக்கயிற்றை ஒரு சொடுக்குச் சொடுக்கினார். அதைப் பார்த்ததும் அங்கிருந்தவர்கள் எல்லாரும் 'கொல்'லென்று சிரித்து விட்டனர். காளையும் அதைப் புரிந்து கொண்டது போல கவர்னரிடம் மிகச் சாதுவாக வந்து நின்று கொண்டிருந்தது.

''இந்தக் காளையின் விலை எவ்வளவு இருக்கும்!'' என்று பட்டக்காரரைக் கேட்டேன்.

''இது விலை மதிப்பற்ற காளை. இதற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம். கண்ணை மூடிக்கொண்டு பத்தாயிரம் ரூபாய் கொடுக்கலாம்'' என்றார்.

ஆமாம்; அந்தக் காளைக்குப் பத்தாயிரமும் கொடுக்கலாம் அதற்கு மேலும் கொடுக்கலாம்.

காளையைப் பெற்றுக் கொண்டதும் கவர்னர் சொன்னார்: ''மாடுகள் உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெற்ற என்னையே இந்தப் பண்ணை பிரமிக்கச் செய்துவிட்டது. இந்தியாவில் எனக்குத் தெரிந்த வரையில் இந்தமாதிரி மாட்டுப் பண்ணை இங்கேதான் இருக்கிறது. அதற்காக நீங்கள் எல்லோரும் பெருமை யடையலாம்'' என்று சொல்லிவிட்டு ''பட்டக்காரர் ஒரு முறை எங்கள் ஊருக்கு வரும் போது நான் அவருக்கு எங்கள் நாட்டுக் 'கிர்' ஜாதியுடன் கலந்த காங்கேயம் காளைக்கன்று பரிசளிப்பேன்'' என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தார். அப்பொழுது அங்கு இருந்தவர்கள் எல்லாரும் சிரித்துவிட்டனர். மகாராஜாவுக்குச் சொந்தமான காங்கேயம் காளையும் அந்தச் சந்தோஷத்தில் கலந்து கொண்டு ஒரு துள்ளுத் துள்ளியது.

பவநகர் மகாராஜா பட்டக்காரரின் மாட்டுப் பண்ணையை விட்டுப் பிரிய மனமில்லாமல் பட்டக்காரர் குடும்பத்தாருடன் ஒரு புகைப் படம் எடுத்துக்கொண்டு பிரிந்து சென்றார்.

• • •

ஈரோட்டிலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் இருக்கும் இந்தப் பழைய கோட்டைப் பட்டக்காரரின் கால்நடைப் பண்ணையை ஒவ்வொரு விவசாயியும் கட்டாயம் போய்ப் பார்க்க வேண்டும்.

பட்டக்காரரைப்போல் சிறந்த முறையில் சாதாரண விவசாயிகள் கால்நடைப் பண்ணை வளர்க்க முடியாதுதான். இருந்தாலும் ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய சக்திக்கு ஏற்ப மாட்டுப் பண்ணை வளர்ப்பதற்கு இந்தப் பண்ணை வழிகாட்டியாக இருக்கும். வசதியுள்ள ஒவ்வொரு விவசாயியும் மாட்டுப் பண்ணை வளர்ப்பதில் ஈடுபட்டால் நம் நாட்டில் இப்பொழுது தலைவிரித்தாடும் பால் பஞ்சமும் உணவுப் பஞ்சமும் பஞ்சாய்ப் பறந்து விடும்.



4. ஐயனார் கோவில்

வீரசேனன் படுத்திருந்த அறையிலிருந்து "அம்மா! பாம்பு கடித்து விட்டதே!" என்ற சத்தமும் அத்துடன் யாரோ தொபுகடீரென்று கீழே விழுந்த சத்தமும் கேட்கவே வீரசேனன் தாயார் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். வீரசேனன் கட்டிலிலிருந்து கீழே விழுந்து கிடந்தான். அவன் முகம் பேயறைந்தவன் முகம் போல வெளிறிட்டிருந்தது. அவன் உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. வீரசேனனின் தாயார் அந்த அறையைக் கூர்ந்து கவனித்தாள். எங்கேயாவது பாம்பு இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்தாள். ஒன்றையும் காணவில்லை.

வீரசேனனைத் தூக்கித் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டு விசிறியால் விசிறினாள். சில நிமிஷங்களுக்கெல்லாம் வீரசேனன் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். "ஐயோ, அம்மா! பாம்பு! பாம்பு!" என்று அலறினான். மீண்டும் மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டான்.

வீரசேனனின் தாய் அவனைத் தூக்கி மெதுவாகக் கட்டிலில் படுக்க வைத்து, குளிர்ந்த ஜலமாகக் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்தாள். முகத்தில் தண்ணீர் பட்டவுடன் வீரசேனன் சுய உணர்வு பெற்றான். முகத்தைத் துடைத்துக் கொண்டே வீரசேனன் எழுந்து உட்கார்ந்தான். சுற்றும் முற்றும் கண்களைச் சுழற்றிப் பார்த்தான். "அம்மா, நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டுக் கொண்டே தன் தாயைத் தழுவிக் கொண்டான். இப்பொழுது தான் வீரசேனனின் தாயாருக்கு மனக்கவலை நீங்கிச் சந்தோஷம் உண்டாயிற்று.

"தம்பி, வீரசேனா! நீ சுரங்க மாளிகையில் உன்னுடைய அறையில் தான் இருக்கிறாய். பயப்படாதே!" என்றாள்.

"அம்மா! அப்படியானால் நான் கண்டதெல்லாம் கனவுதானா?" என்று கேட்டுவிட்டுத் தான் கண்ட கனவையெல்லாம் ஒன்று விடாமல் சாங்கோபாங்கமாகத் தன் தாயிடம் கூறினான்.



வீரசேனனின் தாயும் அதையெல்லாம் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

பிறகு, "வீரசேனா! நீ இங்கு தனியாகப் படுத்துக் கொள்ள வேண்டாம். என்னுடைய அறை

யில் வந்து படுத்துக் கொள் வா!" என்று சொல்லி வீரசேனனை அன்புடன் அழைத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றான்.

வீரசேனன் தன்னுடைய தாயாரின் அருகில் படுத்துத் தூங்கினான்.

• • •

மறுநாள் வீரசேனன் அதிகாலையிலேயே எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, தன் தாயின் விருப்பப்படி பிரயாணத்துக்கு ஆயத்தமானான். அவன் தாயார் அவனுக்கு வேண்டிய உணவைத் தயாரித்தாள். பிறகு வீரசேனனைக் கூப்பிட்டு, அவ



னுக்கு வயிறார அன்னம் படைத்தாள். வீரசேனனும் தன் தாயார் அன்புடன் செய்து வைத்திருந்த ஆகாரங்களைத் திருப்தியுடன் சாப்பிட்டான். வழியில் சாப்பிடுவதற்காகக் கொடுத்த கட்டுச் சாதத்தையும் பெற்றுக் கொண்டான். தன் தாயாரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக வணங்கி விடை பெற்றுக் கொண்டான்.

வீரசேனன் சென்றதும் அவன் தாயார் அவர்களுடைய குலதெய்வமாகிய சண்டிகாதேவியை நினைத்துப் பிரார்த்தனை புரிந்தாள். தன் மகனுக்குப் பக்கத்துணையாக இருந்து காப்பாற்றவேண்டும் என்று மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

வீரசேனன் ஊரைவிட்டு வெளியே செல்லும் ராஜபாட்டை வழியாக நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்குப் பின்னால் 'டக் டக்' 'டக் டக்' என்று குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. வீரசேனன் திரும்பிப் பார்த்தான்.


ஒரு போர்வீரன் குதிரைமீது ஏறிக் கொண்டு இன்னொரு குதிரையைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் வீரசேனனுக்கு ஒரு யோசனை தோன்றியது. வழிவழி வந்த வீர அரச குடும்பத்தில் தோன்றியவன் அல்லவா வீரசேனன்? அந்த வீரனின் குதிரைக்கு எதிரில் சென்று வழி மறித்து நின்றான். போர் வீரனும் குதிரையை நிறுத்தி வீரசேனனை உற்றுப் பார்த்தான். "யாரப்பா நீ? ஏன் குதிரையை மறைக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஐயா! நான் ஒரு வழிப்போக்கன். தாங்கள் சும்மா பிடித்துக் கொண்டு வருகிறீர்களே அந்தக் குதிரைமீது ஏறி அடுத்த ஊர் வரையில் வருகிறேன். உதவி செய்ய வேணும்" என்று கேட்டுக் கொண்டான்.

போர்வீரன் வீரசேனனைப் பார்த்தபடியே பேசாமல் இருந்தான். பிறகு என்ன நினைத்தானோ, "சரி, ஏறிக் கொள்" என்று சொல்லித்தான் சும்மா

பிடித்து வந்த வெள்ளைக் குதிரையை வீரசேனனிடம் கொடுத்தான்.

வீரசேனன் உடனே அந்தக் குதிரை மீது ஒரே தாவில் ஏறி உட்கார்ந்து கொண்டான். போர் வீரனும் வீரசேனனும் கொஞ்ச தூரம் மௌனமாகவே சென்று கொண்டிருந்தனர். போர்வீரன் பேச ஆரம்பித்தான்; "தம்பி! உன்னைப் பார்த்தவுடன் எங்கள் மன்னர் மார்த்தாண்டரின் நினைவு வந்து விட்டது. அதனால் தான் உனக்கு இந்தக் குதிரையைக் கொடுத்து ஏறிக் கொள்ளச் சொன்னேன்" என்றான். வீரசேனனுக்குத் தூக்கி வாரிப் போட



டது. அவனுடைய உடலெல்லாம் ஜிலுஜிலுத்தது. உள்ளம் ஏதோ இனம் தெரியாத ஒரு இன்பத்தை அடைந்தது. அது இன்பமா அல்லது வேதனையா என்பதை வீரசேனனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் போர் வீரனைப் பல கேள்விகள் கேட்டான். அதன் மூலம் ராஜ்யத்தின் நிலைமையைத் தெரிந்து கொண்டான்.

குதிரைகள் போய்க் கொண்டிருந்தன. தூரத்தில் ஒரு குளமும் அதன் அருகில் ஒரு ஐயனார் கோயிலும் தெரிந்தது. வீரசேனன் அதைப் பார்த்தவுடன் "ஐயா! நான் அந்தக் கோயிலில் தங்கிச் சற்றுநேரம் இளைப்பாறப் போகிறேன்" என்று சொன்னான்.

"தம்பி! நீ இந்தக் குதிரையுடன் அந்த ஐயனார் கோயிலிலேயே தங்கி இரு. நான் இன்னும் இரண்டு நாழியில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்" என்று சொல்லிப் போய்விட்டான்.

வீரசேனன் குளக்கரையை நோக்கிச் சென்றான். குளத்தை அடைந்ததும் குதிரையிலிருந்து இறங்கினான். குதிரையை அந்தக் குளத்துக்கு அருகில் உள்ள மரத்தில் கட்டிவிட்டு அதில் இறங்கிக் கால் கைகளை எல்லாம் சுத்தம் செய்து கொண்டு தன் கட்டுச் சாத மூட்டையை அவிழ்த்துப் பசி தீர, வயிறு நிறையச் சாப்பிட்டான்.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்று சொல்வார்கள் அல்லவா? வீரசேனனுக்கும் ஒரே அசதியாக இருந்தது. அந்தப் பாழடைந்த கோயிலுக்குள் சென்று படுத்தான். வயிறு நிறையச் சாப்பிட்டிருந்ததால் அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் யாரோ "வீரசேனா! வீரசேனா!" என்று

அவன் உடம்பை ஆட்டி எழுப்பியது போலிருந்தது. வீரசேனன் கண் விழித்துப் பார்த்தான்.

ராஜ உடையில் ஆஜானுபாகுவான ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவரைப் பார்த்தவுடன் வீரசேனன் தன்னையுமறியாமல் அவருக்கு வணங்கினான். "வீரசேனா! என்னை உனக்குத் தெரியாது. நான்தான் உன்னைப் பெற்ற தகப்பன். இந்த நாட்டின் மன்னன் மார்த்தாண்டன்" என்று சொன்னார்.

வீரசேனன் "அப்பா!" என்று கத்திக்கொண்டே ஓடிப்போய் அவரை ஆவலுடன் தழுவிக் கொண்டான்.

மார்த்தாண்ட மன்னரும் அவனை அன்போடு தடவிக்கொண்டே "வீரசேனா! நீ ஏன் இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும். நீங்கள் தங்கியிருக்கும் மாளிகைக்குப் பின்னால் ஒரு சுரங்கம் இருக்கிறது. அதில் ஏராளமான செல்வங்கள் குவித்து வைத்திருக்கிறேன். நாட்டின் நன்மைக்காக மிகக் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்தேன். என்னை வஞ்சகமாகக் கொன்று எதிரிகள் நம் ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டனர். அன்னியர்களின் ஆட்சியில் இன்று நமது நாடு அலங்கோலப்பட்டுக் கிடக்கிறது. மன்னன் மக்களை மறந்து வாழ்கிறான். மக்கள் பட்டினியும் பசியுமாக வாடித் தவிக்கின்றனர். நீ உடனே சுரங்க மாளிகைக்குச் சென்று அதிலிருக்கும் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வேற்றரசரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டை மீட்பதற்கு ஏற்பாடு செய். உனக்கு மக்கள் உதவிபுரிவார்கள்" என்று சொல்லி மறைந்து விட்டார்.

வீரசேனன் "அப்பா! அப்பா!" என்று கூவிக்கொண்டே எழுந்தான். யாரையும் காணவில்லை. தான் படுத்திருந்த பாழடைந்த ஐயனார் கோயிலில் இருப்பதை உணர்ந்தான். (தொடரும்)

விடுகதை

கண் மூக்கு வாயுடனே காதுமுண்டு
சூட்சமமாய் வளர்ந்துவரும் ஜீவனில்லை
உயரவே சுற்றிவரும் கழுகுமில்லை
கதிரவனின் சுடரொளியால் சோகந் தோரை
சோகத்தைத் தீர்த்துவைக்கும் மருந்துமில்லை
வேண்டுவோர் இதையறிந்து விடை சொல்வீரே!

விடை அடுத்த இதழில்

விஷயம் புரிந்தது!

ஒரு வீட்டில் மூன்று நாய்க்குட்டிகள் இருந்தன. எங்கே போனாலும் மூன்றும் சேர்ந்தே போகும்; எதைச் செய்தாலும் மூன்றும் சேர்ந்தே செய்யும். மூன்றும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது சேர்ந்தேயிருக்கும்.

ஒரு நாள் இந்த நாய்க்குட்டிகளுள் ஒன்று, மற்ற இரண்டு நாய்க்குட்டிகளைப் பார்த்து, "நான் எது செய்தாலும் அதைப்போலவே செய்வீர்களா?" என்று கேட்டது.

அந்த இரண்டு குட்டிகளும், "ஓ, செய்வோமே!" என்றன.

"என்னைப் போலவே தலையைத் தூக்கிச் சூரியனைப் பத்து நிமிஷம் அண்ணாந்து பார்க்க வேண்டும். எங்கே செய்யுங்கள், பார்க்கலாம்" என்றது.

அந்த இரண்டு நாய்க்குட்டிகளும் முகத்தைத் தூக்கிக் கண் பூத்துப் போகும் அளவுக்குப் பத்து நிமிஷ நேரம் சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தலையைக் குனிந்தன.

ஒரே இருட்டாக இருந்தது. அவற்றின் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. இரண்டு நிமிஷங்களுக்கு அப்புறம்தான் புலப்படத் தொடங்கின. பார்த்தால் அந்த நாய் அங்கே இல்லை. எங்கேயோ ஓடி விட்டது.

அதுமட்டுமா? மத்தியானம் சாப்பாடு போடப்படும் தட்டு காலியாக இருந்தது. ஆமாம், தட்டில் இங்கொரு பருக்கை அங்கொரு பருக்கை இருந்ததே தவிரச் சாப்பாடு போடப்பட்டது என்பதற்கு அடையாளமாக, வேறொன்றும் காணவில்லை! அப்போதுதான் அந்த நாய்க்குட்டிகளுக்கு முதல் நாய்க்குட்டி, தங்கள் ஆகாரத்தை ஏமாற்றிச் சாப்பிட ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி தந்திரம் செய்திருக்கிறது என்பது தெரிந்தது. —வேங்கு.



எனக்கு மொறுமொறுப்பே பிடிக்கும்
எல்லோருடைய
எனக்கு உப்பானதே இஷ்டம்
விருப்பத்திற்கேற்ற
எனக்கு தித்திப்பே வேண்டும்
பிஸ்கோத்துகள்
எனக்கு எல்லாமே பிடிக்கும்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

நாதிர்ஷா பேசுகிறார்!

அரசாங்க விளம்பர அதிகாரியின் பதில்

1951-ம் வருஷம் மார்ச்சு மாதம் 25-ந் தேதியிட்ட தங்கள் 'கல்கி' பத்திரிகையில், 'நாதிர்ஷா பேசுகிறார்' என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டிருக்கும் கட்டுரை சம்பந்தமாக, கீழ்க்கண்ட சில விவரங்களைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டி இருக்கிறது.

மார்ச்சு 19-ந் தேதி சட்டசபையில் கனம் உணவு மந்திரி அவர்கள் செய்த சொற்பொழிவையே அக் கட்டுரையில் காணப்படும் வாதம் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கனம் உணவு மந்திரியவர்கள் பேசியது உண்மை நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு பொதுவான முறையில் நிலைமையை விளக்கியதாகும். கனம் மந்திரியவர்கள் முக்கியமாக இம்மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டார்:-

1. கொள்முதல் அதிகாரிகள் அதிக்கிரமமான முறையில் நடந்து கொள்வதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

2. தங்களிடமுள்ள தானியத்தைக் கொடுக்க விரும்பாமல் சண்டித்தனம் செய்யும் சில விவசாயிகள் தானியத்தைக் கொள்முதல் செய்பவரும் அதிகாரிகளைப் பலமாக எதிர்த்து, சில சமயங்களில் அவர்களைத் தாக்கியும், அவமதித்தும் வருவது சர்க்காரின் கவனத்துக்கு வந்திருக்கிறது.

3. தங்கள் கடமைகளை நிறைவேற்றும் போது, கொள்முதல் விதி முறைகளை மிக ஒழுங்கான வகையில் பின்பற்ற வேண்டுமென்றும், விவசாயிகளிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் சர்க்கார் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள்; மூன்று ஏக்கரா அல்லது அதற்கு மேற்பட்ட நிலம் படைத்த விவசாயிகளிடம், தானியக் கொள்முதல் செய்வதில் முக்கியமாக முனையவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று விஷயங்களையும் தெளிவு படுத்தி, கடைசியாக, தகாத முறையில் நடந்து கொள்ளும் அதிகாரிகள்மீது, தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கச் சர்க்கார் தயங்காது என்று தெளிவான உத்தரவாதமும் தந்திருந்தார்.

விவசாயிகளிடமிருந்து இது சம்பந்தமாக வந்த புகார்களை விசாரித்து ஆராய்ந்ததில் பெரும்பாலானவற்றில், அதிகாரிகள் முறை தவறி நடந்தார்கள் என்பதை ருஜுப்படுத்தத் தக்க ஆதாரங்கள் அல்லது சாட்சியங்கள் இல்லை. அதற்கு மாறாக, கொள்முதல் அதிகாரிகள் பலவித அவமரியாதைகளுக்கு ஆளாகியிருப்பதற்கும், அடிதடிகளுக்கு உட்பட நேர்ந்ததற்கும், அநேக சான்றுகள் கிடைத்துள்ளன. உதாரணமாக ஒன்றை இங்கே குறிப்பிடலாம். பிர்க்கா சப்ளை அதிகாரி ஒருவருடன் கொள்முதல் நிமித்தமாகச் சென்ற மொத்த வியாபாரியின் குமாஸ்தா ஒருவர், ஈவிரக்கமின்றிக் குத்தப்பட்டுப் படுகாயமடைந்து பிறகு மாண்டார். மதுரை ஜில்லாவிலே 'மன்னவனூர்' என்ற இடத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒருவரை, ஒரு கூட்டத்தார் கற்களால் அடித்துச் சொக்காயைப் பிடுங்கி, அவரைத் தெருவில் உருட்டிவிட்டனர். அவருடன் சென்ற பிர்க்கா சப்ளை ஆபீஸரும் நையப் புடைக்கப்பட்டார். இந்த உதாரணங்களால் கொள்முதல் அதிகாரிகள் எத்தகைய கடினமான எதிர்ப்புகளுக்கிடையே, சில சமயங்களில் தம்முடைய உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல், தங்கள் கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பது விளங்கும்.

கொள்முதல் அதிகாரிகள் எதேச்சாதிகாரமான முறையில் நடந்து கொள்வதாகக் குற்றம் சாட்டித் தங்கள் பத்திரிகையில் கூறியிருப்பது சரியல்ல. விவசாயிகளிடம் உபரியாக உள்ள தானியத்தை, அவர்களுக்குக் கொஞ்சமும் தொந்தரவு கொடுக்காத முறையில், மிகவும் சாத்விகமான வகையிலே கொள்முதல் செய்ய வேண்டுமென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தம்மிடமுள்ள உபரி தானியத்தைச் சர்க்காருக்கு விற்க மறுக்கும் போது, கடைசி முயற்சியாகத்தான், வீடுகளில் புகுந்து பரிசோதனை செய்யலாம் என்று சர்க்கார் தெளிவு படுத்தியிருக்கிறது. இதைப் பன் முறையும் வற்புறுத்தி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், சில நெருக்கடியான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. விவசாயிகளிடம் உபரி தானியம் இல்லையா என்பதை வீடுகளில் சென்று நேரில் பார்க்கவேண்டி நேரிடலாம். அப்படிச் செய்ய முற்படும் போதுதான், ஒரு சிலர் தம்மிடமுள்ள உபரி தானியத்தைக் கொடுக்க மறுக்கின்றனர். இத்தகைய அசாதாரண சந்தர்ப்பங்களில் தவிர, மற்ற சமயங்களில் கொள்முதல் அதிகாரிகள், விவசாயிகளின் வீடுகளில் நுழைவதோ, பலாத்காரமாகத் தானியத்தைப் பறிமுதல் செய்வதோ கூடாதெனக் கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது.

அதிகாரிகளும், அவர்கள் கீழுள்ள சிப்பந்திகளும் தவறான முறையில் இறங்கினால் உடனே விசாரித்து ஏற்ற தண்டனை விதிக்க, சர்க்கார் ஒருபோதும் தயங்காது என்பதைக் கனம் உணவு மந்திரி உறுதி கூறியிருக்கிறார். முறை தவறிய அதிகாரிகள் விசாரணைக்குள்ளாகி, தண்டனை விதிக்கப்பட்டு வருகிறார்கள்.

மேற்கூறிய விவரங்கள் மூலம், உண்மை நிலைமை தெளிவாகியிருக்கும்.

1-5-'51. ரா. பார்த்தசாரதி,
டைரக்டர், சென்னை செய்தி-விளம்பர இலாகா.



அலங்காரி

நவீனன்

உள்ளே ஓடி வந்த பாலு ஒரே மூச்சில் சொன்னான் :

"அம்மா! அம்மா! சித்தப்பாவும், சித்தியும் மோட்டார் ரிக்ஷாவிலே நம் வீட்டு வாசலோடு போனார்கள். நான் பார்த்தேனே? ஏன் அம்மா இங்கே வராமல் போகிறார்கள்?"

இதற்கு நான் என்ன பதில் சொல்லுவது? அவனுக்குக்கூட அவர்கள் வரவில்லை என்ற விஷயம் தெரிந்திருக்கிறது. வீட்டோடு இருந்த சித்தப்பா—புதுக் குடித்தனம் போனாலும் அடிக்கடி எதற்காவது வந்து நிற்கும் சித்தப்பா—ஒரு வாரமாக வரவில்லை என்றால்?

"ஏன்?" என்று எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது.

அவன்-என் மைத்துனர் மனைவி-அலங்காரி வராதது குறித்து நான் ஆச்சரியப் படவில்லை. பெரிய இடத்துப் பெண்; சப் ஜட்ஜ் மகள். மூனுக்கென்றால் தன் அந்தஸ்துக்குப் பங்கம் வந்து விட்டதாக நினைப்பவள். கல்யாணத் தன்றைக்கே "இவளா என் ஓர்ப்படி?" என்று என்னை விழித்துப் பார்த்துப் பொருமினவள். அவள் வராவிட்டால் போகிறாள். ஆனால் என் மைத்துனர்! அந்த அப்பாவி! சின்ன வயது முதல் வீட்டோடு வளர்ந்து, படித்து, கொடிக்கு நூறு 'மன்னி!' போடுகிறவருக்குக் கூட என்ன வந்தது? இருபது வருஷங்களாக இருந்த அந்த அசைக்க முடியாத உரிமையை நேற்று வந்தவள் என்ன செய்திருப்பாள்?

எனக்கு விளங்கவில்லை.

அலங்காரியை என் அப்பாவி மைத்துனர் மணந்து மூன்று வருஷங்களுக்கு மேலாயிற்று. அவர் கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரியாகத்தான் இருந்து வந்தார். சேர்ந்தாற்போல மூன்று நாட்கள் விடுமுறை வந்தால் விழுந்து அடித்துக் கொண்டு மனைவி இருந்த திருப்பூருக்கு ஓடுவார்.

"எப்போது அலங்காரியை அழைத்து வருகிறதாக உத்தேசம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டு வைப்பேன்.

"அவள் என்னமோ, 'அப்பாவைக் கேட்கணும்!' என்கிறாள். 'சாதம் வடிக்க மட்டுந்தான் கற்றுக் கொண்டிருக்கிறேன். குழம்பு, ரஸம் வைக்கும் விதத்தையும் தெரிந்து கொண்டு பிறகு வருகிறேன்' என்கிறாள்!" என்பார். 'பாவம்! என் மைத்துனர்' என்று உள்ளூற நினைத்துக் கொள்வேன்.

ஒரு நாள் மைத்துனர் பிரித்த கடிதத்துடன் என்னிடம் ஓடி வந்தார். "என்ன விசேஷம்? அலங்காரி வருகிறதாகக் கடிதம் எழுதியிருக்கிறாளா என்ன?" என்று கேட்டேன்.

"இல்லையே மன்னி! அவள் அப்பா ஆவணியில் குடித்தனம் வைத்தால் போதும் என்கிறாராம். இந்தக் கோடையில் சென்னைக் குழாய்களில் தண்ணீர் வராது. இப்போது குடித்தனம் போட்டால் சிரமப்படுவாய் என்கிறாராம். அவனை நம்பிப் போன வாரம் ஒரு வீடு பிடித்து இரண்டு மாத வாடகை முன் பணமும் தரகருக்கு லஞ்சமும் கொடுத்

துத் தொலைத்து விட்டேனே! இப்படிக் கடிதம் எழுதுகிறளே!" என்று அலுத்துக் கொண்டார்.

அவருடைய அப்பாவித்தனம் என்னை, "ஐயோ பாவம்!" என்று சொல்ல வைத்தது. நான் அந்த நாட்களில் இவருடைய அண்ணாவுக்குக் கடிதத்துக்கு மேல் கடிதம் போட்டு உடனே தனிக் குடித்தனம் போடும்படி தூண்டியதும், அவர் தட்டிக் கழித்ததும் என் நினைவுக்கு வந்தது.

"......ரொம்பக் கஷ்டப்பட்டுக் குடி இருக்க வீடு பிடித்திருக்கிறேன். ஆகவே, உடனே புறப்பட்டு வா!" என்று தந்தி அடிக்கும்படி அவருக்கு யோசனை கூறினேன். தபால் ஆபீசுக்கு ஓடினார்! அலங்காரி தந்திக்கு அசைந்து கொடுக்கவில்லை.

"உங்கள் அலங்காரி உடனே பறந்து வருவதற்குப் பட்சி இல்லை. அப்பா ரேடியோவுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார். அது வர இன்னும் இரண்டு நாட்கள் ஆகும். வீட்டில் மின்சார விளக்கு இருக்கிறதா?... வருகிற தேதிக்குப் பின்னால் விவரமாக எழுதுகிறேன்" என்று இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு சாவகாசமாகப் பதில் எழுதினாள். அந்தப் பதில் வருவதற்குள் என் மைத்துனர் பட்ட பாடு, எனக்கு அல்லவா தெரியும்!

ஒருநாள் திடீரென்று தன் அப்பாவுடன் அலங்காரி புதுவீட்டுக்கு விஜயம் செய்து விட்டாள். வருகிற தேதி விவரத்துக்கு அவள் எழுதிப் போட்ட தபால் என் மைத்துனருக்குக் கிடைக்கவில்லை போலிருக்கிறது! அவர் வழக்கம் போலச் சாப்பிட்டு விட்டுக் காரியாலயத்துக்குப் போய் விட்டார்.

வந்தவர்கள் நேராக எங்கள் வீட்டுக்கு வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! பெருமையாகவும், புத்திசாலித்தனமாகவும் இருந்திருக்கும்! அதற்குப் பதிலாகப் புது வீட்டுக்குச் 'சர்'ரென்று வாடகை வண்டியில் போய் இறங்கி யிருக்கிறார்கள். வீடு பூட்டி யிருந்திருக்கிறது. "இது என்ன அசட்டுத்தனம்! மாப்பிள்ளை ஸ்டேஷனுக்கும் வரவில்லை; வீட்டிலேயும் தங்கி இருக்கவில்லை! தபால் போட்டும் இப்படிச் செய்து விட்டாரே!" என்று சப் ஜட்ஜ் முணுமுணுத்து விட்டு வண்டியைத் திருப்பி மாப்பிள்ளை வேலை பார்க்கும் காரியாலயத்துக்கு விடச் சொல்லி இருக்கிறார்.

அந்தச் சமயம் என் மைத்துனர் காரியாலயத்தில் இல்லை. ஏதோ காரியமாகப் பக்கத்து ஊருக்கு அனுப்பப்பட் டிருந்தார். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் சப் ஜட்ஜ் என்ன செய்திருக்க வேண்டும்? நேராக வண்டியை எங்கள் வீட்டுப் பக்கம் திருப்பி அலங்காரியை என்னிடம் ஒப்படைத்துச் சென்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? ஆனால் அவர் அதற்குப் பதிலாகத் தம் மாப்பிள்ளை மீது கோபித்துக் கொண்டு திரும்பவும் பெண்ணை ஊருக்கே அழைத்துச் சென்று விட்டார்! எப்படி இருக்கிறது விஷயம்? சப் ஜட்ஜின் குடும்பத்தாரை வரவேற்கும் அந்தஸ்து எங்களுக்குக் கிடையாது என்று அவர் நினைத்துக் கொண்டு விட்டாரோ, என்னமோ!



இதை எல்லாம் அதற்கு அடுத்த நாள் என் மைத்துனர் என்னிடம் சொல்லி ஆத்திரப்பட்டார். இப்படி ஆத்திரப்படுவது என் மைத்துனர் தானா என்று எனக்கு அதிசயமாக இருந்தது. "உங்கள் மீது பிசகில்லை. அவர்கள் எழுதிய கடிதம் சமயத்தில் கிடைத்திருந்தால் கட்டாயம் ஸ்டேஷனுக்குப் போயிருப்பீர்கள். அவர்கள் கோபம் அர்த்தமற்றது" என்று நான் சொன்னேன்.

ஆனால் என் மைத்துனருக்கு ஏனோ புது வைராக்கியம் பிறந்து விட்டது. "அவளுக்கு என்ன அவ்வளவு அகம்பாவம்? வருகிற போது வரட்டும்!" என்று கறுவிக் கொண்டு சமாதானக் கடிதம் கூடப் போடாமல் இருந்து விட்டார். எனக்கு மட்டும் என்னமோ போல் இருந்தது. முதன் முதல் நல்ல

நான் பார்த்துக் கொண்டு வந்தவர்களுக்கு வீடு பூட்டி யிருக்கால் அசாசன்யமாக இராதா? அந்த அச்சானியம் கோபமாக மாறி அவர்களை ஊருக்குத் திரும்ப வைத்திருக்கலாம். எனவே அவர்களை எப்படியாவது சமாதானப் படுத்த வேண்டும். பாவம்! என் மைத்துனர் இருக்கும் இருப்பு என்னை அதற்குத் திட்டமிட வைத்தது.

என் கணவரிடம் சமயம் பார்த்து இது பற்றிப் பக்குவமாக எடுத்துச் சொல்லி, சப் ஜட்ஜுக்கு உருக்கமாகக் கடிதம் எழுதத் தூண்டினேன்.

''...பிசகு அந்தத் தபால் மீது தான்! அதைத் தான் தாங்கள் தண்டிக்க வேண்டும். அவசியமானால் என் தம்பியையே அங்கு அனுப்பித் தங்கள் பெண்ணை அழைத்து வரச் சொல்லுகிறேன்...'' என்றெல்லாம் குறிப்பிடச் சொன்னேன். இப்படிக் கடிதம் எழுதிப் போட்டது என் மைத்துனருக்குத் தெரியாது.

கடிதம் வேலை செய்து விட்டது. சப்ஜட்ஜ் பரம சாதுவாக அடுத்த வாரம் பெண்ணை அழைத்துக் கொண்டு நேராக எங்கள் வீட்டுக்கே வந்து விட்டார். போன தடவை பெரிய முட்டாள்தனம் செய்து விட்டேன் என்று சப் ஜட்ஜ் என் கணவரையும், அலங்காரி என்னையும் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தபோது காரியாலயத்திலிருந்து வந்த என் மைத்துனர் பிரமித்துப் போனார். கடைசியில் அவருக்குக் கடித விவரங்களை எல்லாம் விளக்கி அடுத்த நாள் நல்ல வேளை பார்த்துப் புது வீட்டுக்கு அனுப்பி வைத்தோம். அதற்குப் பிறகு மைத்துனர் காரியாலயத்துக்குப் போன நேரம் தவிர அலங்காரி என் வீட்டோடு இடப்பாள்.

* * *

ஒரு நாள் அலங்காரியுடன் அடக்க ஒடுக்கத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது எனக்கும் அவளுக்கும் வார்த்தைகள் தடித்துச் சிறிது வித்தியாசம் ஏற்பட்டு விட்டது.

எமகாதகர்!

பிரிட்டிஷ் அமெரிக்க வல்லரசுகள் போர்முனையில் ஜப்பானியர்களைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள் அல்லவா! அந்தச் சமயத்திலே ஜப்பானியரின் ஆட்சியில் இருந்து கொண்டே தனிப்பட்ட ஒருவர் ஜப்பானியர்களைப் பகிரங்கமாக எதிர்த்து நின்று தம்முடைய பிடிவாதத்தை நிறைவேற்றினார் என்றால், அப்பேர்ப்பட்ட எமகாதகர் யார் என்றுதான் ஆர்வத்துடன் கேட்கத் தோன்றும். அவர்தான் இப்போது இலங்கையில் இந்தியா ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கே. பி. கேசவ மேனன். ஸ்ரீ கேசவ மேனன் வைக்கம் சத்தியாக்கிரகம் நடந்த காலத்திலிருந்து இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரப் பற்று உடையவராக இருந்து வந்தார். பாரிஸ்டர் மேனனை விதி மலேயா நாட்டுக்குக் கொண்டு போய்த் தள்ளிவிட்டது. ஜப்பானியர் மலேயாவை ஆக்கிரமித்துக் கொண்டபின் அங்கு நிறுவப்பட்ட இந்திய சுதந்திர இயக்கத்தில் ஸ்ரீ கேசவ மேனன் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார். திடீரென்று அவருக்கு ஜப்பானியரின் அந்தரங்க சுத்தியில் அவநம்பிக்கை ஏற்பட்டது. அந்த அவநம்பிக்கை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மலேயாவுக்கு வந்த பிறகுகூட மறையவில்லை. எனவே ஸ்ரீ மேனன் யுத்தம் முடியும் வரையில் ஜப்பானியரால் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். பிறகு இந்தியாவுக்கு வந்து, பிரபல மலையாளப் பத்திரிகையான ''மாத்ரு பூமி''யின் ஆசிரியராக இருந்து வந்தார். மலேயாவிலே ஜப்பானியரின் ஆட்சிக் காலத்தில் தம்முடைய கொள்கைக்காக ஏழ்மையையும் கஷ்டங்களையும் அஞ்சா நெஞ்சத்துடன் ஏற்றுக்கொண்ட ஸ்ரீ கேசவ மேனன், தற்போது இலங்கையில் இந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்த்து நிற்பார் என்று எதிர்பார்க்கலாம்.



ஸ்ரீ கேசவ மேனன்

குன்றாத புகழ்

வங்காளக் குடாக்கடலின் அலைகள் நிஜாம் மன்னரின் பாதங்களைப் பயபக்தியுடன் அலம்பும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்று ஹைதராபாத் ரஜாக்கர்கள் கொக்கரித்தார்கள். ''அந்த அலைகள் ஹைதராபாத் வரையில் பொங்கி வரப் போவது உண்மைதான்; அந்த அலைகளில் நீங்கள் மூழ்கி அதோகதி அடையப் போவதும் உண்மைதான்'' என்று சர் மிர்ஸா இஸ்மெயில் எச்சரித்துவிட்டு ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்து வெளியேறினார். அவரது தீர்க்கதரிசனம் பலித்தது. சர் மிர்ஸா தீர்க்கதரிசி மாத்திரமல்ல, இராஜதந்திரி, நிர்வாக நிபுணர், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் பற்றுதல் உடையவர். மைசூர், ஜெயபுரி, ஹைதராபாத் சமஸ்தானங்களில் திவானாகவும் பிரதம மந்திரியாகவும் இருந்தும்கூட, அரசியல் வானில் சென்ற முப்பது ஆண்டுகளாகக் குன்றாத புகழுடன் விளங்கி வருகிறார். ஜவாஹர்லால்ஜியின் பேரிக்கு இணங்க அவரை இப்போது ஐக்கிய நாடுகள் சபை இந்தோனேஷியாவில் மேற்படி சபையின் தொழில் நுணுக்க ஸ்தானிகராக நியமித்திருக்கிறது.



சர் மிர்ஸா இஸ்மெயில்

"எல்லாம் உங்கள் அடக்கமும் ஒடுக்கமும் எனக்குத் தெரியும்! இருபத்தெட்டு வயதான மைத்துனனிடம் சிரித்து விளையாடிப் பேசும் என் ஓர்ப்படியின் அடக்கத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்காது!" என்று நறுக்கென்று கூறிவிட்டு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டு விர்ரென்று வீட்டுக்குப் போய்விட்டாள்.

சின்ன வயது முதல் வித்தியாசமில்லாமல் நாங்கள் பழகினதை நேற்று வந்தவள் கல்மஷம் கற்பிக்கிறாளே என்று எனக்கு அழுகை வந்தது; ஆத்திரம் வந்தது. இரண்டு பேரையும் சேர்த்து வைக்க நான் பட்ட பாட்டுக்கு எனக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டாள் அலங்காரி! எனக்கு நன்றாக வேண்டும்!

அன்று முழுதும் எனக்கு மனம் சரியாகவே இல்லை. மூலைக்கு மூலை நின்று விம்மிக் கொண்டிருந்தேன். வழக்கப்போல் மைத்துனர் ஆபீஸிலிருந்து திரும்பி வந்து "அவள் இருக்கிறாளா?" என்று என்னைக் கேட்டார்.

"இல்லை ...... மத்தியானமே போய் விட்டாள்!" என்று எங்கேயோ பார்த்துக் கொண்டு பதில் சொன்னேன். அலங்காரி சொன்னதை அவரிடம் அப்படியே சொல்லி 'ஓ'வென வாய் விட்டு அழலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் ஏனோ வாய்மூடி மௌனியாகி விட்டேன். ஆயினும் என் மனம் மட்டும் "இப்படிச் சொன்னாளே?" என்று கொந்தளித்துக் கொண்டிருந்தது.

இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். என் கணவர் காரியாலயத்திலிருந்து வந்து சாப்பிட உட்கார்ந்திருந்தார். என் முகத்தில் இருந்த துயரச் சாயையைப் புரிந்து கொண்டவரைப் போல, "உடம்புக்கு என்ன?" என்று அன்புடன் கேட்டார். "ஒன்றுமில்லையே ......" என்று சொல்லி அவருக்கு அன்னமிட்டேன். "எங்கே உன் ஓர்ப் படியைக் கொஞ்ச நாட்களாகக் காணோம்?" என்று கேட்டார். "வ...ரு...கி...ற...ளே...!" என்று திக்கித் திணறினேன். ஆனால் என் மைத்துனர்கூட ஒரு வாரமாக இந்தப் பக்கம் எட்டிப் பாராமல் தெருவோடு மோட்டார் ரிக்ஷாவில் போனது எனக்கு ஆறவே இல்லை.

வாசற்கதவை யாரோ தட்டினார்கள். ஓடிச் சென்று மின்சார விளக்கை ஏற்றி, "யார்?" என்று கேட்டவாறே தாழ்ப்பாளைத் திறந்தேன்.

"நான்தான் ......" என்ற குரலுக்குச் சொந்தக்காரராக என் மைத்துனர் அங்கே நின்று கொண்டிருந்தார்.

"அலங்காரிக்கும் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் இரண்டு நாட்களாகப் பழி சண்டை. இனி ஒரு நிமிஷமும் அந்த வீட்டில் இருக்க மாட்டேன். பிறந்தகம் போகிறேன் என்று குதிக்கிறாள். அவள் அப்பா வீட்டைப் பூட்டிக்கொண்டு கோடைக்குக் குற்றாலம் போயிருக்கிறார் என்று கடிதம் வந்தது. ஒருகால் நீங்கள் அவளைச் சமாதானப்படுத்தி வேறு வீடு பார்க்கும் வரையில் உங்களுடனேயே வைத்துக் கொண்டால்......" என்று ஆரம்பித்தார்.

என் இருதயம் என்னைத் தூண்டியது. 'கேட்டுவிடு, கேட்டுவிடு' என்று குதித்து விட்டது. "ஆமாம்...அலங்காரி என்னை..." என்று ஆரம்பித்ததை எப்படியோ மாற்றிக் கொண்டு, "ஏன் ஒரு வாரமாக இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை நீங்கள்?" என்றேன்.

"நீங்கள் ஊரில் இல்லை என்று அவள் சொன்னாளே?"

"ஆ...மா...ம்!" என்று அவளுக்கு அனுசரணையாகப் பொய் சொல்லி அந்த அத்தியாயத்திற்கு முடிவு கட்ட என் மனச்சாட்சியும் உள்ளக் குமுறலும், உணர்ச்சிப் போராட்டமும் என்னை எப்படித்தான் அனுமதித்தனவோ?

"பாவம், சிறுசு! என்னத்தைக் கண்டாள்? வீட்டுக்காரர்களுடன் பழக அவளுக்கு அனுபவம் போதாது. பெரிய பங்களாவில் அப்பாவின் அருமைப் பெண்ணாக இருந்தவள் ஆயிற்றே! நான் வந்து அவளை இங்கே கொஞ்ச நாட்கள் இருக்கும்படி கூப்பிடப் போகிறேன். அவள் என்னுடனேயே இருக்கட்டும்! இன்னும் பத்து நாட்களில் கீழே இருக்கும் அறை கூடக் காலியாகும் போலிருக்கிறது!" என்று என் உணர்ச்சிகள், மனப்போராட்டங்கள் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு கூறினேன்.

நான் அலங்காரியைப் போய் கூப்பிட்டவுடன் அவள் எழுந்து ஓடிவந்து, "மன்னி! என்னை மன்னித்து விடுங்கள். இந்தப் பாவி வீட்டுக்குத் தாங்கள் வந்தீர்களா?...உங்கள் உள்ளம் புரியாது தாயற்ற பெண்ணான நான் உளறிவிட்டேன். என் கணவரைச் சின்ன வயது முதல் எடுத்து வளர்த்த தாங்கள் அவருக்கு மன்னி அல்ல. தாயாரைவிட ஒரு படி மேல்!" என்று குரல் கம்மத் தழுதழுத்தாள்.

"அழாதே, அலங்காரி! நான் எதையும் மனத்தில் வைத்துக் கொள்ளவில்லை. இனி நீ எப்பவும் என்னுடன் இருக்க வேண்டியவள்!" என்றேன்.

குனிந்த தலை நிமிராமல் என்னுடன் ரிக்ஷாவில் ஏறினாள் அலங்காரி.



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

35. சர்வாங்காசனம் பழகும் விதம்

சர்வாங்காசனத்தை எல்லோரும் செய்யலாமென்றாலும், அதிக வயதானவர்களாலும், நோயாளிகளாலும் பல ஹீனமானவர்களாலும், அதிகக் கனமான தேகத்தை உடையவர்களாலும், உடலை வளைக்கவும் தன்னாலே தூக்கவும் வராது. முன் அத்தியாயத்தில் சொன்னபடி செய்ய வேண்டுமானால், அது சாதாரணமாய், சற்று ஆரோக்கியமுள்ள பலசாலிகளால்தான் செய்ய முடியும். மற்றவர்களுக்குச் சில குறுக்கு வழிகள் இருக்கின்றன.

1. சுவரின் ஓரமாய்ப் படுத்து, பிருஷ்டத்தைச் சுவரில் ஒட்ட வைத்து, கால்களைத் தூக்கிச் சுவரின் மேல் போட்டு நேராய் வைத்துக் கொள்ளவும். கைகளை மடக்கி முழங்கைகளை ஊன்றி, சற்று மூச்சைப் பிடித்து, இரண்டு குதிக்கால்கள் மட்டும் சுவரில் நன்றாய் ஊன்றி, பிருஷ்டத்தையும், இடுப்பையும், முதுகையும் தூக்கிக் கைகளை இடுப்படியில் கொடுத்துத் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும். மூச்சை சௌகரியம் போல் விடவும் இழுக்கவும் செய்யலாம். இப்பொழுது குதிக்கால்கள் மட்டும் சுவரில் ஒட்டியிருக்கும். கைகளை மேலும் நன்றாய் ஊன்றிக்கொண்டு உடலை நன்றாய் தாங்கிக் கொண்டு, இடது காலை மெதுவாய் சுவரை விட்டுக் கிளப்பி, தலைப் பக்கம் நேராய் நிமிர்த்தினவாறே கொண்டு வரவும். பிறகு இன்னமும் சற்றுக் கைகளை ஊன்றிக் கொண்டு, வலது காலையும் மெதுவாய்ச் சுவரிலிருந்து அகற்றித் தலைக்குப் பின்புறம் வளைக்காமல் கொண்டு சென்று மற்ற காலுடன் சேர்த்து ஒட்ட வைத்துக் கொள்ளவும்.

இப்படிச் செய்வதற்கு உடனே சரியாய் வராதுதான். கால்கள் தலைக்கு அதிகமாகப் பின்புறம் கொண்டு சென்றால்தான் நிற்க முடியும். முதலில் முதுகை நேராய் நிமிர்த்த முடியாது. பழகப் பழக, முதுகு நேராய் நிமிர்ந்து கால்கள் தலைக்கு நேராக வரும். முழங்கையை அகற்றி வைக்கக் கூடாது. உடலைச் சேர்த்தாற்போல் வைத்து ஊன்றினால்தான் உடலைத் தாங்க முடியும். சிலருக்கு ஒரு கால் மட்டும் தலைப் பக்கம் கொண்டு செல்ல வரும். இரண்டாவது காலைக் கொண்டு செல்லும் போது, கையைச் சரியாய்த் தாங்கிக் கொள்ளவில்லையானால் பக்கத்திலாவது, சுவரின் பக்கமாவது விழ நேரிடும். ஆகையால் கைகளை நெருக்கி வைத்து நன்றாய்த் தாங்கிக் கொண்ட பின்புதான் இரண்டாவது காலைத் தூக்க வேண்டும். சர்வாங்காசனத்தைச் செய்தே தீருவது, 'விடுவதில்லை' என்று பிடிவாதத்துடன் செய்தால் இந்தச் சிறு பிழைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். உதவிக்கு ஆள் இருந்தால், ஒரு காலைத் தலைப்புறம் கொண்டு சென்ற பின் அதைமட்டும் பிடித்துக் கொள்ளச் சொல்லி, மற்ற காலைத் தானாகவே தூக்கினால் லேசாய் வந்துவிடும்.

அப்படியும் விழுந்து விடுவோம் என்று பயம் ஏற்பட்டால் இரண்டு கால்களையும் பிடித்துக்கொள்ளச் சொல்லலாம். இப்படி ஒரு வாரம் இரண்டு வாரம் விடாமல் செய்து வந்தால் பிறகு ஆள் உதவியில்லாமல் தானாகவே செய்யலாம்.

2. சுவர் உதவியில்லாமலேயே முழுதும் ஆள் உதவியுடனும் செய்யலாம். மல்லாந்து படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் சேர்த்தாற்போல் தூக்க வேண்டும். உதவுபவர், கால்களைப் பிடித்து பிருஷ்டம், இடுப்பு, முதுகு இவைகள் தரையிலிருந்து தூக்கிச் சர்வாங்காசன நிலைக்குக் கொண்டு வந்ததும் அப்படியே பிடித்துக்கொள்ள வேண்டும். பழகுபவர் இடுப்படியில் கைகளைக் கொடுத்துத் தாங்கிக்கொள்ள வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு கைகளை இடுப்பை விட்டு முதுகுப் பக்கம் இறக்கிப் பிடிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு முதுகு நிமிர்ந்து நேராய் நிற்கும். ஜாலந்திர பந்தனம் ஏற்படும். சில நாள் ஆள் உதவியுடன் பழகினால், உடல் பிடிப்புவிட்டு நல்ல சக்தி ஏற்படும். பிறகு ஆள் உதவியில்லாமல் தானாகவே செய்து கொள்ளலாம்.

3. சர்வாங்காசனப் பலகையின் உதவியால் செய்வது. 2 அடி அகலத்தில் 6, 6½ அடி நீளத்தில், கழுத்துப் பட்டைக்குக் கீழே

மடக்கும்படி இரண்டு கீல்களை வைத்துச் செய்ய வேண்டும். தலை கீழே நழுவி விடாமல் தலைக்குப் பின்புறம் சட்டத்தினுல் ஒரு தடையிருக்கலாம். இதை இரண்டு பாகமாகப் பிரித்துத் தலைப்புறம் சிறிய பலகை, உடல்புறம் பெரிய பலகை என்று வைத்துக் கொள்ளவேண்டும். தலைப்புற சிறிய பலகையில் மடக்கும் இடம் தள்ளி மூன்று அங்குல இடத்திற்குச் சிறியதிலிருந்து, பெரிதாய் நமக்கு வேண்டிய அளவில் 3, 4 கொக்கிகளை மாட்ட வேண்டும். பிறகு உடல்புற பலகையில் மடக்கு இடத்திலிருந்து சற்றுத் தள்ளி மூன்று அங்குலத்திற்கு ஒரு வளையமாய் 3, 4 வளையங்களைப் பொருத்த வேண்டும். ஆசனம் செய்வோர் அதில் படுத்துக்கொள்ள வேண்டியது. ஒருவர் பலகையை மடித்துத் தூக்கக் கழுத்துப்புறப் பலகையிலிருக்கும் கொக்கியை, உடல்புற பலகையிலிருக்கும் வளையத்தில் மாட்டிவிட வேண்டும். செய்பவர் அப்பலகையின் மீதே தன் உடல் பளுவைப் போட்டுப் படுத்திருக்க வேண்டியது. ஆரம்பத்தில் நீண்ட கம்பியை வளையத்தில் மாட்டினுல் பலகை நேராய் இராமல் சற்றுக் கால்புறம் வாட்டமாய் இருக்கும். செய்பவருக்கும் சௌகரியமாய் இருக்கும். சிலநாள் பொறுத்துச் சற்றுப் பலகைகளை நேராய் நிமிர்த்த வேண்டும். அப்பொழுது நீளத்தில் குறைந்த கொக்கியை மாட்டிவிட வேண்டும். இப்படி கொக்கியின் நீளத்தை நமது சௌகரியம்போல் உபயோகிக்கலாம். பக்கத்தில் கால் நழுவி விடுவதுபோல் இருந்தால் பக்கத்திலும் சட்டத்தினுல் தடை ஏற்படுத்தலாம். அல்லது கால் பக்கம் பலகையில் பெல்ட் இணைத்துக் கட்டிவிடலாம். எப்படியும் நமது சௌகரியம் போல் இந்தப் பலகையைச் செய்யலாம்.

ஆனுல் இம்மாதிரி பலகை எல்லோராலும் செய்துகொள்ள முடியாது. பணக்காரர்களால் தான் செய்து கொள்ள முடியும். ஆயிரக் கணக்கில் மருந்துகளுக்காகவும், டாக்டர்களுக்காகவும் செலவு செய்யும் பணக்காரர்களுக்கு இது செய்வது பிரமாதமில்லை. ஆனுல் இதற்கும் தூக்கி நிறுத்த மற்றவர்களின் சகாயம் வேண்டியிருக்கிறது. அதற்குப் பதில் அந்த நபரையே தூக்கி நிறுத்தச் சொல்லி, அவர் மேலேயே கால்களைப் போட்டுத் தாங்கச் சொல்லி நிற்கலாம். இப்படி எல்லோராலும் செய்ய முடியும். இம்மாதிரி பலகைகளினுலெல்லாம் நோயாளிகளுக்கும், மிக மிக பலஹீனமானவர்களுக்கும், ஒரு காரியமும் செய்ய முடியாது. எழுந்திருக்கவும் சக்தியில்லை என்பவர்களுக்குத்தான் உபயோகம். அதிக கனமானவர்களும் இதை உபயோகிக்கலாம். அவரவர்களுக்குத் தகுந்தாற்போல் உயரம், அகலம் செய்து கொள்ளலாம்.

சிறுவர்களும், மிக வயதானவர்களும் மற்றவர் சகாயத்தில் பிடித்துக் கொண்டோ அல்லது பலகையின் உதவியினுலோ செய்யலாம். சிறு குழந்தைகளை நாமே உட்கார்ந்து நமது இடது கால் மடித்துக் குழந்தையின் முதுகுக்கு முட்டுக் கொடுத்து, நமது வலது காலை அகல மடித்துத் தலைக்கு முட்டுக் கொடுத்து குழந்தையின் கால்களை நமது கைகளால் சர்வாங்காசன நிலைக்குத் தாங்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் முதுகு சரியாக நேராக நிமிர்ந்து இருக்க வேண்டு மென்பதில்லை. நாளுக்கு நாள் நிமிர்த்திக் கொள்ளலாம்.

இந்த ஆசன நிலைகளைச் செய்பவர்கள் சில விதிகளைக் கட்டாயம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வாய் மூடியிருக்க வேண்டும். மூக்கின் வழியாகத்தான் மூச்சு வாங்கவும் விடவும் வேண்டும். அதிகம் பேசக் கூடாது. அவசியமானுல் ஒரிரு வார்த்தைகளைப் பேசலாம். அநேகமாய் உமிழ்நீர் ஊறுது. அப்படி ஊறினுலும் சர்வாங்காசனம் செய்யும்போது விழுங்கக் கூடாது. வாயில் அடக்கி வைத்திருந்து சர்வாங்காசனத்தைக் கலைத்த பின் துப்ப வேண்டும். அல்லது விழுங்கலாம். தும்மல் இருமல் வரும்போல் இருந்தால் இறங்கி விட வேண்டும். சர்வாங்காசனத்தில் இருந்து தும்மவோ, இருமவோ கூடாது. ஜுரத்துடனும் தலைவலியுடனும் ஆசனம் செய்யக் கூடாது.

இப்பொழுது சொன்ன மாதிரிகளை யெல்லாம் எல்லோரும் செய்ய வேண்டுமென்பதில்லை. சரியானபடி செய்ய வராதவர்களுக்காகப் பல உபாயங்கள் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. அவரவர்களுக்கு எது சௌகரியமோ அதை முதலில் பழகலாம். ஆனுல் அம்மாதிரியே எப்பொழுதும் செய்யாமல் சரியான நிலைமைக்கு வர முயற்சி செய்து வரவேண்டும்.

கர்ப்ப ஸ்திரீகள் செய்யக் கூடாது. ஏற்கெனவே செய்து வரும் சகோதரிகள் கருப்பம் கொண்டால், பழகினவர்கள் ஆனதினுல் மூன்று மாதம் வரை பத்து நிமிஷத்துக்கு மேல் போகாமல் செய்யலாம். பிறகு கூடாது. கர்ப்பம் கொண்டவர்கள் புதிதாய் எந்த ஆசனமும் பழகக்கூடாது. (தொடரும்)

அஜந்தாவின் புராதன அழகு



அஜந்தா தோன்றியநாள் முதலாக இந்தியக் கலைஞன் மிகவும் அழகானதும், கலைஅம்சம்பொருந்தியதும், பகட்டானதுமான ஆடைகள் நெசவு செய்து இருக்கிறான். அவைகள் இந்தியப் பெண்மணிகளை தொன்றுதொட்டு அலங்கரித்து வந்து இருக்கின்றன.

இங்கே வரைந்து இருக்கும் பெண்மணியின் சித்திரம் அஜந்தா சித்திரங்களை பின்பற்றி வரையப்பட்டிருக்கிறது. இவள் கி.பி.6ம் நூற்றாண்டில் வசித்தபெண். அவள் அணிந்து இருக்கும் ஆடை நெசவின் அழகையும், துணியின் நாகரீகத்தையும் வெளியாக்குகிறது.

கடாவ் மில் தங்களுடைய பிரின்டெட் வாயில்களை இன்றைய இந்திய பெண்மணிகளுக்கு அளிக்கும் போது இந்தியக் கலைஞனின் சிறந்த கைத்திறமையைப் பின்பற்றி அதே கவர்ச்சிகரமான அமைப்பையும் வர்ண அழகையும் வெளியிட முயற்சி செய்கிறது.

இன்றும் கடாவ் அழகிய வாயில்களில் பிரதிபலிக்கிறது.

கடாவ் வாயில்கள்

தி கடாவ் மில்ஸ், பைகுலா, பம்பாய், 27, ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்டு பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜி ஜேதா மார்கட், கோவிந்த் லேன், - பம்பாய் — 2.

SISTA'S-KM(S)-AMIL.



பத்மா: மாமி, நான் வீட்டுக்குப் போக வேண்டும். அவர் வருகிற நேரமாயுடுத்து. நான் வீட்டிலிருக்கும் பொழுதே எள்ளும் கொள்ளும் வெடிக்கும். கதவு பூட்டியிருந்தால் பின் கேட்கவா வேண்டும். வந்ததும் ஈஸிச்சேரில் 'அப்பாடா' என்று உட்கார்ந்துவிடுவார். அவ்வளவு களைப்பு.

ஸீதா: இப்படித்தாண்டி உங்க மாமாவும் செய்துகொண்டிருந்தார்.

பத்மா: மாமாவுமா உங்களிடம் கோபித்துக்கொள்வார்?

ஸீதா: இப்போ இல்லையடி. அதெல்லாம் ரொம்ப நாள் முந்தி. இப்பொழுது என்னவென்றால் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு கப் நல்ல 'டீ' சாப்பிட்டுவிட்டு என்னையும் அழைத்துக் கொண்டு காற்று வாங்க கிளம்பிவிடுவார்.

பத்மா: அவருக்கு ஆபீஸில் சுலபமான வேலைபோலிருக்கு.

ஸீதா: அப்படியில்லையடி. அவரே சொல்கிறாரே, அவருக்கு ஒரு கப் நல்ல 'டீ' சாப்பிட்டுவிட்டால் களைப்பு நீங்கி சுறுசுறுப்பு வந்துவிடுகிறதாம். நீயும்தான் உன் அகத்துக்காரருக்கு நல்லதா 'டீ' கொடுத்துப்பாரேன்.


'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும் சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசியபானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.

CTB 37


'ஸெண்ட்ரல் டீ போர்டா'ரால் வெளியிடப்பட்டது.

நேர்த்தியான அமைப்பு - அழகிய தோற்றம்

வாடிக்கைக்காரர்களின் விநியோகத்திற்கென்றே உலகப் பிரசித்தி பெற்ற கடிகாரங்களை தருவித்துள்ளோம். யாவும் ஸ்விஸ் தயாரிப்புகள். சரியான நேரத்தை அறிவிக்க உத்தரவாதம் கொண்டவை. 17 ஜுவல் கொண்டவை 5 வருஷத்திற்கும், 15 ஜுவல் 3 வருஷமும், 7 ஜுவல் 2 வருஷமும், மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாத முள்ளவை. ஒரிஜினல் பிளாஸ்டிக் வாட்ச் கேஸ், ஸ்ட்ராப்புடன் ஒரு கியாரண்டி சர்ட்டிபிகேட்டும் ஒவ்வொரு கடிகாரத்துடன் அளிக்கப்படும். பாக்கிங் தபால் செலவு, விற்பனை வரி இலவசமாக இன்ஷ்யூர் வி. பி. யில் கடிகாரங்கள் அனுப்பப்படும். 1951 மே 31-ம் தேதி வரை தையலற்ற ஒரு அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அளிக்கப்படும்.




கேட்லாக் நெ.	கர்வேக்ஸ் சைஸ் 7½			விலை
410	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	48 0
508	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
605	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
606	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
705	ரோல்டு கோல்டு ஸ்டீல் பேக், ஆப்டிக் க்ளாஸ்	17	..	84 0




சிறிய ரவுண்டு சைஸ் 8½

308	ரோல்டு கோல்டு கேஸ் ஜுவல்களுடன்			36 0
406	ரோல்டு கோல்டு கேஸ்	5	..	48 0
504	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
601	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
602	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0




வாட்டர் ப்ரூப் சென்டர் செகண்டு
ரேடியம் டயல் சைஸ் 10½

609	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்ஸ்	72 0
610	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
701	க்ரோம் ஸ்டீல்பேக் ஆல் ப்ரூப்	17	..	84 0
1002	20 மைக்ரோன் கோல்டு கேஸ் ஆல் ப்ரூப்	17	..	120 0
702	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8½) சைஸ் ஆல் ப்ரூப்	15	..	84 0
1003	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8½) சைஸ் ஆல் ப்ரூப்	17	..	120 0




கேட்லாக் நெ.	டன்னோ சைஸ் 6½			விலை
412	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	48 0
510	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
607	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
608	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
706	ரோ. கோ. ஸ்டீல்பேக் ஆப்டிக் க்ளாஸ்	17	..	84 0



லேடீஸ் சைஸ் 5½

512	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	60 0
611	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
707	ரோ. கோ. ஸ்டீல்பேக், ஆப்டிக் க்ளாஸ் & ஸில்க் கயிறுடன்	15	..	84 0
1005	20 மைக்ரோன் கோல்டு கேஸ் கெம்பு நடு செகண்டு முள்ளுடன் & ஸில்க் கயிறுடன்	17	..	120 0
1006	18 காரட் கோல்டு கேஸ்	15	..	120 0




சென்டர் செகண்டு சைஸ் 9½

309	க்ரோம் கேஸ் ஜுவல்களுடன்			36 0
404	ரோல்டு கோல்டு கேஸ்	5	..	48 0
502	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
603	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
604	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
1004	20 மைக்ரோன் கோல்டு	17	..	120 0

டைம்பீஸ் & பாக்கெட் கடிகாரங்கள்

302	இங்கிலீஷ் அலாரம் டேபிள் கடிகாரம் பெரிய சைஸ், ஜெனட் அலாரம்	36 0
201	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம் க்ரோம் கேஸ் சாதாரண டயல்	24 0
301	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம், ரோ. கோ. கேஸ் ரேடியம் டயல்	36 0

SWISS WATCH CO., P. B. No. 3552, BOMBAY - 4




இன்றைய பைசைகிள்களில் ஹெர்குலஸ் தான் சிறந்தது என்பது எவ்விதம்



சைகிள் உற்பத்தியில் தொழில் நுட்பம் வாய்ந்தவர்களும் இஞ்ஜினீயர்களும் உங்கள் ஹெர்குலஸ் சைகிளுக்கு மிகவும் உயர்ரகப் பொருள்களையே உபயோகிக்கின்றனர். உற்பத்தியின் போது ஒரு சிறு பாகம்கூட பலமுறை பரிசோதிக்கப்பட்டு ஒவ்வொரு ஹெர்குலஸ் சைகிளும் இறுதியில் தனித்தனியாக மேற்பார்வை யிடப்பட்டே விற்பனைக்கு அனுப்பப் படுகின்றது.

ஹெர்குலஸ் இஞ்ஜினியர்கள் சைகிள் பாகங்களைப் பரிசோதிக்கிறார்கள்



Hercules

ஹெர்குலஸ்

THE HERCULES CYCLE & MOTOR COMPANY LTD.
BIRMINGHAM ENGLAND


இன்றைய சைகிள்களில் மிகவும் சிறந்தது

எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்

EAS/A2


DX 367TM

கோனார்க்காவில் ஆதித்தன் கோவில்



பூரிக்கு வடக்கே, கடற்கரையோரத்தில், 700 ஆண்டுகளாக இருந்து வருகிறது பழம் பெருமை வாய்ந்த கோனார்க்கா ஆலயம். பண்டைக்காலத்தில் ஒருசமயம் சூரியதேவன் தனது தங்கத் தேரோடு கடலிலிருந்து எழும்பியதை இந்த இடத்திலே கண்டதாகக் கதையொன்று சொல்லப்படுகிறது. ஆதித்தன் நிழல் படிந்த இடத்திலே, இருபத்திநான்கு சக்கரங்களுடன், ஏழு குதிரைகளோடும் கூடிய சூரியதேவன் தேர்வடிவத்தில் ஓர் ஆலயத்தை நிர்மாணிக்க முயற்சி செய்தனர். அந்தக் கோவில் இன்று பாழ்பட்டுக்கிடந்தபோதிலும், கல்லில் கண்ட காவியமாக இன்றளவும் பாரத நாட்டின் சிறந்த சிற்பச் செல்வங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. மோட்டார் கார் மூலம் இந்த க்ஷேத்திரத்திற்குச் செல்ல முடியும் என்று ஜான் பாயிட் டன்லப் செய்து காட்டினார். பாரம், ரஸ்தா, சீதோஷ்ணம் ஆகியவற்றின் நிலவரங்களுக்குத் தக்கவாறு சௌகரியமாகவும் பத்திரமாகவும் செல்வதற்கு உகந்தவை அவரது பெயர் கொண்ட டயர்தான்.


டன்லப்



பூரிக்கு வெளியே, புவனேஸ்வருக்குச் செல்லும் ரஸ்தா பிப்லி என்னுமிடத்தில் கோனார்க்காவை நோக்கிப் பிரிந்து செல்லுகிறது. இந்தக்கிளை ரஸ்தாவிலிருந்து கோனார்க்கா 29 மைல் தூரத்தில் இருக்கிறது. டிஸம்பர் முதல் ஜூன் வரையில் தான் இந்த ரஸ்தா மோட்டார் பிரயாணத்திற்கு ஏற்றதாயிருக்கும். கோவிலுக்கு அருகே ஒரு இன்ஸ்பெக்ஷன் பங்களா இருக்கிறது; ஆனால் சிற்றுண்டிசாலைகள் ஏதும் கிடையாது. பெட்ரோல் பூரியில் போட்டுக்கொள்ளலாம்,



* 'மோட்டார் பிரயாண சுகங்கள்'
என்னும் தொடரில் முதலாவது



ஷாலிமார் தயாரிப்புகளை ஆர்டர் செய்யும்போது எந்த வேலைக்காக என்பதை தெரிவிக்கவும்.
எண்ணெய் சேர்ந்த
டிஸ்டெம்பர்
தண்ணீரால்
அழிக்கமுடியாதது
ட்யூராடால் 46 அழகிய வர்ண வரிசைகளில் கிடைக்கும். உட்புற வெளிப்புற சுவர்களுக்குப் பூச இதைவிடச் சிறந்த கழுவி விடக்கூடிய எண்ணெய் சேர்ந்த டிஸ்டெம்பர் கிடையாது. ட்யூராடால் அழியாது. தண்ணீராலும் அழிக்க முடியாது.
அடித்தாற் போல் சொல்லுங்கள்
ஷாலிமார்
ட்யூராடால்
எண்ணெய் சேர்ந்த கழுவி விடக்கூடிய டிஸ்டெம்பர்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,
Post Box 136, Madras 1. Importers & Distributors for Ceylon:
Lewis Brown & Co., Ltd., Post Box 85, Colombo

அதி அற்புத ரகங்கள்!

புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை

NO. 81  Size 7½"

5 ஜுவல்	க்ரோம்	30/-	ரோல்டுகோல்டு	33/-
7 ,,	க்ரோம்	35/-	உயர் ரகம்	38/-
15 ,,	க்ரோம்	44/-	ரோல்டுகோல்டு	48/-

NO. 82  Size 7½"

5 ஜுவல்	க்ரோம்	28/-	ரோல்டுகோல்டு	33/-
7 ,,	க்ரோம்	33/-	உயர் ரகம்	35/-
15 ,,	க்ரோம்	42/-	ரோல்டுகோல்டு	45/-

NO. 83  Size 12"

முழுவதும் ஜுவல்	19/-	உயர் ரகம்	21/-
ரேடியத்துடன்	21/-	செண். செகண்டு	23/-
ஸ்பெஷல் உயர்ந்த		ரக மெஷின்	27/-

NO. 84  Size 8½"

5 ஜுவல்	க்ரோம்	28/-	ரோல்டு கோல்டு	32/-
7	க்ரோம்	32/-	ரோல்டு கோல்டு	36/-
15 ,,	க்ரோம்	48/-	ரோல்டு கோல்டு	58/-

NO. 85  Size 6½"

5 ஜுவல்	க்ரோம்	22/-	உயர் ரகம்	25/-
5 ,,	ரோல்டு கோல்டு	30/-	உயர் ரகம்	33/-
15 ,,	க்ரோம்	45/-	ரோல்டு கோல்டு	55/-
டைம் பீஸ்		20/-	உயர் ரகம்	25/-
பாக்கெட் வாச்		12/-	உயர் ரகம்	15/-

தபால் செலவு பிரத்தியேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபால் செலவு இலவசம்


PIONEER WATCH Co.
POST BOX NO. 11428 CALCUTTA



'கோலினாஸ்' புன்னகையில் வசீகரம் இருக்கிறது!

நுரை தான் இந்த விந்தியாசத்திற்குக் காரணம்!

அதிக செக்கனமான தக்கபடி எளிமையில் அரைப்பங்குதை அளவே போதுமானது!



சரமற்ற பிரஷில் உபயோகிப்பதே உத்தமம்


இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:—
ஜியாப்ரேமானர்ஸ் & கோ. லிட்., பம்பாய் 1
கிளைகள்:- கல்கத்தா - மதராஸ் - டில்லி.

யாவர்க்கும் ஓர் நல்ல வெகுமதி !
"பாஷைகளின் ஆசான்"
48 மணி நேரத்தில் 14 பாஷைகள்

14 பாஷைகளின் ஆசான் என்னும் எங்கள் புத்தகம் ஒன்றின் உதவியால் ஹிந்தி, ஆங்கிலம் குஜராத்தி, பர்மீய பாஷை, சீன பாஷை, தமிழ் முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் எழுதவும், படிக்கவும், பேசவும் கற்றுக்கொள்ளுங்கள். வி. பி. பி. யில் அனுப்ப இன்றே எழுதுங்கள். பத்து வருஷ இடைவிடா உழைப்பின் மூலம் சாதிக்கப்பட்ட மாபெரும் சாதனை இது. ஒன்றின் விலை: ரூ. 4. தபால் செலவு பாக்கிங் அணா 12 தனி. கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

மோஹினி புல்லாங்குழல் (பான்ஸ்ரீ)

மெல்நாட்டுப் பித்தளைத் தகட்டில் செய்த குழல். மிகவும் பளபளப்பான தோற்றமுடையது. இனிமையான மெட்டுகளை இசைக்கக் கூடியது. திருப்திகரமான உழைப்பிற்கு உத்திரவாதம். ஒன்றின் விலை ரூ. 4-8-0; பாக்கிங், தபால் செலவு ரூ. 1-8-0 தனி. பான்ஸ்ரீ கைட்: விலை ரூ 1-8-0; தபால் செலவு அணா 8 தனி. கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.



தற்போது கிடைக்கிறது
அமெரிக்கன் மாடல்
ரோல் பிலிம்
பாக்ஸ்

காமிரா

திருஷ்டி உபகரணத்துடன் உயர்ந்த லென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலையில் மலிவான மேன்மையான காமிரா. புதிதாகக் கற்றுக் கொள்பவர்களும் எளிதாக உபயோகிக்கலாம். பிலிம் நெ. 120-ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் $2\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$ சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்திரவாதம். முழு விவரங்கள் அடங்கிய குறிப்புகளுடன் விலை ரூ. 10-8-0 பாக்கிங் தபால் செலவு ரூ. 1-8-0. தனி. தோல் கேஸ் ரூ. 3/- சரக்குகள் சொல்பமே உள்ளதால் உடனேயே தேவைக்கு எழுதவும் கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்

Apply to: BENGAL TRADERS (108 K) P. O. 21. ALIGARH. U. P.

ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?

உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல் குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — எரிச்சல் — பசைச் சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உப்பிசமான வயிறு — இடைவிடா ஜுரம் — சீர் இளைப்பு.



ஜம்மியின்

லிவர்க்யூர்

ஈரல், குலை நோய்களுக்கும் அவைகள் மூலமாகும் தடுப்பதற்கும் உதவுகிறது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

[illegible]

ஜம்மி வெங்கடரமணய்யர் & சன்ஸ்

[illegible]

[illegible]



7 O'CLOCK
SLOTTED
BLADE
7 O'CLOCK
SLOTTED BLADE
7 o'clock
செவன் ஓ'கிளாக் பிளேடுகள்

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392

"என் வதனத்தை லக்ஸ் டாய்லட் சோப்பினல் அழகுடையதாக வைத்துக் கொள்கிறேன்" என்று சொல்கிருர்

ராஜகுமாரி



சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 264-172 TM